# ஸ்ரீ ராமாநுஜன் 285

சென்னை ஸத்க்ரந்த ப்ரகாசன ஸபா மூலமாக மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர்: ஸ்ரீமாந். P. B. அண்ணங்கராசாரியர்.

| ஸம்புடம் 24 | பரிதாவி௵ ஆனி௴ 15—7—72ல் வெளியிடப்பட்டது. | ஸஞ்சிகை 9 |
|---|---|---|


## *  அரியபெரிய விருந்தளிப்பு  *

(ஸ்ரீலோகாசார்ய ஸித்தாந்தஸாரம்)

நம்முடைய பூருவாசாரியர்கள் பரமக்ருபைகொண்டு உபயபாஷைகளிலும் உயர்ந்த நூல்கள் பலவற்றை அருளிச் செய்திருந்தாலும் அவை ஸதாசார்ய ஸந்நிதானத்தில் பலகாலமிருந்து காலக்ஷேபமுறையில் கேட்டறிய வேண்டியவையாதலால் அதற்குப்போதுமான யோக்யதையும் அவகாசமுமில்லாதவர்கள் "நம்முடைய ஸித்தாந்தத்தின் ஸாரத்தை எளிதாகவும் தெளிதாகவும் தெரிவிக்கக்கூடிய சிறுநூல்களை உதவவேணும்" என்று நமக்குப் பலகால் எழுதுவதுண்டு. எம்பெருமானார் ஸித்தாந்தத்தின் ஸாரப்பொருள்களை [ஸ்ரீராமாநுஜன் 282ல்] பகவத்ராமாநுஜ ஸித்தாந்தஸாரம் என்கிற மகுடத்தின் கீழும், (ஸ்ரீராமாநுஜன் 283ல்) எம்பெருமானாரெண்பத்திரண்டு என்கிற மகுடத்தின் கீழும் வெளியிட்டது மட்டுமன்றிக்கே மற்றும் பலநூல்களினாலும் தெரிவித்திருக்கிறோம். நம் ஆசாரியர்கள் ரஹஸ்யக்ரந்தங்கள் மூலமாகவும் பல தத்துவப் பொருள்களை வெளியிட்டருளியிருப்பதால் அவற்றைத் தெரிந்துகொள்வதே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மிக முக்கியமானது. அப்படிப்பட்ட ரஹஸ்யார்த்தங்களை உள்ளபடி புணர்த்தின ஆசாரியர்களில் தலைவர் பிள்ளைலோகாசாரியர். அவர் அருளிச்செய்த அஷ்டாதசரஹஸ்யங்களுள் மிகமுக்கியமான மூன்று ரஹஸ்யங்களுக்கும் ஆசார்ய ஹ்ருதயமென்கிற ரஹஸ்யத்திற்கும் விசதவாக்சிகாமணிகளான மணவாளமாமுனிகள் தேனும்பாலு

மமுதுமாக வியாக்கியானமிட்டருளுகையாலே ஸந்தேப விபர்யயங்களுக்கு இடமில்லாமலும், ஆத்மஸ்துதி பரநிந்தை முதலான அவத்யங்களுக்கு இடமற்றும் விளங்குகின்ற அந்த (மாமுனிகளின்) திவ்ய ஸ்ரீஸூக்திகளைக் கொண்டே ஸ்ரீவைஷ்ணவர்களான நாம் அந்தரங்க ரஹஸ்யார்த்த விசேஷங்களையறிந்து உஜ்ஜீவிக்கக் கடமைபட்டிருக்கிறோம். ஸ்ரீலோகாசார்ய ஸித்தாந்தஸாரமென்று மகுடமிட்டு அடியேனெழுதுமிச்சிறுநூலில் ஆளவந்தார் எம்பெருமானுர் ஆழ்வான் பட்டர் முதலான ஆசாரியர்களின் திவ்யஸூக்திஸௌரபமும் ஸம்ருத்தமாயிருக்கும். ஸகல பூர்வாசார்யஸித்தாந்தஸாரமென்றே இதனைக் கொள்ளலாம்.

இதில் நாம் ப்ரமாணோபபத்திகளைக்கொண்டு விளக்க நினைத்த விஷயங்கள் இருபது. அவற்றில், கீழ்க்கண்ட பதினொரு விஷயங்கள் மட்டும் இந்த முதற் பகுதியில் வெளிவருகின்றன. அவையாவன;

1. ஸ்ரீலோகாசார்ய ஸித்தாந்தத்தின் அடிப்படை
2. ஸக்ருத்ப்ரணமத்தைப்பற்றின விளக்கம்
3. பகவத் க்ருபையின் நிர்ஹேதுகத்வ நிருபணம்
4. ப்ரபத்த்யநுபாயத்வ விவரணம்
5. சேதநலாபம் ஈச்வரனுக்குப் பேறென்பது பற்றின விளக்கம்
6. பரகதஸ்வீகாரத்தின் ப்ரசஸ்தி
7. ப்ரபத்தியின் அபராத கோடி ப்ரவேசம்
8. உபாயாந்தரங்களின் ஸ்வரூப விரோதித்வ நிருபணம்
(இடையில் பிள்ளான் ஸூக்தியை தேசிகன் மறுத்தமை காட்டுதல்)
9. விஹிதவிஷய நிவ்ருத்தி தன்னேற்றம்
10. கர்மாநுஷ்டானத்தைப் பற்றின தெளிவு
11. எம்பெருமானுடைய வியாப்தியின் விளக்கம்

ஆக இந்தப் பதினொரு விஷயங்களில் இன்னும் விவரித்து விளக்கவேண்டியவை பல இருப்பினும் ஸாரக்ராஹிகளுக்கு இவ்வளவு போதுமென்று நினைக்கிறோம். இவற்றை நமது வைதிகமநோஹரா பத்ரிகையில் ஸம்ஸ்க்ருத பாஷையிலும், ஆந்த்ர ஸ்ரீராமாநுஜ பத்ரிகாவில் தெலுங்கு பாஷையிலும் பிரசுரித்திருக்கிறோம்.

அடுத்த பகுதியில் வெளிவரப்போகும் ஒன்பது விஷயங்களாவன :—


12. வாத்ஸல்யார்த்த விவரணம்
13. தயாகுணஸ்வரூப நிருபணம்
14. பிராட்டியைப்பற்றின விளக்கங்கள் (உபாயத்வ ஜகத்காரணத்வ விபுத்வங்களைப் பற்றி)
15. ஜாதியின் விநாசத்தைப்பற்றி
16. கைவல்ய மோக்ஷவிமர்சம்
17. ஏகாதசீச்ராத்த நிர்ணயம்
18. விதவாவபன விசாரம்
19. மந்த்ரஜப விஷயம்
20. அத்ருஷ்டார்த்த நடவடிக்கை

P. B. அண்ணங்கராசாரியர்

—:✶:—

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித் தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

—★—

ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதி. மஹாமஹோபாத்யாய.

ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசார்ய ஸ்வாமி அருளிச்செய்த

# ஸ்ரீ லோகாசார்ய ஸித்தாந்த ஸாரம்

—சுலோகம்—

லோகாசார்ய வரோபயந்த்ருயமிராடாசார்ய வர்யாத்ருதா:
அர்த்தா ஏவ சடாரிலக்ஷ்மணமுநி ஸ்ரீகூரநாதாதிபி:,
ஸ்வக்ரந்தேஷு ஸமாத்ருதா இதி யதா ப்ராமாணிகா: பண்டிதா:
ஜாநீயுர் விசதம், ததா க்ருதிரியம் ஸந்தர்சயிஷ்யத்யஹோ.

*(இதன் கருத்து.)* பிள்ளைலோகாசாரியரும் மணவாளமாமுனிகளும் தமது திவ்யக்ரந்தங்களில் வெளியிட்டருளின அர்த்த விசேஷங்களே ஆழ்வாரெம்பெருமானார் ஆழ்வான் முதலானாருடைய திவ்ய ஸூக்திகளிலும் திகழ்வன—என்னுமிடத்தை ப்ராமாணிக பண்டிதர்கள் நன்குணருமாறு இந்த நூல் விளக்கவல்லது என்கை.

... ... ... ... ... ... ...

1. ஸ்ரீலோகாசார்ய ஸ்ரீவரவரமுநீந்த்ர ஸித்தாந்தத்தின் அடிப்படையைப்பற்றின விளக்கம்.

விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு ஒரு திறவுகோலும், ஸ்ரீலோகாசார்ய ஸித்தாந்தத்திற்கு ஒரு திறவுகோலும் முக்கியமாகத் தெரிந்துகொள்ளத் தக்கவை. சரீராத்மபாவம் என்பது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத் திறவுகோல். 'ஸர்வேச்வரன் ஸகல சேதநா சேதநங்களையும் சரீரமாகக் கொண்டவன்' என்கிற உண்மையைச் செவ்வனே தெரிந்துகொள்ளும் வேதாந்திக்கு ஸகல உபநிஷத் வாக்யங்களும் எளிதாக அந்வயித்துவிடும், ஒன்றிலும் ஒரு அவத்யமும் தோன்ற மாட்டாது—என்பது சீரியதோர் கொள்கை. இதை நன்கு தெரிந்துகொண்ட

வித்வான்முன்னிலையில் எந்த மதாந்தரஸ்தனும் பங்கமடைந்தே தீர்வன் என்கிறார் ஸ்ரீ வேதாந்ததேசிகன் *யத்யேதம் யதிஸார்வபௌமகதிதம்* இத்யாதி ச்லோகத்தினால்.

"யத்யேதம் யதிஸார்வபௌமகதிதம் வித்யாத் அவித்யாதம:-
ப்ரத்யூஷம் ப்ரதிதந்த்ரம் அந்திமயுகே கச்சித் விபச்சித்தம:,
தத்ரைகத்ர ஜடித்யுபைதி விலயம் தத்தந்மதஸ்தாபநா-
ஹேவாகப்ரதமாந ஹைநுககதாகஸ்யோல கோலாஹல:."

என்கிற ரஹஸ்யத்ரய ஸாரஸ்தமான அந்த ச்லோகரத்நம விசிஷ்டாத்வைதிகளுக்கு நம்முடைய விரிவான உரையுடன் நித்யாநுந்தேயமாகக் கடவது.

2. அதுபோல, ப்ரக்ருதத்தில் "எந்த விதத்திலும் எம்பெருமானுடைய பெருமையிலேயே முழுநோக்கு" என்பதே தென்னாசார்ய ஸித்தாந்தத்தின் ஸாரம் என்று தெரிந்து கொள்ளவேண்டும். இதுவே இந்த ஸம்ப்ரதாயத்திற்குத் திறவு கோல். இதர ஸம்ப்ரதாயங்களில் சேதநனுக்கே ஆதிக்யம் தெரியவரும். இந்த ஸம்ப்ரதாயத்தில் அப்படியன்றிக்கே ஸர்வேச்வரனுக்கே ஸர்வாத்மநா ஆதிக்யம் தெரியவரும். இதனை நன்கு தெளிவிக்கின்றேன். இந்த ஸம்ப்ரதாயஸ்தர்கள் ஒரு தடவை நமஸ்காரம் செய்வதென்றும் பிறர் பலதடவை நமஸ்காரம் செய்வதென்றும் காண்கின்றது. பகவானை நமஸ்கரிப்பதென்பது மிகச் சிறந்ததொரு காரியமே. இதனை ஒருதடவைக்குப் பலதடவையாகச் செய்தால் நல்லதல்லவென்று யாரேனும் நினைக்க முடியுமோ? நமஸ்கரிப்பவனுடைய கரணக்ராமமும் க்ருதார்த்தமாய். நமஸ்கரிக்கப்படுபவனான எம்பெருமானுடைய திருவுள்ளமும் ஸுப்ரஸந்நமாவதற்கு உறுப்பான காரியமன்றோ இது. அப்படியிருக்க, ஒருதடவைதான் நமஸ்காரம் செய்ய வேணுமென்று ஒரு விரதமாகக் கொண்டிருக்கவேண்டிய அவசியம் என்ன? என்று ஒவ்வொரு விவேகிக்கும் இந்த சங்கை தோன்றும். அவசியம் தோன்றவேணும்.

3. இங்குத் தென்னாசார்யர்களின் திருவுள்ளம் கேண்மின். நம்மைப் பார்த்தால் நாம் எததனை தடவை நமஸ்கரித்தாலும் போராது. எம்பெருமானைப் பார்த்தால் ஒருதடவை நமஸ்கரிப்பதும் மிகையாகும். அப்பெருமான் கீதை முதலியவற்றில் தன்னை அல்ப ஸந்துஷ்டனாகச் சொல்லிக்கொள்ளுகிறான். *பத்ரம் புஷ்பம் பலம் தோயம்* இத்யாதிகள் அவனுடைய அமுதமொழிகளாகக் காண்கின்றன. தேவதாந்தரங்கள் மிகவும் ச்ரமப்பட்டு ஆராதிக்கப்படவேண்டியவை யென்றும், எம்பெருமான் ஆராதனைக்கு மிக எளியவன் என்றும் ப்ரஸித்தம். ஆழ்வார்கள் அவனுடைய பெருமையைப் பேசுமிடத்து *தொழுது மாமலர் நீர்சுடர் தூபங் கொண்டு எழுதுமென்னுமிது மிகையாதலின்* என்றும், *தொழக்கருதுவதே துணிவது சூதே என்றும் இப் படிகளிலே அருளிச்செய்கிறார்கள்.

4. *பூயிஷ்டாம்தே நம உக்திம் விதேம* என்கிற உபநிஷத் வாக்யத்திற்கு "தே பூயிஷ்டாம் நம உக்திம் விதேம" என்று அந்வயம் காட்டி 'நம: என்று வாயினால் சொல்லுவதும் எம்பெருமான் திருவுள்ளத்தாலே மிகக் கனத்ததாகும்' என்று நம் பூருவர்கள் அர்த்தம் செய்தருளியிருக்கிறார்கள். பட்டர் *அஞ்ஜலிபரம் வஹதே* என்கிறார்.

நாம் ஒரு அஞ்சலி செய்துவிட்டாலும் அது அத்தலைக்குப் பெரிய சுமையாகத் தோன்றுமென்பதை நன்கு காட்டுகின்றார். ஆகவே ஸ்வாராதனை [ஆராதனைக்கு எளியனை] எம்பெருமான் முன்னிலையில் நாம் பலகால் விழுந்தெழுந்தால் அவன் திருவுள்ளம் என்னாகுமோ? 'நம்மையும் தேவதாந்தரங்களைப்போல நினைத்துவிட்டார்கள் போலும்!' என்று அவன் திருவுள்ளம் புண்படலாகுமோ என்னவோவென்று அஞ்சி, ''ஆராதனைக் கெளியன்'' என்கிற அவனுடைய பெருமைக்குக் குறைவு வாராதபடி நடந்து கொள்வோமென்றே தென்னாசாரியர்களால் நமஸ்காரத்தில் ஆவ்ருத்தி ஸஹிக்கப்படவில்லை.

5. இந்த ஸக்ருத் ப்ரணாம விஷயத்தில் சாஸ்த்ர ஸரணியில் தெரிவிக்க வேண்டிய விஷயங்கள் பலவுண்டு; அவை மேலே தெரிவிக்கப்பெறும். தென்னாசார்ய ஸம்பிரதாயம் முக்கியமாக எந்த அடிப்படையின்மீது நிற்கிறதென்பதை மூதலிக்கவே இவ்விஷயம் முந்துற எடுத்துக்காட்டப்படுகிறது. நாம் சேதநராகப் பிறந்திருக்கிற வாசிக்கு ஏதோ சைதந்ய கார்யமாக ஸ்வல்பம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்; இது கார்யகரமேயன்று, அவன் திருவுள்ளத்திரக்கமே கார்யகரம்; அது நம்முடைய ஆகிஞ்சந்யமும் அநந்யகதித்வமுமடியாக விளையக்கூடியது; ஆகிஞ்சந்யத்துக்கு எதிராக அதிக ப்ரவ்ருத்திகளைக் காட்டினோமாகில் நாம் ஏதோ உபாயாநுஷ்டாநம் செய்கிறோமாகத் திருவுள்ளம்பற்றி எம்பெருமான் கைவாங்கி நிற்க நேரும்; அப்படி அவன் உதாஸீநனாகைக்கு நாம் அவகாசம் கொடுக்கலாகாது.

6. நநு; உபாயாநுஷ்டானங்கள்செய்யும்படி அவனே சாஸ்த்ரங்களில் விதித்திருக்கும்போது அவற்றை யதேஷ்டமாக நாம் செய்தாலென்ன? செய்யவேண்டியதுதானே என்று பிறர் நினைக்கலாம். தென்னாசார்யர்கள் அங்ஙனம் நினைப்பவர்களல்லர். ✡நெறிகாட்டி நீக்குதியோ?✡ என்று நம்மாழ்வார் அருளிச்செய்தபடி, தன்னைவிட்டு நீக்குவதற்காக (நம்மை நன்கு சோதிப்பதற்காக) அவன் காட்டின வழிகளிலே நாம் கிடந்து துவளலாகாது; ✡காம்பறத் தலைசிரைத்து உன் கடைத்தலையிருந்து வாழுஞ் சோம்பரை யுகத்திபோலும் சூழ்புனலரங்கத்தானே✡ என்று தொண்டரடிப்பொடியாழ்வாரருளிச் செய்தபடி திண்ணிதான அத்யவஸாயங் கொண்டிருப்பதே உற்றது—என்கிற உறுதி தென்னாசார்யர்களின் கருவிலேயே ஊறிக்கிடப்பதாகும்.

7. நம்பிள்ளையினுடைய திவ்ய ஸூக்திகளிலே இரண்டொன்றை இங்கெடுத்துக்காட்டி இவ்விஷயத்தை நெஞ்சில் பதிய வைக்கின்றேன். திருவாய்மொழியில் ✡பத்துடையடியவர்க் கெளியவன் பிறர்களுக்கு அரிய வித்தகன்✡ என்ற விடத்து ஈட்டில்—''நம்முடையவர்கள் எம்பெருமானையே உபாயமாகப் பற்றிநிற்க, அல்லாதார் அசேதந க்ரியாகலாபங்களைப் பற்றுகிறப்போலேயிறே 'துர்போதனன் நிலை' என்றுள்ளது. இதனால் நம்முடையவர்கள்படியும் அல்லாதார்படியும் அறியத்தக்கது. மேலே அந்தப் பதிகத்திற்கு அடுத்த பதிகத்திலே (1-4-7) ✡என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு✡ என்றவிடத்து ஈட்டில்—''தேவரீர் க்ருபைக்குத் தண்ணீர்த் துரும்பாக ஏதேனும் ப்ரதக்ஷிண நமஸ்காராதிகள் பண்ணிற்றுண்டோவென்று நம்பிள்ளை யருளிச்செய்யும்படி'' என்றுள்ளது. இந்த ஸ்ரீஸூக்திபை

நன்கு விமர்சிக்கவேணும். எம்பெருமானிடத்தில் தூதுவிடுகிற ப்ரகரணம் இது; என்ன தப்பு செய்துவிட்டதாக உபேக்ஷித்திருக்கிறீரென்று கேளுங்கோளென்று இங்கே மூலமுள்ளது. "நாங்கள் ஏதேனும் ப்ரதக்ஷிண நமஸ்காராதிகள் செய்து விட்டதாக எண்ணி உபேக்ஷித்திருக்கிறீராவென்று கேளுங்கோள்" என்பதாக நம்பிள்ளை விவரணம் செய்தருளுகிறார். இதனால் ப்ரதக்ஷிண நமஸ்காராதிகள் செய்வது எம்பெருமானுடைய க்ருபைக்கு ப்ரதிபந்தகம் என்று ஸ்பஷ்டமாக விளங்குகின்றது. இப்படி யருளிச்செய்திருக்கிற நம்பிள்ளை பகவத் ஸந்நிதியில் ப்ரதக்ஷிண நமஸ்காராதிகள் செய்திருக்கமாட்டாரா? செய்திலர் என்றால் இதை யாரேனும் நம்பமுடியுமா? அது சாஸ்த்ரார்த்தந்தானாகுமா? எதற்காக இங்ஙனே நம்பிள்ளை யருளிச்செய்தார்? என்று விவேகிகள் விமர்சிக்கவேண்டுமன்றோ? விமர்சித்தாள், அதிகப்ரவ்ருத்தி அவத்யமென்றதாகத் தேறுமத்தனை.

8. சிறிய திருமடலில், "செங்குறிஞ்சித் தாரார நறுமாலைச் சாத்தற்குத் தான் பின்னும் நேராதனவொன்று நேர்ந்தாள்" என்றவிடத்துப் பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியான ஸ்ரீஸூக்தியையும் சேர்த்து முன்னேகாட்டிய நம்பிள்ளை ஸ்ரீஸூக்திக்கு அர்த்தம் செய்யுமளவில் தென்னாசார்யர்களின் திருவுள்ளம் நன்கு புலப்படும். உபாயகோடியில் எள்ளளவும் அந்வயியாமல் ஸ்வரூபத்தளவிலே நிற்கும்படி சில செய்வதே உற்றது; எதையேனும் அதிகப்படியாகச்செய்தால் அது உபாயகோடியிலே அந்வயித்து ஆகிஞ்சந்யத்தைக் குலைத்து எம்பெருமானுடைய திருவருளுக்கு இடையூறாக நிற்குங்கொல்! என்கிற அதிசங்கை இவர்களுக்கு உள்ள தென்னுமிடம் விளங்காநின்றது. எந்த விஷயத்திலும் சாஸ்த்ரங்கள் ஒரு வழியையே காட்டமாட்டா; பல வழிகளையும் காட்டி நிற்கும். ஒவ்வொரு அதிகாரிகள் ஒவ்வொரு வழியைப்பற்றி நிற்பது ஸஹஜம். ... ...

— தென்னாசார்ய ஸித்தாந்தத்தின் அடிப்படையைப் பற்றின விளக்கத்தின் நிகமனம் —

இந்நூலுக்கு முக்கியமாகத் தொடங்கின விஷயம் நிகமிக்கப்படுகிறது. எந்த விதத்திலும் சேதநப்ரவ்ருத்திக்கு ஏற்றம் ஏற்படவேணுமென்பது பிறருடைய கொள்கையின் ஸாரமென்றும், எம்பெருமானுடைய குணாதிசயம் விளங்கும் வழியில் ஊன்றியிருப்பதே தென்னாசார்யர் கொள்கையின் ஸாரமென்றும் உபபாதித்தோமானோம். ஸ்ரீமந் நிகமாந்த மஹா குருவின் ஸித்தாந்தமும் இதுவேயாகும். இதை அனைவருமறிய ஒரே விஷயங்காட்டி இந்த முன்னுரையை முடிக்கிறேன். "தேஷாம் ஸததயுக்தாநாம் பஜநாம் ப்ரீதிபூர்வகம், ததாமி புத்தியோகம் தம் யேந மாம் உபயாந்தி தே." என்கிற கீதாச்லோகத்திற்கு பாஷ்யமிட்ட சங்கராசாரியர் "ப்ரீதிபூர்வகம்" என்பதை பஜதாமென்பதோடே சேர்த்து உரை செய்தார். ஸ்வாமி எம்பெருமானாரோவென்னில், அங்ஙனன்றிக்கே ததாமியோடே சேர்த்து உரை செய்தருளினர். [ப்ரீதிபூர்வகம் ததஸி என்கிற யோஜனை நமது பாஷ்யகாரருடையது.] சங்கராசார்ய யோஜனையிற்காட்டில் இந்த யோஜனையில் என்ன விசேஷம்? என்பதை நாமறியவேண்டும். இதை அவ்விடத்து தாத்பர்ய சந்திரிகையில் விளக்குகின்ற வேதாந்த தேசிகன் பகவத் குணாதிசய ப்ரகாசனமே பரமப்ரயோஜன மென்றருளிச் செய்தார். இதுவே தென்னாசார்யர் கொள்கையின் ஸாரம். ... ... ... ... ... ...

## 2. ஸக்ருத்ப்ரணமத்தைப்பற்றின விளக்கம்.

9. கீழே விவரித்தபடி ஸத் ஸம்ப்ரதாயத்தில் ஒரு தடவை நமஸ்கரிப்ப தென்றுள்ளது. 'பலமுறை நமஸ்காரம் செய்வதனுல் ப்ரத்யவாய முண்டோ? நமஸ்காரம் என்பது நல்ல காரியமேயொழிய கெட்ட காரியமன்றே. பகவத் பாகவத விஷயங்களில் ஒரு தடவைக்குப் பல தடவையாக நமஸ்கரிப்பதனுல் ஸ்வரூபம் நிறம்பெறுமே யல்லது கெட்டுப்போய் விடாதே. ஆகவே ஒரு தடவையே நமஸ்கரிக்க வேணுமென்று ஒரு நிபந்தனை கொள்ளவேண்டுமோ? பல தடவை நமஸ்கரிக்கக் கூடாதென்று சாஸ்த்ரம் மறுக்குமோ? அப்படி சாஸ்த்ரம் மறுத் திருப்பதாகவும் தெரியவில்லையே. தேஹத்தில் சக்தியற்றவர்கள் ஒரு தடவையோ அரை தடவையோ நமஸ்கரிக்கட்டும்; சக்தியும் உத்ஸாஹமுமுள்ளவர்கள் பல முறை நமஸ்கரித்தால் அதைக் குற்றமாகக் கொள்ளும்படி ஒரு ஸம்ப்ரதாயம் இருக் கத்தகுமோ?' என்றிங்ஙனே சங்கைகள் தோன்றக் கூடியவையுள. இதில் நம் ஆசார்யர்களின் திருவுள்ளத்தை விளங்கவுரைக்கிறேம் கேண்மின். எந்த விஷயத் திலும் சாஸ்த்ரங்களின் போக்கு உச்சாவசமாயிருக்கும். ''மறைப்பாற் கடலைத் திரு நாவின் மத்தரத்தாற் கடைந்து'' என்னுமாபோலே பல நூற்கடல்களை நன்கு கடைந்து நுண்பொருள்களைக் கடைப்பிடித்துப் பரமாசார்யர்கள் காட்டியருளின அனுஷ்டானமே பரம சாஸ்த்ரம். ஸக்ருத் ப்ரணம விஷயத்தில் என்ன நுண் பொருள் காணலாகும்? என்னில்; கேண்மின். நமஸ்காரத்தின் ப்ரயோஜனம் என்ன? என்பதை முந்துற முன்னம் விமர்சிப்போம். *நந்த்ருந்தவ்யபாவோயம் ந ப்ரயோஜநபூர்வக:, நீசோச்சயோஸ் ஸ்வபாவோயம் நந்த்ருந்தவ்யதாத்மக:.* என்று அஹிர்ப்புத்ந்யஸம்ஹிதையிலுள்ள வசனத்தை தேசிகன் முதலானுர்களும் எடுத்துக் காட்டியுள்ளார்கள். பெரியாரைக் கண்டால் சிறியார், தங்களுடைய சிறுமைக்கும் எதிர்த்தலையின் பெருமைக்கும் ப்ரதர்சகமாக நமஸ்காரம் செய்ய வேணுமென்றது. வேறொரு ப்ரயோஜநமும் இதற்கில்லை யென்றும் சொல்லிற்று. ஒருகால் தொழுத மாத்திரத்தினுல் ஸ்வநிகர்ஷமும் பரோத்கர்ஷமும் ப்ரதர்சிதமா யிற்று. பலகால் தொழவேணு மென்கிற நிர்ப்பந்தத்திற்கு ப்ரஸக்தியில்லை.

10. சாஸ்த்ரங்களில், ஒற்றைக் கையால் நமஸ்கரிப்பது அபசாரம், ஒரு ப்ரதக்ஷிணம் பண்ணுகை அபசாரம் என்று சொல்லியிருப்பதுபோல ஒரு முறை நமஸ்கரிப்பது அபசாரம் என்று சொல்லப்படவில்லை. *ஏகேந பாணிநா யஸ் து ப்ரணமேத் புருஷோத்தமம், ந்யர்ய்யஸ் தஸ்ய கரச்சேத இதி வேதவிதோ விது.* என்றும், *ஏகஹஸ்தப்ரணமச் ச ஏகஞ்சாபி ப்ரதக்ஷிணம்* என்றும் இத்தகைய ப்ரமாணங்களையே ஸ்தோத்ர பாஷ்யாதிகளில் ஸ்ரீ தேசிகாதிகள் உதாஹரிக்கக் காண்கிறேம்.

11. ஸ்ரீ பரதாழ்வான் திருச்சித்திரகூடத்தேறச் சென்று பெருமாளுடைய பாதுகைகளைப் பெற்றுக்கொண்டு மீண்டுவரும் வழியில் பரத்வாஜாச்ரமத்திலே யிறங்கிப் பாதுகா ப்ராப்தியை விஜ்ஞாபித்துவிட்டு மஹர்ஷிபக்கல் விடைபெற்றுக் கொள்ளவேண்டி அவரை நமஸ்கரித்துப் ப்ரதக்ஷிணஞ் செய்து புறப்பட்டானென்

பதை ஸ்ரீ ராமாயணத்தில் அயோத்யா காண்டத்தில் நூற்றுப் பதின்மூன்றும் ஸர்க்கத்தில் 18, 19 ச்லோகங்களில் சொல்லும்போது, "ஆமந்த்ரயிதுமாரேபே சரணாவுபக்ருஹ்ய ச, தத: ப்ரதக்ஷிணம் க்ருத்வா பரத்வாஜம் புந:புந:" [பரதாழ்வான் பரத்வாஜரை நமஸ்கரித்துவிட்டுப் பலமுறை பிரதக்ஷிணஞ் செய்தான்] என்று சொல்லப்பட்டுள்ளது. அவ்விடத்து வியாக்கியானஞ் செய்த கோவிந்தராஜர் "நமஸ்காரம் ஒரு முறை செய்கிற ஸம்பிரதாயமும், ப்ரதக்ஷிணம் பல முறை செய்கிற ஸம்பிரதாயமும் இவ்விடத்தில் நன்கு வெளியிடப் பட்டதாயிற்று" என்று பொருள்பட ஸம்ஸ்க்ருத பாஷையில் எழுதியிருப்பதை அனைவரும் காண்கிறோம்.

12. எம்பெருமானார் ஸ்ரீ வைகுண்ட கத்யத்தில் "ப்ரணம்ய உத்தாயோத்தாய புந:புந: ப்ரணம்ய"* [தொழுது எழுந்தெழுந்து மீண்டும் மீண்டும் தொழுது] என்றருளிச் செய்திருக்கும் விஷயத்தில் தெளிவு பிறப்பிக்கிறோம். இங்கு "ப்ரணம்ய உத்தாயோத்தாய புந: புந: ப்ரணம்ய" என்றது ஓரிடத்திலேயே இருந்துகொண்டு பலமுறை நமஸ்கரிப்பதைச் சொல்லுவதன்று. அந்த வாக்கியத்திற்கு முன்னே "தூராதேவ" என்றருளிச் செய்திருப்பதனால், எம்பெருமானைக் கிட்டுமளவும் காலால் நடந்து செல்லாமல் தெண்டனிட்டுக்கொண்டே வழியைக் கடந்து ஸ்ரீமந் நாராயணனை அணுகுவதாகவே அங்குப் பொருள்படும். இக்காலத்தில் இந் நிலத்தில் அஸக்ருத் ப்ரணமகர்த்தாக்கள் செய்வது போன்ற செயல் அங்கு விவக்ஷிதமன்று. தெண்டன் ஸமர்ப்பித்துக்கொண்டே போய் வழியைக்கடந்து எம்பெருமானைக் கிட்டினபிறகு அங்கு ஒரே தடவை நமஸ்கரிப்பதென்னுமது அவ்விடத்திலேயே அடுத்தபடியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "யாசமாந: ப்ரணம்ய ஆத்மாநம் பகவதே நிவேதயேத்" என்று அந்த வாக்ய ஸமாப்தியுள்ளது காண்க. இங்ஙன்லாமல் ஓரிடத்திலேயே நின்றுகொண்டு பலமுறை தொழுவதைத்தான் "உத்தாயோத்தாய புந:புந: ப்ரணம்ய" என்கிற வாக்கியம் சொல்லுகிறதென்று கொண்டாலும் குறையொன்றுமில்லை, "ந சாஸ்த்ரம் நைவ ச க்ரம," என்கிற ரீதியிலே நூல்வரம்புக்கு அடங்காத அவ்விபூதியிலே நிகழுமது கொண்டு என்ன ஸாதிக்கலாகும்? இந் நிலத்தில் நம்பூருவாசார்யர்களின் அநுஷ்டானம் ஸக்ருத் ப்ரணமமே என்பதை அந்த எம்பெருமானாரே தாமே ஸ்பஷ்டமாகக் காட்டியுள்ளபடி பாரீர். அவ்வாசிரியர் திருவாராதனக்ரம மருளிச் செய்கிற நித்யக்ரந்தத்தில்—"ஆராதநாபிமுகோ பவேதி மூலமந்த்ரேண ப்ரார்த்ய மூலமந்த்ரேண தண்டவத் ப்ரணம்ய உத்தாய ஸ்வாகதம் நிவேத்ய யாவதாராதநஸமாப்தி ஸாந்நித்யயாசநம் குர்யாத்" என்றருளிச் செய்திருப்பது ப்ரஸித்தமிறே. இது கொண்டு ஸ்ரீ வைகுண்டகத்ய ஸ்ரீஸூக்தியின் பொருளை நாம் கீழே விவரித்தபடியே தெளிய ப்ராப்தம்.

13. ஸ்தோத்ர ரத்நத்தில் இருபத்தோராம் ச்லோகத்தில் 'நமோ நம: நமோ நம:' என்று பலகால் அருளிச் செய்திருப்பதை ஸமந்வயப் படுத்தத் திருவுள்ளம் பற்றிய தேசிகர் அவ்விடத்து ஸ்தோத்ர பாஷ்யத்தில், "ப்ரசம்ஸாயாம் ப்ரதிஜ்ஞாயாம் ப்ரலாபே தர்ஜநேபி ச, பயே ச விஜயே சைவ பௌந: புந்யம் அலங்க்ருதி:" என்கிற வொரு ச்லோகத்தையெடுத்துக் காட்டியுள்ளார். இந்த ச்லோகத்தின் பொருளை விவேகிகள் விமர்சிக்கவேண்டும். ஸ்தோத்ரம் செய்தல், ப்ரதிஜ்ஞை செய்தல்

அழுதல், வெருட்டுதல், அச்சந்தோற்றச் சொல்லுதல், வெற்றி தோற்றச்சொல்லு தல் முதலிய ஸந்தர்ப்பங்களில் ஒருசொல்லையே அடுத்தடுத்துச் சொல்வ தானது ஒரு வகையான அலங்காரமாகும் என்பது இந்த ச்லோகத்தின் பொருள். உலகத்தில் இதை நாம் நன்றாகக் காண்கிறோம். 'பாம்பு பாம்பு பாம்பு' என்று பல முறை சொன்னாலும் உள்ளது ஒரு பாம்பே யல்லது பல பாம்புகள் வந்துவிடமாட்டா. ¤பல்லாண்டு புல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூற்றாயிரம்¤ என்று நூற்றாயி ரந்தடவை சொன்னாலும் 'விஜயீபவ' என்று ஒருகால் சொல்வதற்கு என்ன அர்த்தமோ அந்த அர்த்தமேயன்றோ தேறுவது. அப்படியே, ¤நமோ நம:, தொழுது தொழுது¤ என் எத்தனை பர்யாயம் சொன்னாலும் அலங்காரமேயாகு மத்தனை யென்று தேசிகர் தாமே ஸ்பஷ்டமாக நிர்ணயித்தான பின்ட அர்த்த நிர் வாஹத்தில் நமக்கென்ன ச்ரம முள்ளது. மனத்தில் ஆர்ஜவம் வேண்டும்.

14. இவ்விஷயத்தில் இனிதாக வொன்று கேளீர். பல முறை நமஸ்கரிப்ப தென்கிற ஆசாரத்தில் தூஷணஞ் சொல்வதோ வெறுப்புக்கொள்ளுவதோ விவேகி களுக்கு உரியதன்று. அது நல்லகாரியமேயல்லது கெட்டகாரியமன்று. அதிகாராநு குணமாக அதுவும் சாஸ்த்ரார்த்தமாகும். ஸ்ரீவைஷ்ணவஸதாசார்ய பரம்பரையில் ஸக்ருத் ப்ரணாமாநுஷ்டானம் நிகழ்ந்து வருவதற்குண்டான உபபத்திகளை நிரூபித் தோமத்தனை. அதிகாராநுரூபமாக அநுஷ்டான பேதங்கள் எங்குமுண்டாகை யாலே, பிறருடைய அதிகாரம் வேறுபட்டதாகி அதற்கிணங்கின அநுஷ்டாநம் நிகழ்ந்துவாரா நின்றதென்றால் இதில் பிணக்கு ஏன்? இரண்டு படியாகவுமுள்ள சாஸ்த்ரார்த்தங்களை இருவகை வகுப்பினரையுங் கொண்டு எம்பெருமான் அநுஷ் டிப்பித்துப் போருகிறானென்பதே ப்ராமாணிகர்கள் கொண்ட துணிபு. ... ¤

## 3. பகவத்க்ருபை நிர்ஹேதுகமென்பதுபற்றி.

பகவத்க்ருபை நிர்ஹேதுகமா? ஸஹேதுகமா? என்பது ஒரு விசாரம் ஸஹேதுக மென்று சிலருடைய வாதம். நிர்ஹேதுகமென்பது தேசிகனுட்பட ஸகலா சார்ய ஸித்தாந்தம். இதைப்பற்றி விளக்கம் கேண்மின்.

15. நமது நற்குண நற்செய்கைகள் காரணமாக எம்பெருமானுடைய திரு வருள் தோன்றுகின்றதென்று ஒப்புக்கொண்டால் ஸஹேதுகம் என்றதாகும். அப்படியல்லாமல் அது தானே தோன்றுகின்றதென்று ஒப்புக்கொண்டால் நிர்ஹேதுகம் என்றதாகும். பகவத்க்ருபை, தானே தோன்றுகின்றதென்று எப்படி ஒப்புக்கொள்ளமுடியும்? அப்படி தோன்றுவதானால் என்றைக்கும் எல்லார் விஷ யத்திலும் தோன்றலாமே. அருளுக்கு இலக்காகாதார் ஒருநாளும் ஒருவரும் இல்லாதபடியன்றோ இருக்கவேண்டும். அப்படி காணாமையாலும், சில கால விசேஷங்களில் சில அதிகாரிகள்மீது மாத்திரம் அருள் தோன்றக் காண்கையாலும் அப்போது ஒரு ஹேதுவை முன்னிட்டுத் தோன்றினதாகவே கொள்ளவேணும் ஆகவே அருள் ஸஹேதுகமே யல்லது நிர்ஹேதுக மென்கைக்கு ஔசித்யமில்லை என்று சங்கிக்கக்கூடும். இங்கு உண்மை யென்னவென்றால்:—

16. அவனது மிகக் கனத்த அருளுக்கு ஹேதுவாக நம்மிடத்தில் என்ன சரக்கு உள்ளதென்று ஆராய்ந்து பார்த்தால் ஒரு அணுமாத்திரம் கிடைக்கக்கூடும்.

விஷயப்ரவணரான நாம் வேசிகளைப் பின்தொடர்ந்து அடிக்கடி கோவில்களிலே நுழைந்து புறப்பட நேரும். நம்முடைய வயலில் பட்டி மேய்ந்த பசுவை அடிப்பதாகத் துரத்திக்கொண்டு போம்போது அது ஒரு கோவிலை ப்ரதக்ஷிணஞ் செய்துகொண்டு ஓடுகிற வளவிலே அதை விடமாட்டாத ஆக்ரஹத்தாலே நாமும் அக்கோவிலை வலஞ் செய்து போகக்கூடும். சிசுபாலாதிகளைப் போலே நிந்தை செய்வதற்காக அடிக்கடி பகவானுடைய நாமங்களைச் சொல்லக்கூடும். இவ்விதமாகச் சில ஸுக்ருத விசேஷங்கள் காரணமாக எம்பெருமானருள் நம்மீது தோன்றிற்றென்றால் இதைக்கொண்டு ஸஹேதுகமென்று சொல்லிவிடலாமோ? கொடிய தண்டனைக்குரிய பாவங்களையன்றோ நாம் செய்திருப்பது. இதில் அதிஸ்வல்பமான ஸுக்ருதம் கலந்திருப்பதுகொண்டு எம்பெருமான்தான் அருள் செய்தானென்றால் அநுக்ரஹோர்முகனை அவன் திருவுள்ளத்தால் ஸஹேதுகமானால் ஆகலாம். "எந்நன்றி செய்தேனா என்னெஞ்சில் திகழ்வதுவே" "என்னுணர்வினுள்ளேயிருத்தினேன் அதுவுமவன தின்னருளே" "வெறிதேயருள் செய்வர்" என்றிவை போலும் பாசுரங்களை யநுஸந்திக்கப் பிறந்த நம் நினைவால் நிர்ஹேதுகமேயாகக் கடவது.

17. நம்மிடத்தில் சில ஆத்ம குணங்கள் இருந்தாலுங்கூட அவற்றை அஸத்கல்பமாக நினைத்து 'அமர்யாத: க்ஷுத்ர: சலமதிரஸூயாப்ரஸவபூ:' "ஈவிலாத தீவினைகளெத்தனை செய்தனன் கொல், "பாவமே செய்து பாவியானேன்" என்று அநுஸந்திக்க வேண்டியதாறுப்போலே பகவத்க்ருபைக்கு உறுப்பாக அல்ப ஹேதுக்கள் இருந்தாலுங்கூட அவற்றை நாம் அஸத்கல்பமாகவே நினைக்கவும் 'இவையும் இல்லாமலே அவன் அருள் செய்யவல்லவன்' என்று அநுஸந்திக்கவும் ப்ராப்தமாகையாலே நிர்ஹேதுக மென்கிற ஸித்தாந்தமே நிலை நிற்கும். 'எம்பெருமானருளாகிற மிகச் சிறந்த பலனுக்கு இந்த ஹேதுக்கள் ஸத்ருசமன்று' என்று சொல்லலாமே தவிர, நிர்ஹேதுகமென்றே சொல்லிவிடலாகுமோ? என்று ஆக்ஷேபங்கள் விளைவதுண்டு. அறிவிலிகள் அங்ஙனமே ஆக்ஷேபித்துக்கொண்டு கிடக்கட்டும்.

18. திருவாய்மொழியில் முதற்பத்தில் பத்தாந் திருவாய்மொழியில் எம்பெருமானுடைய நிர்ஹேதுக கருணையை ஆழ்வார் அநுபவித்து ஈடுபடுவதாக நன்கு விளங்குகின்றது. தேசிகனும் அவ்விடத்திற்கு "அவ்யாஜோதாரபாவாத்" என்றுதான் ச்லோகமிட்டருளினர். இது ஆறுயிரப்படியில் இல்லாத விஷயம்.

19. ஸ்ரீவசநபூஷணம் நான்காவது ப்ரகரணம் ஆரம்பம்—"த்ரிபாத் விபூதியிலே பரிபூர்ணாநுபவம் நடவாநிற்க......என் ஊரைச் சொன்னாய், என் பேரைச் சொன்னாய், என் அடியாரை நோக்கினாய். அவர்கள் விடாயைத் தீர்த்தாய், அவர்களுக்கொதுங்க நிழலைக் கொடுத்தாய் என்னுமா போலே சிலவற்றை ஏறிட்டு மடிமாங்காயிட்டு...... ஜந்ம பரம்பரைகள்தோறும் யாத்ருச்சிகம் ப்ராஸங்கிகம் ஆநுஷங்கிகமென்கிற ஸுக்ருத விசேஷங்களைக் கற்பித்துக்கொண்டு தானே அவற்றை ஒன்று பத்தாக்கி நடத்திக்கொண்டு போரும்" என்று ஆச்சரியமான சூர்ணிகையொன்றில் எம்பெருமானுடைய விஷயீகாரத்தின் பரிசு வெகு அழகாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த ஸ்ரீஸூக்தியின் சுவடறிந்த தேசிகன் இப்பொருளை அப்படியே அமையவைத்துப் பரமபத ஸோபாநத்தில் பணிப்பது பாரீர்; அதாவது-

"அஜ்ஞாத யாத்ருச்சிக ஆநுஷங்கிக ப்ராஸங்கிக ஸாமாந்ய புத்தி மூல ஸுக்ருத விசேஷங்களை வ்யாஜமாகக் கொண்டு விசேஷ கடாக்ஷம்பண்ணி" என்று.

20. இவ்விஷயத்தில் ஸாரமாகச் சொல்லுவதாவது—எம்பெருமானை வசீகரிப்பதற்கு உபாயமாக சாஸ்த்ரங்களில் கர்மஜ்ஞான பக்தி ப்ரபத்திகள் கூறப்பட்டுள்ளனவென்பது ப்ரஸித்தம். சேதநர்களை ரக்ஷித்தருள்வதில் இயற்கையாகவே ருசியுடையனான எம்பெருமான் *ஸம்ஸாரதந்த்ரவாஹித்வாத் ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே* என்கிறபடியே இத்தலையில் சிறிது எதிர்பார்க்கிறானென்று சொல்லிவைத்து ஒரு பக்கத்தில். எம்பெருமானுடைய திருவாக்கைப் பார்த்தாலோ *நாஹம் புருஷகாரேண நசாப்யந்யேந ஹேதுநா, கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந* என்று காண்கிறது;— "நான் புருஷகாரத்தைக்கொண்டும் கடாக்ஷிப்பதில்லை, வேறு எந்த ஹேதுவை யிட்டும் கடாக்ஷிப்பதில்லை; என்றைக்கோ வொருநாள் யாரோவொரு அதிகாரியை என் இச்சையினாலேயே நான் கடாக்ஷிப்பேன்" என்பது மேலே காட்டின ச்லோகத்தின் பொருள். இங்ஙனம் பேசுகின்ற எம்பெருமானது திருவருளை ஸஹேதுகமென்று நினைக்க நாமார்? நம்பக்கல் கைம்முதல் கொண்டே எம்பெருமான் நம்மைக் காத்தருள்கின்றானென்று கொள்வது ஹேயமாகும். *மருவித்தொழும் மனமே தந்தாய்* *என்னைத் தீமனங்கெடுத்தாய்* என்கிற அநுஸந்தானம் அக்ருத்ரிமமாகக்கடவது.

## 4. ப்ரபத்தி அநுபாயமென்பது பற்றின விளக்கம்.

ப்ரபத்தி உபாயமா அன்றா என்பது ஒரு விசாரம். உபாயமென்பர் நவீனர்; உபாயமன்றென்பர் தேசிகாதிகள். கீழே பகவத்க்ருபையின் நிர்ஹேதுகத்வ நிரூபணம் பண்ணினது கொண்டே ப்ரபத்தியின் அநுபாயத்வமும் நிஷ்கர்ஷிக்கப்பட்டதாகும். மேலும் தனிப்படவும் நிரூபிக்கப்படுகிறது. நன்கு குறிக்கொள்க.

21. 'கடையில் சென்று எண்ணெய் வாங்கிக்கொண்டுவா' என்று கட்டளையிடப்பெற்றவொருவன் அது வாங்கக் கோணியையோ கூடையையோ எடுத்துக்கொண்டு புறப்பட்டானாகில் 'எண்ணெயின் ஸ்வரூபத்தையே இவன் தெரிந்துகொள்ளவில்லை போலும்' என்று நினைக்கத் தடையில்லையன்றோ. அதுபோல, ப்ரபத்தி உபாயமென்று சொல்லப்புகுமவர்கள் ப்ரபத்தியின் ஸ்வரூபத்தையே உள்ளபடி யறிந்திலர் போலும் என்றே நினைக்க வேண்டியதாகும்.

22. ப்ரபத்தியாவது என்ன? *த்வமேவோபாய பூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதி:, சரணாகதி:* என்று சாஸ்த்ரம் சொல்லுகிறது. எம்பெருமானையே உபாயமாக அத்யவஸிக்குமதுவே ப்ரபத்தி யென்பது. இத்தகையதான ப்ரபத்தியானது தன்னிடத்தில் உபாயத்வத்தை எங்ஙனே ஸஹிக்கும்? ப்ரபத்தி யென்கிற வஸ்து தேறும்போதே அதன் அநுபாயத்வமும் தேறியே தீரும்.

23. இதை தேசிகன் வெகு அழகாக நிரூபித்தருளுகிறார்; ந்யாய ஸித்தாஞ்ஜனத்தில் ஜீவ பரிச்சேதத்தில்—

*இயம் கேவல லக்ஷ்மீசோபாயத்வ ப்ரத்யயாத்மிகா;
ஸ்வஹேதுத்வநியம் ருந்தே ஸிப்யுக்ஷ ஸஹகாரிணும்*

என்பது அவருடைய ஸ்ரீஸூக்திகளில் தலையானது. எம்பெருமானொருவனையே உபாயமாகக் கொள்வதாகிற இந்த ப்ரபத்தியானது தன்னிடத்தில் உபாயத்வ புத்தியைத் தடை செய்கின்றது; ப்ரபத்திக்கே உபாயத்வ மில்லாதபோது அதன் ஸஹகாரிகளானவற்றுக்கு அது இல்லை யென்னுமிடம் தனிப்படச் சொல்ல வேணுமோ? என்பது இந்த ச்லோகார்த்தம்.

24. சாஸ்த்ரங்களில் ஒன்று விதிக்கப்படுமானால் அது உபாயமாக (ஸாதனமாக) இருந்து தீரும் என்பது பொதுவான வொரு கொள்கை. உபாயமாக மாட்டாததை சாஸ்த்ரம் எதற்காக விதிக்கும்? எப்போது விதி ஏற்படுகிறதோ அப்போது விதிக்கப்படுகின்றவதின் உபாயத்வமும் கூடவே ஸித்திக்குமாதலால் சரம ச்லோகத்தில் ☆மாம் ஏகம் சரணம் வ்ரஜ☆ என்று விதிக்கப்படுகிற ப்ரபத்திக்கு உபாயத்வம் அநிவார்யம்—என்று பிறர் நினைக்கக்கூடியதுண்டு. இதனையும் ந்யாஸ திலகமென்கிற க்ரந்தத்தில் தேசிகனே எடுத்துக்காட்டி அழகாக ஸமாதானமும் வகுத்துள்ளார். ☆ஹேதுர் வைதே விமர்சே☆ என்கிற ச்லோகம் காண்க. இதன் கருத்தாவது—ப்ரபத்தியானது விதிக்கப்பட்டிருப்பதனால் உபாயமென்று சொல்லவேண்டியிருந்தாலும் இங்கு அப்படி கொள்ளவேண்டா; ஒவ்வொரு வித்யையிலும் எம்பெருமானுக்கு ஒவ்வொரு ரூபம் அறியக்கடவதா யிருக்கிற கணக்கிலே இந்த ப்ரபத்தி வித்யையில் இதராநபேக்ஷ உபாயத்வம் (பிறிதொன்றை எதிர்பாராத உபாயத்வம) அறியத்தக்க ரூபமாதலால்—என்று இந்த ச்லோகத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

25. இங்கு மற்றொரு வாதம்;—ஸித்தோபாயமென்றும் ஸாத்யோபாயமென்றும் உபாயம் இருவகைப்படும். எம்பெருமான் ஸித்தோபாயமானாலும் ஸாத்யோபாயமாக ஒன்றை அங்கிகரித்தேயாக வேண்டுமென்பர் நவீநர்; இதற்கு அறிவிக்கப்படும் ஸமாதானமாவது—ஸாத்யோபாயமென்றால் "சேதநனுடைய முயற்சியால் ஸாத்யமான உபாயம்" என்று தானே பொருளாகும். உண்மையில் இது சேதநக்ருதியாலே ஸாத்யமானதா? என்று ஆராய்ந்தால் மேலெழுந்தவாரியில் அப்படிச் சொல்லலாமாயினும் ☆இசைவித்தென்னை யுன்தாளிணைக் கீழிருத்துமம்மானே☆ என்பது போன்ற பல பாசுரங்களைக்கண்டால் இது நம்முடைய முயற்சியால் ஸாத்யமன்றிக்கே ஸர்வேச்வரனுடைய க்ருஷிபலமாகவே விளையுமதாக தேசிகன் ஸாதிப்பதால் ஸாத்யோபாயமென்கிற வ்யபதேசமும் இதற்கு ஏலாது. இவ்விஷயம் "ஸ்வீகாரந்தானும் அவனாலே வந்தது; ஸ்ருஷ்டி அவதாராதி முகத்தாலே பண்ணின க்ருஷிபலம்" என்ற பிள்ளை லோகாசார்யருடைய ஸ்ரீஸூக்திக்குச் சார்பாக தேசிகன் பணித்த ☆நிதானம் தத்ராபி ஸ்வயமகில நிர்மாண நிபுண,☆ இத்யாதி பரச்சத ஸ்ரீஸூக்தி ஸம்வாதியாகும். ☆வரத! தவ கலு ப்ரஸாதாத்ருதே சரணமிதி வசோபி மே நோதியாத்☆ என்ற கூரத்தாழ்வான் ஸ்ரீஸூக்தியும் தெளிவு பெறுத்தும்.

26. "ஸ்வாமீ ஸ்வசேஷம் ஸ்வவசம் ஸ்வபரத்வேந நிர்ப்பரம், ஸ்வதத்த ஸ்வதியா ஸ்வார்த்தம் ஸ்வஸ்மிந் ந்யஸ்யதி மாம் ஸ்வயம்" என்பது தேசிகனுடைய ஸூக்தி. இதில் ஒன்பதின்கால் ஸ்வசப்த ப்ரயோகம் பண்ணியிருக்கிறார். இதனால் சேதநனுடைய முயற்சி நாற்றம் வேரற அறுக்கப்படுகின்றமை யறிந்தால் உபாயமென்றும் ஸாத்யோபாயமென்றும் வாய்திறக்க வழியேயில்லை.

27. இதில் ஸாரமான ஒரு வார்த்தை. ரத்னம் என்கிற ஒரு வஸ்துவை எடுத்துக்கொள்வோம். இது ஜீவனத்திற்கு உபாயமா? அன்று? என்று விசாரம் வரின், ஒரு அதிகாரிக்கு உபாயம், மற்றொரு அதிகாரிக்கு அநுபாயம் என்றுதானே சொல்லவேண்டியதாகிறது. ஏனெனின்; வாணிஜ்யத்தை ஜீவிகையாகவுடையவர்கள் ரத்னத்தை விற்று ஜீவிக்கக் காண்கிறோமாதலால் அத்தகைய அதிகாரிகளுக்கு ரத்னம் உபாயமே. சக்ரவர்த்திபோல்வாரிடத்தில் அந்த ரத்னம் இருக்குமாகில் அது ஜீவநோபாயமாக ஆக்கப்படுகின்றதன்றே. ஸ்வயம் போக்யமாகவன்றோ அணியப் படுகின்றது. இப்படி எந்த வஸ்துவும் அதிகாரி பேதத்தாலே உபாயமாகவும் போக்யமாகவும் நிற்கும். ப்ரபத்தியை நாம் உபாயமாகக் கொள்ளப் பிறந்தோமல்லோம். "ப்ரபத்தியை" என்று விசேஷித்துச் சொல்லவேண்டியதுமில்லை; ஏதுவும் நமக்கு உபாயமன்று. எந்த நன்மையும் ஸ்வரூபத்தில் சேர்ந்ததாகவே கொள்ளப்படுகிறது. ஸ்வரூபப்ராப்தமாகையாலே உபாயமாகாது.

28. "பகவத்ப்ரவ்ருத்தி விரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தியே ப்ரபத்தி" என்பது ஆசார்யர்களின் ஸூத்ரம். அசித்வ்யாவ்ருத்த வேஷமாகவும் ஸ்வரூபாதிரேகியல்லாதபடியாகவுமுள்ளதற்குமேலே மிகையான ப்ரவ்ருத்திகள் நேர்ந்தால் ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயமுள்ளதாக எம்பெருமான் திருவுள்ளம்பற்றி நம்மை ரக்ஷிப்பதில் தான் கைவாங்கி நிற்கநேரும். ஆகவே இங்ஙனம் பகவத்ப்ரவ்ருத்திக்கு விரோதியாகக் கூடிய ஸ்வப்ரவ்ருத்தியில் நின்றும் நிவ்ருத்தியடைவதே ப்ரபத்தியாம். இவ்வர்த்தத்தைக் கூரத்தாழ்வான் *க்ஷமாபயஸ்யஹோ தத்பிஸந்திவிராமமாத்ரம்* என்கிற ஸ்ரீஸூக்தியால் காட்டியருளினர். *ராவண ராபஞ்ச முமோச வீர:* என்கிற ஸ்ரீராமாயண ச்லோகத்தைக் கொண்டும் இதை ரஸமயமாக்கியருளிச் செய்வர்கள். *வனத்திடரை ஏரியாம் வண்ணமியற்று மிதுவல்லால் மாரி யார் பெய்கிற்பார் மற்று* என்கிற பூதத்தாழ்வார் பாசுரத்தின் திவ்யார்த்ததீபிகையுரையைக் காண்க.

29. ஸ்ரீபாஷ்யகாரரின் சில ஸ்ரீஸூக்திகளையும் காட்டுவோம்; *உபபந்நேச* (3-2-4.) என்கிற ப்ரஹ்ம ஸூத்திரத்தின் பாஷ்யத்திலே "ப்ராப்யஸ்ய பரமபுருஷஸ்ய ஸ்வப்ராப்தௌ ஸ்வஸ்யைவோபாயத்வோபபத்தே; *நாயமாத்மா ப்ரவசநேந லப்ய:......தநூம் ஸ்வாம்* இதி அநந்யோபாயத்வச்ரவணாத்." என்றும், "அம்ருதஸ்யைஷ ஸேது: *இதி அம்ருதஸ்ய ஸ்வஸ்ய ஸ்வயமேவ ப்ராபக இதி ஸேதுத்வவ்யபதேசோபபத்தேச்ச" என்றும்; *பலமத உபபத்தே:* (3—2—37.) என்கிற ஸூத்திரத்தின் பாஷ்யத்திலே—"ஸ ஏவ ஹி ஸர்வஜ்ஞஸ் ஸர்வசக்தி: மஹோதாரோ யாகதாநஹோமாதிபி: உபாஸநேந ச ஆராதித: ஐஹிகாமுஷ்மிகபோகஜாதம் ஸ்வரூபாவாப்திரூபமபவர்க்கம் ச தாதுமீஷ்டே; ந ஹ்யசேதநம் கர்ம க்ஷணத்வம்ஸி காலாந்தரபாவிபல ஸாதநம் பவிதுமர்ஹதி" என்றும் அருளிச் செய்துள்ளார்.

30. இந்த ஸ்ரீஸூக்திகளையநுஸரித்தே ஸ்ரீ தேசிகனும் ஸ்தோத்ர ஸங்க்ரஹ ரக்ஷையிலே *நிஜகர்மாதி, பக்த்யந்தம் குர்யாத் ப்ரீத்யைவ காரித ; உபாயதாம் பரித்யஜ்ய ந்யஸ்யேத் தேவேது தாம அபீ:* என்கிற ச்லோக வியாக்யானத்தில்—"ஸ்வயம் ஸ்வாதுத்வாத் க்ஷணிகஸ்ய காலாந்தர பாவிபலஸாதநத்வாநுபபத்தி தர்ச

நாச்ச நாஸ்ய ஸ்வவ்யாபாரே மோக்ஷோபாயதா புத்திரபி ஸ்யாதிதி பாவ:; அந்ததஸ் தைஸ்தைராராதிதோ பகவாநேவ ஹி ஸர்வத்ரோபாய:'' என்றருளிச் செய்துள்ளார்.

31. 'ப்ரபத்தி உபாயம்' என்று வாய்திறக்கவே கூடாதென்று ஒரு ஆசிரியர்க்கும் திருவுள்ளமில்லை. திருக்கச்சிநம்பிகள் மூலமாகப் பேரருளாளன் எம்பெருமானார்க்குப் பணித்த ஆறு வார்த்தைகளில் "மோக்ஷோபாய: ப்ரபத்தி," என்றுள்ளது; எம்பெருமானாரும் ஸ்ரீவைகுண்டகத்யத்தில் "தத்ப்ராப்தயே ச தத்பாதாம்புஜத்வயப்ரபத்தே ரந்யந் ந மே கல்பகோடிஸஹஸ்ரேணாபி ஸாதநமஸ்தீதி மந்வாந:'' என்றருளிச்செய்தார். அந்த கத்யத்திலே *அம்ருதஸாகராந்தர்நிமக்ந ஸர்வாவயவஸ் ஸுகமாஸீத* என்ற விடத்திற்கு வியாக்கியானமருளிச் செய்யாநின்ற ஆச்சான்பிள்ளை "ப்ரபத்தியையே உபாயமாகக் கொண்டு ப்ராக்ருத மண்டலத்தை விட்டு'' என்றருளிச்செய்துள்ளார். பிள்ளை லோகாசார்யரும் ஸ்ரீ வசநபூஷணத்தில் 'ப்ரபத்த்யுபாயத்துக்கு இக்குற்றங்களொன்றுமில்லை'' என்றருளிச்செய்தார். அவ்விடத்திற்கு வியாக்கியான மருளிச் செய்யாநின்ற மணவாள மாமுனிகள்— "இக்குற்றங்களொன்றுமில்லை யென்கையாலே மற்றொரு குற்றமுண்டென்னுமிடம் தோற்றுகிறது; அதாவது ஆபாத ப்ரதீதியிலே உபாயத்வ ப்ரதிபத்திக்கு அர்ஹமாம்படி யிருக்கை'' என்றருளிச்செய்தார்.

32. இவ்வோ ஸ்ரீஸூக்திகளை ஆராயுமிடத்து வாணிஜ்யாதிகளுக்கு த்ரவ்யார்ஜந ஸாதநத்வவ்யபதேசம்போலே ப்ரபத்திக்கும் மோக்ஷோபாயத்வவ்யபதேசம் கூடுமென்றும், உட்புகுந்து ஆராய்ந்து பார்த்தால் "*உன் மனத்தா லென்னினைந் திருந்தாயென்கிறபடியே ப்ராப்திக்கு உபாயம் அவன்நினைவு'' என்று கொள்வதே பொருந்துமென்றும் ஸகலாசார்ய ஸித்தாந்தமாகத் தேறுகின்றது. "எம்பெருமானே! எம்பக்கலில் ஏதேனும் ஒரு உபாயத்தைக் கொண்டே எம்மைக் கைக்கொள்ளவேணுமென்று உனக்கு நிர்ப்பந்தமுண்டாகில், செயல்மாண்டு நிற்கையாகிற சரணாகதி தவிர வேறொன்றும் எம்பக்கல் இல்லாமையாலே இதனையேதான் நீ உபாயமாகக் கொள்ளவேணும்''என்று ஆசாரியர்கள் ஸ்தோத்திரங்களிலே அருளிச்செய்வதுண்டு. இந்த அபிப்ராயங்கொண்டே ப்ரபத்த்யுபாயம், ப்ரபத்த்யுபாயம் என்கிறது.

33. தேசிகனுடைய ஸூக்திகளில் *குணக்ஷதலிபிக்ரமாதுப்நிபாதிந: பாதிந:* என்பது ஒரு அற்புதமான ஸ்ரீஸூக்தி. "புழு குறித்தது எழுத்தாமாப்போலே'' என்ற பெரியவாச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்தியை தேசிகன் இங்ஙனே ச்லோகமாக்கி யருளினார். புழுவானது நிலத்தில் செல்லும்போது ஒரு எழுத்து எழுதவேணுமென்கிற எண்ணம் அதற்கு இல்லை; ஆனாலும், அதன் செல்லுகையை நாம் உற்று நோக்கினால் ஏதேனும் ஒரு எழுத்து தேறினதாக ஆகக்கூடும். இதற்கு குணாக்ஷரந்யாயமென்று பெயர். இந்த ந்யாயத்தாலே யாத்ருச்சிகமாக நல்லதாய் முடிகின்ற நமது செயலை உபாயமென்று ஸாதிக்க நினைப்பது ஸமஞ்ஜஸமன்று. 'ப்ரபத்தி உபாயம் என்று சொன்னாலும் *ந்யாஸ இதிப்ரஹ்ம,*ந்யாஸ இத்யாஹுர் மநீஷிணோ ப்ரஹ்மாணம்* என்கிற உபநிஷத்தின்படி ப்ரபத்தவ்யனான பரமபுருஷனுக்கும் ப்ரபத்தியென்று வ்யபதேசமுண்டாதலால் அவனையே உபாயமாகச் சொன்னதாய் முடிந்து நிற்குமத்தனை. ப்ரபத்திநிஷ்டையே நமக்கு உற்றது என்ற பொருளில் ப்ரபத்தியே உபாயமென்கிறது. ... ... ... ... ... ...

# 5. சேதநலாபம் ஈச்வரனுக்கே பேறு என்பதுபற்றின விளக்கம்.

34. ஸம்பிரதாயத்தில் சேதநலாபம் ஈச்வரனுக்குப்பேறு? ஈச்வரலாபம் சேதனனுக்குப்பேறு? என்று இந்தவொரு விசாரம் தலைமை பெற்றிருக்கும். இந்த விசாரத்தின் முடிவை உள்ளபடி தெரிந்துகொள்வதே மிகச் சிறக்கும். சாஸ்த்ரங்களை மேலெழப் பார்க்கும்போது 'ஈச்வரனை அடைவது சேதனனுக்குப் பேறு' என்பதாகவே தோற்றி நிற்கும். *ப்ரஹ்மவிதாப்நோதி பரம்* என்கிறது உபநிஷத்துபரனை ப்ராப்யனென்றும், இவனை ப்ராப்தாவென்றும் ஸ்பஷ்டமாகப் பல விடங்களிலும் சொல்லி யிருக்கையாலே 'ஈச்வரலாபம் சேதநனுக்குப் புருஷார்த்தம்' என்றே க்ரஹிக்கநேரும். நவீநர் இப்படியே மதமாகக் கொண்டிருக்கிறார்கள். ''ஈச்வரனுக்குத்தான் சேதநலாபம் புருஷார்த்தம்'' என்பது ஸித்தாந்தஸாரம்.

35. ஸ்ரீ தேசிகனுடைய திருவுள்ளமும் சேதநலாபம் ஈச்வரனுக்குப் பேறு என்பதேயாம். இதனை அவர் கீதாதாத்பர்ய சந்த்ரிகையில் வெகு அழகாகக் காட்டியுள்ளார். கீதையில் ஒன்பதாமத்யாயத்தின் முடிவிலுள்ள *மந்மநா பவ* என்கிற ச்லோகத்தின் பாஷ்யத்திற்கு விவரணமெழுதுகையில் — ''ஆச்ரித ஸம்ரக்ஷணம் ஸ்வலாபம் மத்வா ப்ரவர்த்ததே'' என்றருளியிருப்பது காண்க.

36. ''ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக்கு உகப்பானும் அவனே'' என்பது ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்தி. சேதநனைப் பெறுவது ஈச்வரனுக்குப் பேறு என்றால் இவ்வர்த்தம் ஹ்ருதயத்தில் அவகாஹிப்பது சிரமமேயாகும். ஆனாலும் எளிதாக உணர்த்துகிறோம். சேதநன் முக்தனாகிப் பரமபதத்தில் சென்றபின் அங்கு என்ன கோஷிக்கிறானென்பதை நம் உபநிஷத்து தெளிவிக்கின்றது. *அஹமந்நமஹமந்நமஹமந்நம்* என்பது முக்தனுடைய முதல் வார்த்தை. 'பகவானுக்கு நான் அன்னமாகிறேன்' என்று ஒரு தடவைக்கு மூன்று தடவையாக இதில் சொல்லுகிறது. இதனால், ஈச்வரனானவன் சேதனனைப் பெற்று அநுபவிக்கவேணுமென்று பெரும்பசி கொண்டிருந்தானென்றும், அப்பசி முக்தாத்மாவால் தீருகிறதென்றும் ஸ்பஷ்டமாகிறது. இல்லையாகில், *அஹமந்நம்* என்று ஓதவேண்டியதில்லையன்றோ.

37. அடுத்தபடியாக *அஹம் அந்நாத: அஹம் அந்நாத: அஹம் அந்நாத:* என்றும் வருகிறது. எம்பெருமானுக்கு இவன் அன்னமாகி அவன் பசியைத் தீர்த்த பிறகு இவனும் தன்பசி தீருவதாக ஓதிற்று. *அஹமந்நம் அந்நமதந்தமத்மி* என்கிற மேல்வாக்கியத்தினாலும் இது விவரிக்கப்படுகிறது. இதன் தாற்பரியமென்னவென்றால், முக்தனாகிய தன்னை யநுபவித்து எம்பெருமான் விடாய்தீர்ந்து மகிழ்ந்து நிற்கையில் அந்த மகிழ்ச்சியைக் கண்டு தான் மகிழ்கிறான். இவன் அசேதநமல்லாமல் சேதநனாய் ஞானாநந்தங்களை வடிவாகவுடையனாயிருக்கையாலே தன்னுடைய ஆனந்தமும் பயன் பெற்றதாக வேணுமே. அசித்திற்காட்டில் ஒரு வாசி ஏற்பட வேணுமே. தன்னைப் பெற்று எம்பெருமான் ஆனந்திப்பதைக் கண்டு 'நம்மால் எம்பெருமானுக்கு இப்படியொரு ஆனந்த முண்டாயிற்றே!' என்று அநுஸந்தித்து அதனால் தான் ஆநந்திக்கையே ப்ராப்தம். 'அஹமந்நாத:' 'அஹமந்நமந்நமதந்தமத்மி' என்ற உபநிஷத்தின் கருத்து இதுவேயாம்.

38. இப் பரமார்த்தத்தை ஆழ்வார் திருவாய்மொழியில் பலவிடங்களிலும் வெளியிட்டருளுகிறார். *வாரிக்கொண்டு உன்னை விழுங்குவன் காணிலென்று, ஆர்வுற்ற என்னையொழிய என்னின் முன்னம் பாரித்துத், தானென்னை முற்றப்பருகினான்.* (9—6—10) என்கிற பாசுரம் அவற்றுள் சிகரமானது. ஆசார்ய ஹ்ருதயத்தில் (2—18) *பெரும்பாழில் க்ஷேத்ரஜ்ஞன்பெருஞ்செய்* இத்யாதியான பெரிய சூர்ணையில் இவ்வர்த்தம் வெகு அற்புதமாக நிரூபிக்கப்படுகின்றது.

39. ஸ்ரீ ராமாயணத்தில் *அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம், க்ருத க்ருத்யஸ் ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ* என்கிற சுலோக ரத்னத்தாலே வான்மீகி முனிவரும் வெளியிட்ட பரமார்த்தமிது. மகுடாபிஷேகம் பெற்ற விபீஷணாழ்வான் மகிழ்ந்தானென்று சொல்லவேண்டியிருக்க அங்ஙனம் சொல்லாமல் ச்லோகமமைத்திருக்கிற அழகை நோக்கவேணும். க்ருத க்ருத்யத்வமும் விஜ்வரத்வமும் ப்ரமோத சாலித்வமும் ஸ்வாமியான பெருமாளுக்கே யல்லது ஸ்வமான விபீஷணனுக்கில்லை யென்று விளங்கவைத்தார் வான்மீகி.

40. ஆத்மாவுக்கு சைதந்யாதிநமான போக்த்ருத்வமிருந்தாலும், அது பாரதந்த்ரியத்தையும் போக்யதையையும் ஸ்வரூபவுண்மையாகத் திருமந்திரத்தினால் கண்டறிந்தவனுடைய போக்த்ருத்வமாகில் தன்னுடைய ரஸத்துக்கு உடலன்றிக்கே சேஷியினுடைய ரஸத்துக்கே உடலாயிருக்கும். *படியாய்க்கிடந்து உன் பவளவாய் காண்பேனே* என்கிற பெருமாள்திருமொழிப் பாசுரத்தில் "படியாய்க் கிடந்து" என்பதனால் அசேதந வ்ருத்தியும், "உன் பவளவாய் காண்பேனே" என்பதனால் சேதநவ்ருத்தியும் பிரார்த்திக்கப்பட்டன. இத்தலையை விநியோகங்கொண்ட எம்பெருமானுக்கு விளையும் உகப்பைக்கண்டு உகப்பதுதவிர வேறுபயனில்லை சேதநனுடைய ஆநந்தித்வத்திற்கு என்பதே ஸாரமான பொருள்.

41. இதனை ஆளவந்தார் *கதா ஹமைகாந்திக நித்ய கிங்கர: ப்ரஹர்ஷயிஷ்யாமி* என்கிற ஸ்தோத்ரரத்ந ஸ்ரீஸூக்தியால் ஸ்பஷ்டமாகக் காட்டியருளினர். இதில் 'ப்ரஹர்ஷயிஷ்யாமி' என்கிற க்ரியாபதம் ஆச்சரியமாக அமைந்தது. நான் எப்போது ஆனந்திக்கப் போகிறேன் என்னாமல், நான் எப்பொழுது எம்பெருமானை ஆனந்திப்பிக்கப்போகிறேனென்று பேசியுள்ளார், ணிஜந்தப்ரயோகம் நோக்குக. இங்கு வியாக்கியானத்தில்—"தன்னுடைய அநுவ்ருத்தியால் ஈச்வரனுக்குப் பிறக்கும் ஹர்ஷமேயிறே சேதநனுக்கு ப்ராப்யம்" என்று பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்ததை தேசிகன் தமது ஸ்தோத்ர பாஷ்யத்தில் *ப்ரஹர்ஷயிஷ்யாமி—த்வத் தாஸபூதஸ்ய மே த்வத் ப்ரஹர்ஷ ஏவ ப்ரதாநம் ப்ரயோஜநமிதி பாவ:. ஏவஞ்ச ஸ்வாதீநஸ்வார்த்தகர்த்ருத்வப்ரமரஹிதகைங்கர்யப்ரார்த்தனா க்ருதா பவதி* என்று விசதீகரித்தருளினர். *க்ருதார்த்தோஹம் பவிஷ்யாமி* "என்றும் மகிழ்வேனே" என்றும் வருமிடங்களில் இந்த நிர்ணயத்திற்கு அநுகுணமாகவே ஆசாரியர்கள் அர்த்தநிர்வாஹம் செய்து போருவர்கள்.

42. எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யத்தின் முடிவில் *அநாவ்ருத்தி ஸூத்ரபாஷ்யத்தில் ந ச பரமபுருஷஸ் ஸத்யஸங்கல்ப: அத்யர்த்தப்ரியம் ஜ்ஞாநிநம் லப்த்வா கதாசிதாவர்த்தயிஷ்யதி* என்கிற ஸ்ரீஸூக்தியினால் 'சேதநலாபமே ஈச்வரனுக்குப்

பேறு' என்கிற ஸத்ஸம்ப்ரதாய ரஸ்ய ரஹஸ்யப் பொருளை ஸ்தாபித்தருளினர். அங்கே விஷயம் என்னவென்றால், மோக்ஷத்திற்குச் சென்ற சேதநன் திரும்பிவருதல் உண்டா இல்லையா என்று விசாரம் வந்தது. ஈச்வரன் கேட்பாரற்ற ஸ்வதந்திரனாதலால் அந்த ஸ்வாதந்திரியத்தினால் முக்தாத்மாவைத் திருப்பியனுப்பிவிடக் கூடுமன்றோ என்கிற சங்கையுண்டாக, ஸூத்ரகாரர் *அநாவ்ருத்திச் சப்தாத்* என்று ஸூத்ரமியற்றினர். முக்தாத்மா ஒருநாளும் திரும்பி வருவதில்லையென்று சாஸ்த்ரம் முறையிட்டிருக்கையாலே புநராவ்ருத்தி கிடையாதென்று ஸூத்ரகாரர் சொல்லிவிட்டார்; பாஷ்யகாரரும் இவ்வர்த்தத்தை வியாக்கியானித்தார். ஆனால் தோன்றின சங்கைக்கு திருப்திகரமான ஸமாதானம் வந்ததாகவில்லை. ''யதி பரம புருஷாயத்தம் முக்தைச்வர்யம் தர்ஹி தஸ்ய ஸ்வதந்த்ரத்வேந தத்ஸங்கல்பாத் முக்தஸ்ய புநராவ்ருத்தி ஸம்பவாசங்கேத்யத்ராஹ'' என்பது ஸூத்ரபாஷ்யாவதாரிகை. ஈச்வரன் ஸ்வதந்திரனாகையலே கேட்பாரற்று முக்தாத்மாவை மீண்டும் கீழே தள்ளிவிட நினைத்தால் என் செய்வது? என்பது சங்காசரீரம். 'தள்ளமாட்டானென்று சாஸ்த்ரம் சொல்லியிருக்கையாலே' என்று விடை கூறினதால் என்ன ஸமாதானம் வந்ததாகும்? சாஸ்த்ரத்தையும் மீறிச் செய்வதன்றோ ஸ்வதந்த்ரக்ருத்யம். அப்படிப்பட்ட ஸ்வாதந்திரியத்தாலே ஈச்வரன் ஒன்று செய்யப் புகுந்தால் சாஸ்த்ரம் குறுக்கே நிற்குமோ? என்றன்றோ இங்குப் பூர்வபக்ஷியின் கருத்து. அதற்குத் தினவடங்கச் சொல்லவேண்டிய ஸமாதானத்தை ஸூத்ரகாரர் சொல்லாத குறைதீர நம் பாஷ்யகாரர் வெகு அழகாக அருளிச் செய்கிறார்.

43. ஈச்வரன் ஸ்வதந்திரனேயானாலும் உன்மத்தனல்லன், மூர்க்கனல்லன், அரஸிகனல்லன். ஸத்யஸங்கல்பனென்று பேர்பெற்றவன். தன்னுடைய மநோரதத்திற்கு மாறுபாடாக நடந்துகொள்பவனல்லன். ஒரு சேதநனைப் பெறுவதற்கு அவன் என்னபாடுபடுகிறான் தெரியுமோ? அவன் ஸ்ருஷ்டி பண்ணுவதும் அவதாரங்கள் பண்ணுவதும் சேதநரை லபிக்கைக்காகவன்றோ? எவ்வாவோ தவப்பயனாக ஒரு சேதநனை லபித்த பின்பும் ரஸிகனான பரம புருஷன் அவனை இழப்பனோ? என்று இவ்வளவுமெழுதி நம் பாஷ்யகாரர் சங்காபரிஹாரத்தைத் தலைக்கட்டியுள்ளார். இதில் *பரம புருஷ: ஜ்ஞாநிநம் லப்த்வா* என்கிற ஸ்ரீஸூக்திவிந்யாஸமானது எம்பெருமானார் திருவுள்ளத்தில் திருவாய்மொழி யமுதக்கடல் அலைபெறிகிறபடியை நன்கு காட்டுகிறது. கீதையில் *ஸ மஹாத்மா ஸுதுர்லப:* என்று எம்பெருமான் தானே சோதி வாய்திறந்து பணித்ததையும் உடனே உதாஹரிக்கிறார். எல்லாம் கண்ணனென்றிருக்கிற மஹாத்மா மிகவும் துர்லபன் என்று பகவான் தன் திருவாக்காலே சொன்னால், அப்படிப்பட்டவொரு மா ஞானியை லபிக்கைக்கு அவன் எவ்வளவோ பாடுபடுகிறவன் என்பது விளங்கவில்லையா? ஆகவே சேதநலாபமே ஈச்வரனுக்குப் பேறு என்கிற ஸித்தாந்தம் நன்கு பொலிந்ததாயிற்று.

44. ஆகில், யத்கிஞ்சித்ஸுக்ருதம் செய்வதும், பேற்றுக்கு த்வரிக்கையுமாகிற இவையெல்லாம் நம் பக்கலில் அடியோடு வேண்டாவே என்று பிறர் க்ஷேபிக்க வருவர்கள். சைதந்யகார்யமாக விளையுமவை நம்மால் தடுக்க வொண்ணாதவை. அவையுங்கூட நம்மால் விளைவனவல்ல. *நிதாநம் தத்ராபி ஸ்வயமகில நிர்மாண நிபுண:* என்கிற தேசிக ஸூக்தியால் இவ்வுண்மையும் திண்மை பெறும்.

45. ஸொத்தைப் பெற்று அனுபவித்து ஆநந்திக்க வேணுமென்கிற ஆவல் ஸ்வாமிக்கே உரியதாகவும் உள்ளதாகவும் உலகிற் காண்கிறோமாதலால் இந்த நியாயமே ஆகும் இங்கும், ஆனால் ஜீவாத்மாவாகிற இந்த ஸொத்து சைதந்ய மாகிற ★கல்மஷத்தோடும் கூடியிருக்கையாலே சிறிது தலையாட்டவும் வாலாட்டவும் பெறுகிறது. தன்னை நன்றாக வுணரும்போது தலைமடிந்து நிற்கிறது. ... (5)

★நிலாத் தென்றல் சந்தனம் புஷ்பம் முதலியன போலே ஸர்வாத்மநா பரதந்திரமாயிருக்க வேண்டிய ஜீவாத்மாவுக்கு சைதந்யமே இடையூறாக நிற்றலால் இதைக் கல்மஷமென்கிறது.

## 6. ஸ்வகதஸ்வீகார பரகதஸ்வீகாரங்களைப்பற்றின தெளிவு.

46. சேதநன் தான் எம்பெருமானைப் பற்றுவதானது ஸ்வகத ஸ்வீகார மென்றும், எம்பெருமான் தானே சேதநனை வரிப்பதானது பரகத ஸ்வீகார மென்றும் சொல்லப்படுகிறது. அடைவே மர்க்கடகிசோர நியாயமென்றும் மார்ஜாரகிசோர நியாயமென்றும் வழங்குவர். பரகத ஸ்வீகாரமென்பதன் சுவையை அறியப் பெறாத நவீநர் 'இது அஸம்பிரதாயப் பேச்சு' என்பர். அது கிடக்க. கீதா பாஷ்யத்தில் எம்பெருமானார் தெளிவித்தருளின மஹார்த்தம் இது. அதில் எட்டாவது அத்தியாயத்தில் பதினான்காவது ச்லோகம். "அநந்யசேதாஸ் ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யச:, தஸ்யாஹம் ஸுலப: பார்த்த! நித்யயுக்தஸ்ய யோகிந:" 'ஜ்ஞாநீது ஆத்மைவ மே மதம்' என்று பகவான் தான் தனக்கு உயிர்நிலையாகக் கொண்டாடும் ஞானியானவன் தன்னை உபாஸிக்க வேண்டியபடியையும் பேறு பெறும் பரிசையும் இனி யருளிச் செய்கிறான் கண்ணபிரான்—என்று அவதாரிகை யிட்டு சுலோகத்தை வெகு அழகாக வியாக்கியானித்தருளியுள்ளார் ஸ்ரீபாஷ்யகாரர்.

47. இந்த சுலோகத்தின் கருத்து என்னவென்றால், அர்ஜுநா! எவன் இடைவிடாமல் எப்போதும் வேறொன்றிலும் நெஞ்சைச் செலுத்தாதவனாய் என்னையே ஸ்மரிக்கிறானோ, என்னோடு நித்யஸம்ச்லேஷத்தை விரும்பியிருக்கின்ற அந்த பக்தனுக்கு நான் ஸுலபன்—என்பதேயாம். இதில் (தஸ்யாஹம் ஸுலப:) அவனுக்கு நான்எளியன் என்கிற பகுதிக்கு பாஷ்யம் செய்தருளியிருக்கின்ற அழகை என் சொல்வோம்! பாஷ்யபங்க்திகள் வருமாறு:—

48. தஸ்ய நித்யயுக்தஸ்ய-நித்ய யோகம் காங்க்ஷமாணஸ்ய யோகிந:. அஹம் ஸுலப: அஹமேவ ப்ராப்ய:, ந மத்பாவ ஐச்வர்யாதிக:, ஸுப்ராபச்ச. தத்வியோகமஸஹமாந: அஹமேவ த்வம் வ்ருணே. மத்ப்ராப்த்யநுகுணோபாஸன விபாகதத் விரோதி நிரஸநம் அத்யர்த்தமத் ப்ரியத்வாதிகம் ச அஹமேவ ததாமீத்யர்த்த: ☆யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:☆ இதி ஹி ச்ரூயதே. வக்ஷ்யதே ச ☆தேஷாம் ஸதத யுக்தாநாம் பஜதாம் ப்ரீதி பூர்வகம், ததாமி புத்தியோகம் தம் யேநமாமுபயாந்திதே. தேஷாமேவாநுகம்பார்த்த மஹ மஜ்ஞாநஜம் தம:, நாசயாம்யாத்ம பாவஸ்தோ ஜ்ஞாநதீபேந பாஸ்வதா☆ இதி.

49. இவ்வளவும் கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்திகள். இவற்றின் பொருளாவது—என்னோடு எப்போதும் கூடியிருக்க வேணுமென்கிற விருப்பமுடையவனுக்கு அடையத்

தகுந்தவன் நானேயாகிறேன். மிக எளிதாக அடையத்தகுந்தவனுமாகிறேன் நான்; (அதாவது) அவனுடைய பிரிவைப் பொறுக்கமாட்டாதவனாய் (அவனைப் பிரிந்து தரித்திருக்க மாட்டாதவனாய்) நானே அவனை வரிக்கிறேன். என்னையடைவதற்கான உபாஸனத்தின் பரிபக்குவ நிலைமையையும் அதற்குற்ற இடையூறுகள் நீங்குதலையும் என்னிடத்தில் அதிகமான ப்ரீதி முதலியவைகளையும் நானே கொடுக்கிறேன். *நாயமாத்மா ச்ருதியில் இவ்வர்த்தம் ப்ரஸித்தமாயிருப்பதோடு இந்த கீதையிலேயே மேலே பத்தாவது அத்தியாயத்தில் 10, 11 ச்லோகங்களாலும் சொல்லப்படுகிறது என்பதாம். ஸத்ஸம்பிரதாய ஸாரார்த்தம் இங்கே பொதிந்திருக்குமழகு காண்க.

50. ஸ்ரீவசனபூஷணத்தில் (142) "அவன் இவனைப்பெற நினைக்கும்போது பாதகமும் விலக்கன்று" என்று அருளிச் செய்தவிடத்தில் வியாக்கியானத்தில் மணவாளமாமுனிகள்—"உடைமையை உடையவன் சென்று கைக்கொள்ளுமாபோலே ஸ்வாமியான அவன் தானே வந்து அங்கீகரிக்கக் கண்டிருக்கக்கடவ பரதந்த்ரனான இச்சேதநனானவன் தான் பலியாய் தன் ஸ்வீகாரத்தாலே ஸ்வதந்த்ரனான அவனைப் பெற நினைக்குமளவில் அவன் நினைவு கூடாதாகில் 'இப்படி விலக்ஷணையாயிருக்கிற ப்ரபத்தியும் தல்லாபஸாதனமாகாதென்றபடி......ஸ்வாமியாய் ஸ்வதந்த்ரனான அவ்வன் ஸ்வம்மாய் பரதந்த்ரனாயிருக்கிற இவனை ஸ்வேச்சையாலே பெற நினைக்குமளவில் பாதகமும் பிரதிபந்தகமாகமாட்டாதென்கை. இவையிரண்டாலும் ஸ்வகத ஸ்வீகாரானுபாயத்வமும் பரகதஸ்வீகாரோபாயத்வமும் காட்டப்பட்டது." என்றருளிச் செய்திருக்கும் ஸ்ரீஸூக்திகள் மேலே காட்டிய கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்திகளையே அடியாகக்கொண்டவையென்று நன்கு புலப்படுகின்றது. (மணவாளமாமுனிகள்) தாம் முன்பு ஒரு வேஷத்தாலே கீதாபாஷ்யத்தில் வடமொழியாலே அருளிச் செய்ததை பின்பு மற்றொரு வேஷத்தாலே ஸ்ரீவசநபூஷண வியாக்கியானத்தில் தென்மொழியாலே அருளிச்செய்தாரென்று அறுதியிடத் தட்டில்லை.

51. மேலே உதாஹரித்த கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தியில் ஒவ்வொரு வாக்கியமும் ஸாரமானது. (*தத்வியோகம் அஸஹமாந: அஹமேவ தம் வ்ருணே*) ஞானியான சேதநனைப் பிரிந்திருப்பதை எம்பெருமான் தான் பொறுத்திருக்கமாட்டாதவனாய்த் தானே அந்த சேதநனை வரிப்பதாகக் கூறுகின்றவிதுதான் பரகதஸ்வீகாரமென்பது.

52. (*மத்ப்ராப்த்யநுகுணோபாஸந விபாகம் அஹமேவ ததாமீத்யர்த்த:*) என்கிற இந்த வாக்கியமானது ஸ்வகதஸ்வீகாரப் பற்றறுதலை நன்றாகக் கழிக்கிறது. இத்தலையில் விளைவதெல்லாம் எம்பெருமானுடைய க்ருஷிபலமாக விளைகின்றதேயன்றி இவன் தலையாலே விளைவித்துக்கொள்ளுமது ஒன்றுமில்லை யென்கிற ஸத்ஸம்ப்ரதாய ஸாரார்த்தம் தெளிவிக்கப்பட்டது. இந்த இடத்தில் *நாயமாத்மா ச்ருதியையும் எடுத்துக்காட்டியருளின பாஷ்யகாரர் பரகதஸ்வீகாரத்திற்கு அதுவே ப்ரமாணமென்று நிரூபிக்கிறமுகத்தாலே பிறருடைய குத்ஸிதவாதங்களையும் அகற்றினாராயிற்று.

53. இவ்விடத்தில் தாத்பர்ய சந்த்ரிகையில் தேசிகன் அருளிச்செய்துள்ள திவ்ய ஸூக்திகளும் தெள்ளியவே. "உக்தஸ்ய அதிவாதமாத்ரத்வசங்காவ்யுதா

ஸாய ச்ருதிமூலதாமாஹ-யமேவேதி'' என்றருளிச்செய்திருப்பது ஆழ்ந்து நோக்கத் தக்கது யார்க்கு? உண்மையையுணர விரும்புமவர்க்கு.

54. இவ்விஷயத்தில் ஸாரமாகத் தெரிந்துகொள்ள வேண்டியது இவ்வளவே; *த்வத்பாதமூலம் சரணம் ப்ரபத்யே* என்றும் ''புகலொன்றில்லாவடியேன் உன்னடிக்கீழமர்ந்து புகுந்தேனே'' என்றும் சொல்லிக்கொண்டு (அதாவது, நாம் பற்றுகிறோமாகக் காட்டிக்கொண்டு) திருவடிகளிலே விழுந்தாலும், ''இது நாம் பற்றின பற்றன்று; எம்பெருமான் தானே பற்றுவித்தானத்தனை; அவனுடைய க்ருஷி பலித்தத்தனை' என்று உள்ளூர அநுஸந்திக்க ப்ராப்தம். இதையிட்டே பரகத ஸ்வீகார மென்கிறது.

55. ''ப்ரஜாபதிம் த்வோவேத ப்ரஜாபதிஸ் த்வம்வேத யம் ப்ரஜாபதிர் வேத ஸ புண்யோ பவதி'' என்று நம் வேதத்தில் முதல் காண்டம் ஆறும் ப்ரச்நத்தில் ஓதப்படுகிறது. இதுவும் பரகதஸ்வீகாரத்தின் பெருமையையே காட்டுகின்றதென்று *நிவேதயத மாம் க்ஷிப்ரம்* என்றவிடத்து வியாக்கியானத்திலே நிருபித்தருளுகிறார். இந்த ச்ருதியில் ப்ரஜாபதி யென்றது அவனுக்கு அந்தர்யாமியான பகவானைச் சொன்னபடி. ''த்வோ வேத''—ஒருவன் வரிக்கிறான்; த்வ: என்பது ஒரு ஸர்வநாம சப்தம்; அந்ய: என்று அர்த்தம். எம்பெருமானை ஒருவன் வரிக்கிறான்; எம்பெருமான் ஒருவனை வரிக்கிறான்; இவ்விருவருள் எம்பெருமானால் வரிக்கப்படுமவனே புண்ணியன் என்பதாக இந்த ச்ருதியில் அநாயாஸமாகக் கிடைக்கும் பொருள். ...

இந்த பரகதஸ்வீகார விஷயத்தில் நவீனர்களின் கொள்கையைப்பற்றி ஒரு சிறுகதை நினைவுக்கு வருகிறது. பள்ளிக்கூடம் சென்ற ஒரு சிறுமாணுக்கன் அழுதுகொண்டே வீடுவந்துசேர, தகப்பனார் அவனை மார்பிலணைத்துக்கொண்டு ''என்ன சேதி? ஏன் அழுதுகொண்டே வருகிறாய்? வாத்யார் அடித்தாரா? என்று கேட்க, ''இல்லையப்பா, ஆடு என்று சொல்லு என்றார் வாத்யார்; 'இன்றைக்கு ஆ சொல்லுகிறேன், நாளைக்கு டு சொல்லுகிறேனென்றேன் நான்; இன்றைக்கே ஆடு சொல்லணும் என்கிறார் வாத்யார்; இன்றைக்கு ஆ சொல்லி நாளைக்கு டு சொல்லும்படி அப்பா! நீ வந்து அவருக்குச் சொல்லணும்'' என்றானாம் பையன். பரகதஸ்வீகாரத்தை ஒப்புக்கொள்ள மாட்டோமென்கிற இவர்களுடைய கதையும் இதுவேதான். எம்பெருமான் பற்றுகிறானல்லன்; நாமே பற்றுகிறோம். அவன் பற்றுவிக்கப்பற்றுகிறோமென்று தத்துவமுணரவேணும். ''ஸ்வதத்தஸ்வதியா ஸ்வார்த்தம் ஸ்வஸ்மிந் ந்யஸ்யதி மாம் ஸ்வயம்'' என்று வாயால் சொல்லிக்கொண்டே 'அவன் பற்றுவிக்கப் பற்றுகிறோமல்லோமென்று வாதிப்பது வியப்பே. ... ...

## 7. ப்ரபத்தியின் அபராதகோடிப்ரவேசத்தைப்பற்றின விளக்கம்.

56. பகவத் ப்ரவ்ருத்தி விரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தியே ப்ரபத்தி யென்று கீழே நிரூபித்ததானது ஸித்தாந்தத்தினுள்ளும் பரமஸித்தாந்தமானதொரு ஸூக்ஷ்மார்த்த விசேஷம். இது ஒரு புறமிருக்க, ''ஆத்ம ஸமர்ப்பணம் ப்ரபத்தி'' என்பது மொன்றுண்டு. ''எனதாவி தந்தொழிந்தேன்'' ''தோள்களையாரத் தழுவி யென்னுயிரை அறவிலை செய்தனன்'' என்று ஆழ்வாரும் *அஹம் அத்யைவ மயா ஸமர்ப்

பித:* என்று ஆளவந்தாரும் அருளிச்செய்த கணக்கிலே ஆத்ம ஸமர்ப்பணத்தையும் ப்ரபத்தியாகக் கொள்ளக் கடவதாகையாலே இது தன்னை நிரூபித்துப் பார்த்தால் இதை அபராத கோடியிலே எண்ணவேண்டு மென்பர் ஸதாசாரியர்; அப்படிச் சொல்வது அபசாரமென்பர் நவீநர்கள். உண்மையில் இது அபராத கோடியிலேயே சொருகி நிற்கும். *எனதாவி தந்தொழிந்தேன்* என்றவுடனே அதற்கு அநுதபித்து "எனதாவி யார் யானார் தந்த நீ கொண்டாக்கினையே" என்று ஆழ்வார் அருளிச் செய்திருக்கையாலும், ஆளவந்தாரும் "அஹமத்யைவ மயா ஸமர்ப்பித:" என்றபின் "மம நாத யதஸ்தி யோஸ்ம்யஹம் ஸகலம் தத்தி தவைவ மாதவ!, நியதஸ்வமிதி ப்ரபுத்ததீ: அதவா கிம் நு ஸமர்ப்பயாமி தே" என்று அநுதபித்து உண்மையை வெளியிட்டிருப்பதாலும்.

57. ஆளவந்தாருடைய திருவுள்ளத்தை நன்கு விவரிக்கிறோம் காண்மின்; 'மயா அஹம் ஸமர்ப்பித:' என்று முந்துற ஆத்மஸமர்ப்பணம் பண்ணினதாக அருளிச் செய்தார். உடனே, இப்படிச் சொல்வதற்கு எனக்கு என்ன அதிகாரமுள்ளது? நான் என்கிற ஒரு வஸ்துவும், என்னுடையது என்கிற ஒரு வஸ்துவும் ஸ்வதந்த்ரமாகவுண்டோ? "யானே நீ என்னுடைமையும் நீயே" என்றபடி எல்லாம் ஏற்கனவே உன்னுடையதாகவேயிருக்கும்போது, இந்த ஆத்ம வஸ்து உனக்கு இல்லாதது போலவும் இப்போதுதான் என்னால் புதிதாக ஸமர்ப்பிக்கப்படுவது போலவும் பேசிவிட்டேனே பாவியேன்; ஸமர்ப்பிப்பதற்கு நானார்? ஸமர்ப்பிக்க என்னிடம் என்ன இருக்கிறது? அதிலும் உனக்கு நான் ஸமர்ப்பிக்க என்னவுண்டு? இவ்விஷயங்களை ஆராயாமல்தானே அவிவேகியாய் 'அஹமத்யைவ மயா ஸமர்ப்பித:' என்று பிசகாகப் பேசிவிட்டேனே! என்று அனுதாபம்காட்டி "மம நாத! யதஸ்தீத்யாதியான அடுத்த ச்லோகம் அருளிச் செய்தாராயிற்று. கீழ் ச்லோகத்தில் ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணினதாகவும் அதைப்பற்றி இந்த ச்லோகத்தில் அநுதபித்ததாகவும் முடிந்தது. ஆகவே ஆத்ம ஸமர்ப்பணம் அபராத ரூபமென்றதாகிறது.

58. ஸ்ரீவசநபூஷணத்தில் இரண்டு சூர்ணைகள் இங்கே அநுஸந்திக்கவுரியன: 146. "ஸர்வாபராதங்களுக்கும் ப்ராயச்சித்தமான ப்ரபத்திதானும் அபராத கோடியிலேயாய் க்ஷாமணம்பண்ண வேண்டும்படி நில்லா நின்றதிறே. (147) நெடுநாள் அந்ய பரையாய்ப்போந்த பார்யை லஜ்ஜாபயங்கள் இன்றிக்கே பர்த்ரு ஸகாசத்திலே வந்து நின்று என்னையங்கீகரிக்க வேணுமென்று அபேக்ஷிக்குமாபோலேயிருப்பதொன்றிறே இவன் பண்ணும் ப்ரபத்தி" என்பன அவை. இங்கு வியாக்கியானத்தில் மணவாள மாமுனிகளின் விவரணத்தை யநுபவித்துத் தெளிக.

59. நம்மாழ்வாரும் ஆளவந்தாரும் முன்னம் ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணிப் பின்னை அதற்காக அநுதபித்தார்களென்றும் ஆகவே ஆத்ம ஸமர்ப்பணம் அபராத ரூபமென்றும் சொல்லுகிற பக்ஷத்தில், அநுதாப யோக்யங்களான பாபங்களைப் போலே ஆத்ம ஸமர்ப்பணமும் ஒரு பாபமாகவன்றோ தேறுகிறது. அது செய்யக் கூடாத காரியம் என்று ஏற்பட்டுவிடாதா? இவ்விஷயம் ஆழ்வார்க்கும் ஆளவந்தார்க்கும் முன்னம் தெரியாமலில்லையே; தெரிந்து பாபத்தைப் பண்ணுவானேன்? பிறகு அநுதபிப்பானேன்? * ப்ரக்ஷாலநாத்தி பங்கஸ்ய தூராத் அஸ்பர்சனம்

வரம்* (முன்னம் சேற்றில் காலை வைத்துப் பின்பு அதை அலம்புவதைக்காட்டிலும் சேற்றில் காலைவைக்காமலே யிருந்துவிடலாமே) என்கிறப்போலே ஆத்ம ஸமர்ப் பணமென்கிற பேச்சையே ப்ரஸ்தாவியாமலிருந்துவிடலாமே என்கிற வாதங்கள் இங்கு விளையக்கூடியதுண்டு. இதற்கு ஸமாதானமாகப் பெரியவாச்சான்பிள்ளை யருளிச் செய்வது பாரீர்:—''[தே கிம்நு ஸமர்ப்பயாமி] இத்தையுடைய உனக்கு எத்தை ஸமர்ப்பிட்பேன்? ஸமர்ப்பணீயமேது? ஸமர்ப்பகர் ஆர்? ஸமர்ப்ப ணீயமாகைக்கு ஸ்வாம்யமில்லை. ஸமர்ப்பிக்கைக்கு ஸ்வாதந்த்ர்யமில்லை. ஸம்ஸார பீதியால் ஸமர்ப்பிக்கையும் ஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞாநத்தால் அநுசயிக்கையுமாக இரண்டும் யாவந் மோக்ஷம் அநுவர்த்திக்கக் கடவது'' என்று. இதனால் தேறினது என்னவென்றால், ஆத்மஸமர்ப்பணம் பண்ணுகையும் அது பண்ணினதற்காகப் பிறகு அநுதாபம் காட்டுகையுமாகிற இரண்டும் சாஸ்த்ரார்த்தம் என்றதாகத் தேறிற்று. இது நவீனர்களின் மனத்தில் ஏறுவது அரிது.

60. இப்படி வியாக்கியானம் செய்யலாமோ? முந்துற ஆத்மஸமர்ப்பணம் பண்ணவேணும், பின்னை அநுதாபமும் படவேணும் என்றால் இது நன்றாக இல் லையே. தப்பான காரியத்திற்கன்றோ அநுதபிக்க வேண்டுவது—என்றே இன்னமும் நவீநர்களுடைய நெஞ்சு தளும்பியேயிருக்கும். கேண்மின்; இந்த ஸ்தோத்ரரத்னத் திலேயே கீழே முப்பத்திரண்டாவது ச்லோகம் முதல் நாற்பத்தாறும் ச்லோகமளவும் பதினைந்கு ச்லோகங்களாலே எம்பெருமானுடைய நித்ய கைங்கரியத்தைப் பரம புருஷார்த்தமாகப் பிரார்த்தித்த ஆளவந்தார் தாமே அடுத்த (47) *திகசுசிமவி நீதம்* என்கிற ச்லோகத்தால் கீழே அப்படி பிரார்த்தித்ததற்கு மஹத்தான அநு தாபத்தை ஆவிஷ்கரித்திருக்கின்றாரென்பது அபரோக்ஷம். இங்கு ஆராயவேண் டுமே. கைங்கர்ய ப்ரார்த்தனை கூடுமா கூடாதா? *பவந்தமேவாநுசரந் நிரந்தரம் ......கதாஹமைகாந்திக நித்யகிங்கர: *நித்ய கிங்கரோ டவாநி* இத்யாதிகளை நோக்குமிடத்து கைங்கர்ய ப்ரார்த்தனை கூடுமென்று விளங்காநின்றது. ''திகசுசி மவிநீதம்... : தவ பரிஜநபாவம் காமயே காமவ்ருத்த:'' என்றதனால் அந்த கைங் கர்ய ப்ரார்த்தனைக்காக ஆத்ம கர்ஹை செய்துகொண்டதை நோக்குமிடத்து கைங்கர்ய ப்ரார்த்தனை கூடாதென்றே விளங்காநின்றது. வேதாந்த தேசிகருங் கூட ''தத்கிங்கரத்வவிபவே ஸ்ப்ருஹயாபராத்யந்'' என்று கைங்கர்ய ப்ரார்த்தனைக் குப் பூர்வபாவியான கைங்கர்யருசியையுங்கூட அபராத கோடியிலே வைத்துப் பேசி யுள்ளார். அங்ஙனம் பேசினவர் தாமே கைங்கர்ய ப்ரார்த்தனையையும் பல பல ச்லோகங்களாலும் செய்யுள்களாலும் செய்தருளியிருக்கின்றார். இவை பரஸ்பர விருத்தங்களாகத் தோன்றவில்லையா? உண்மையில் இரண்டும் சாஸ்த்ரார்த்தமே யென்று நிஷ்கர்ஷித்தாலொழிய வழியில்லையன்றோ. கைங்கர்ய ப்ரார்த்தனையும் பண்ணவேணும்; 'ஸார்வபௌமனை நீசப்பெண் ஆசைப்படுமாபோலே ஐயோ என்ன ஆசைப்பட்டோம்! இது தகுமா?' என்று உடனே நெஞ்சாறல் படவும் வேணும் என்றே சாஸ்த்ரார்த்தம் சிக்ஷிதமாகிறது.

61. மற்றொன்றுங் காண்மின்:—*ஒட்டுரைத் திவ்வுலகுன்னைப் புகழ்வெல் லாம் பெரும்பாலும் பட்டுரையாய்ப் புற்கென்றே காட்டுமால் பரஞ்சோதி*

(திருவாய்மொழி 3-1-2) என்று. பரஞ்சோதியான எம்பெருமானுக்கு உலகத்திலுள்ள க்ஷணபங்குரமான தாமரை, மேகம், காயாம்பூ முதலானவற்றை ஒப்பாகச் சொல்லுதல் இழிவு என்கிறாராழ்வார். இஃது உண்மையா அன்று? உண்மையாகில் 'கொண்டல் வண்ணா! கடல் வண்ணா! காயா வண்ணா!' என்று பலகாலும் ஆழ்வார்கள் கதறுகின்றார்களே, இது என்ன? என்று ஆராயவேண்டாவோ? அன்றியும், பெரிய திருவந்தாதியில் "புகழ்வோம் பழிப்போம் புகழோம் பழியோம்" என்று எம்பெருமானை நாம் புகழ்வதானது பழிப்பதேயாகு மென்கிறார் நம்மாழ்வார். இப்படி சொல்லிக்கொண்டே மேன்மேலும் எம்பெருமானைப் புகழ்வதற்கே ஒருப்படுகின்றாரே, இது என்ன? என்று இதையும் ஆராய வேண்டாவோ?

62. இன்னமும்; கூரத்தாழ்வான் அதிமாநுஷ ஸ்தவத்தில் "யா கம்ஸமுக்ய்ய ந்ருபகீட நிபர்ஹணோத்தா ஸா நிர்ஜித த்ரிஜகதஸ் தவ நைவ கீர்த்தி:" என்று, கம்ஸன் முதலிய அரசர்களாகிற புழுக்களை ஸர்வேச்வரன் தொலைத்தானென்று சொல்லி அவனை யேத்துவதானது மூவுலகத்தையும் வென்றிருக்கிற அவனுக்குப் புகழ்ச்சியன்று, இகழ்ச்சியே என்று சொல்லிவைத்து அப்படிப்பட்ட கம்ஸவதம் முதலிய சரித்திரங்களையே மீண்டுமீண்டும் பேசிப் புகழ்கின்றாரே, இஃது என்ன? என்று இதையும் ஆராயவேண்டுமே. இங்ஙனே பல விஷயங்களுள்ளன. இவை ஒன்றுக்கொன்று அபவாதமாகுமோ? இவையெல்லாம் பரஸ்பர விருத்தம் போல் தோன்றினாலும் உண்மையில் விருத்தமன்றே; இரண்டு படிகளும் சொல்லித் தரவேண்டியவையத்தனையன்றோ!

63. இவைபோலவே ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணுகையும் பின்பு அதற்கு அநுதபிப்பதாகப் பேசுகையுமாகிற இரண்டும் சாஸ்த்ரார்த்தமென்று அறுதியிட்ட பின் இதில் ப்ரத்யாக்க்யாந ப்ரஸக்தியில்லை. முதலில் ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணிவிட்டுப் பிறகு அதற்கு அநுதாபம் காட்டுகிற ச்லோகத்தில் ஆளவந்தார் "இதி ப்ரபுத்ததீ:" என்கிறார். கீழ் ச்லோகம் சொல்லும்போது [அதாவது ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணும்போது] தாம் அவிவேகியாயிருந்ததாகவும், உடனே விவேகம் பெற்று இந்த ச்லோகம் [அநுதாப ச்லோகம்] சொல்லுகிறதாகவும் இதனால் தெரிகிறது. ஏற்கனவே மஹாவிவேகநிதியாகப் புகழ்பெற்ற ஆளவந்தார் முன் ச்லோகம் ஸாதிக்கும்போது அவிவேகியாயிருந்தார். பின் ச்லோகம் ஸாதிக்கும்போது விவேகம் பெற்றுவிட்டார் என்கை ஏலாது. அப்படியிருக்க (இதி ப்ரபுத்ததீ:) என்று ஸாதித்தது ஏன்? என்னில்; க்ரமேண சாஸ்த்ரார்த்தங்களை வெளியிட வேண்டுமிடத்து இங்ஙனே சொல்வது க்ரந்தசைலி.

64. இன்பமிகு மாறுயிரமருளிச்செய்த திருக்குருகைப்பிரான் பிள்ளானும் "எனதாவியுள் கலந்த பாசுர வியாக்யானத்தில்—"இப்படி எம்பெருமானோடு கலந்த கலவியாலுள்ள நிரவதிக ப்ரீதியாலே அறிவழிந்து இவ்வாத்மா நம்முடையதன்றென்று நிருபிக்கமாட்டாராய் அவன் தம்மோடு கலந்த இப்பெருநல்லுதவிக்குக் கைம்மாறாகத் தம்முடைய ஆத்மாவை அவனுக்கு மீளா வடிமையாகக் கொடுத்து, பின்னையும் தம்முடைய ஸ்வரூபத்தை உள்ளபடி விவேகித்து" என்றருளிச்செய்தார். அவ்விடத்திற்கும் இதுவே நிர்வாஹம். ஆகவே முந்துற ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணு

கையும் பின்னே ஊதற்காக அநுசய ப்ரகாசனம் பண்ணுகையுமாகிற இவ்விரண்டும் பரஸ்பராபவாதமல்லாத சாஸ்த்ரார்த்த மென்றதாயிற்று.

65. இதற்குமேல் ஒரு சிறிய கேள்வி தோன்றும்; ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணவேணுமென்பதும் சாஸ்த்ரார்த்தமாக ஆய்விட்டபடியாலே அந்த ஆத்ம ஸமர்ப்பணத்தை நாம் எப்போது செய்கிறோம் என்று;—இதைப்பற்றி தேசிகனே ஸுவ்யக்தமாகத் தெரிவித்துள்ளார். ரஹஸ்யத்ரய ஸாரத்தில் க்ருதக்ருத்யாதிகாரத்தில்—"பகவத்க்ருபையடியாக உண்டான ஸதாசார்ய கடாக்ஷ விஷயீகாரத்தாலே வந்த த்வயோச்சாரண அநுச்சாரணத்தாலே ப்ரபத்தி யனுஷ்டானம் பிறந்தபின்பு சரண்ய ப்ரஸாதனங்களில் இதுக்குமேல் ஒன்றில்லாமையாலே" இத்யாதி ஸ்ரீஸூக்திகளிருப்பது ப்ரஸித்தம். இந்த வாக்யத்தில் "த்வயோச்சாரண அநுச்சாரணத்தாலே ப்ரபத்த்யநுஷ்டானம் பிறந்த பின்பு" என்று ஸாதித்திருப்பதொன்றே தெளிவு பிறப்பிக்குமது. பஞ்சஸம்ஸ்கார காலத்தில் ஆசார்யன் த்வயத்தை உபதேசிக்குமளவில் அவர் உச்சரிக்க சிஷ்யன் அநுச்சாரணம் பண்ணுவதனுல் ப்ரபத்தியநுஷ்டானம் பிறந்ததென்று தேறிற்று. த்வயத்தின் பொருள் நெஞ்சில் ஊறவூற, த்வயார்த்த ப்ரகாசகமான திருவாய்மொழிப் பாசுரங்கள் ஆசார்ய ஸ்ரீஸூக்திகள் இவற்றின்பொருள் நெஞ்சில் தேங்கத் தேங்க, அதுவே பழுத்த ஆத்ம ஸமர்ப்பணமாகத் தலைக்கட்டும்; [இதைப்பற்றி விரிவான நிரூபணம் மேலேயும் வரும்.] ... (7)

## 8. உபாயாந்தரங்களின் ஸ்வரூப விருத்தத்வ நிரூபணம்.

66. ப்ரபத்தியொழிந்த மற்றை யுபாயங்கள் உபாயாந்தரங்களெனப்படும். உபாஸநம் முதலான அவற்றிலே, ப்ரபந்நர்களான நமக்கு ப்ராப்தியில்லையென்பது ஸர்வஸம்ப்ரதிபந்நம். சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டுள்ள அந்த உபாயாந்தரங்களை நாம் விடுகைக்கு ஹேது என்ன? என்கிற விசாரத்தில்; அவற்றை (உபாயாந்தரங்களை) அறிகைக்கும் அநுஷ்டிக்கைக்கு மீடான ஜ்ஞாந சக்திகளில்லாமையே ஹேது என்பர் பிறர். அவையன்று ஹேது. பகவானுக்கு அத்யந்தம் பரதந்த்ரப்பட்டிருக்கையாகிற ஸ்வரூபத்துக்குச் சேராதென்னுமதுவே முக்ய ஹேதுவென்று ஸத்ஸம்ப்ரதாய ஸித்தாந்தம். அஜ்ஞானமும், அசக்தியுமடியாக விடுவதானுல், ஜ்ஞான சக்திகளுண்டாகில் அவற்றைப் பரிக்ரஹிக்கவேண்டி வருமன்றே; ஸ்வரூப விரோதியென்று விட்டாலன்றோ மறுவலிடாதொழிவது; ஆகவே ஸ்வரூபவிருத்த மென்னுமதுவே ப்ரதாந ஹேதுவாகும்.

67. உபாயாந்தரங்களும் மோக்ஷோபாயமாயிருக்க அவற்றை இப்படி கழிக்கலாமோ? அவை யார்க்கு உபாயம்? என்னில், ஸ்வரக்ஷணத்தில் ஸ்வப்ரயத்ந நாற்றத்தையும் ஸஹியாத ஸ்வரூபத்தை உள்ளபடி யறிகைக்கீடான ஞானமில்லாதவர்களுக்கே அவை உபாயமாயிருக்கும். ஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞான முடையவர்களுக்கு அபாயமாயே யிருக்கும். அத்யந்த பாரதந்த்ர்யமாகிற ஸ்வரூபத்துக்கு ஸ்வப்ரயத்நரூபமான அவை நாசகமாகுமன்றோ.

68. நம்மாழ்வார் பெரிய திருவந்தாதியில் (6) *நெறிகாட்டி நீக்குதியோ நின்பால்* என்றருளிச்செய்த பாசுரம் இதற்கு ப்ரமாணமாக அநுஸந்தேயம். இப்

பாசுரத்தின் பொருளைக் கேளீர். நெறியென்றால் வழி; வழியாவது உபாயம். பகவத்கீதையில் சரம ச்லோகத்திற்குக் கீழே விரிவாகச் சொல்லப்பட்டுள்ள ஸாதநாந்தரங்களை இங்கு நெறி யென்கிறது. எம்பெருமான் யாரை அநுக்ரஹிக்கத் திருவுள்ளம் பற்றுகிறானோ அவர்களை நோக்கி 'நீங்கள் எவ்விதமான அல்லச்சலும் படவேண்டா; என்னையே தஞ்சமாக உறுதிகொண்டு மார்விலே கைவைத்து உறங்குங்கள்' என்பன்; எவர்களைக் கைவிட நினைக்கிறானோ அவர்களுக்கு அருந்தொழில்களை அளவில்லாதபடி விதித்து 'இவற்றைச் செவ்வனே செய்து பேறு பெறுங்கள்' என்பன். ஆகவே நெறிகாட்டுகையென்பதும் நீக்குகை யென்பதும் பர்யாயம். நெறியைக் காட்டுகையாவது, 'இது கர்மயோகம், இது பக்தியோகம்; இவற்றுள் எது உமக்கு ஸாத்யமோ அதனை அநுஷ்டிக்கக் கடவீர்' என்று சொல்லித் தான் உதாஸீநனுகை. (நெறி காட்டி நின்பால் நீக்குதியோ) உன்னை யொழிய வேறொருபாயத்தைக் காட்டி உன் பக்கலில் நின்றும் என்னை அகற்றப் பார்க்கிறாயோ வென்று ஆழ்வார் எம்பெருமானை நோக்கிக் கேட்கிறபடி. நள மஹாராஜன் தமயந்தியை உடுத்த புடவையிலே ஒரு தலைப்பை யறுத்து 'இது விதர்ப்பதேசம் போகிறவழி, இது கோஸலதேசம் போகிறவழி; எந்த வழியில் வேணுமானாலும் போய்க்கொள்' என்று சொல்லிவிட்டு அகன்றாப்போலே அகலப் பார்க்கிறாயோ? என்று வினவுகிறபடி. ஆக இப்பாசுரத்தால், உபாயாந்தரங்களில் அந்வயிக்கை எம்பெருமான் பக்கலில் நின்றும் அகல்வதற்குறுப்பு என்று தேறிநின்றது. *நெறிகாட்டி நீக்குதியோ* என்ற விடத்தில் நீக்குகையாவது பரதந்த்ரமான வஸ்துவை ஸ்வதந்த்ரக்ருத்யமான உபாயாநுஷ்டானத்திலே மூட்டித் தனக்கு அசலாக்குகையென்று மணவாளமாமுனிகளின் திருவாக்கு.

69. இவ்விஷயத்தில் திருக்குருகைப்பிரான் பிள்ளான் பணிப்பதொரு நல்வார்த்தையுண்டு; ஸ்ரீவசநபூஷணத்திலே வ்யக்தம் ''மதிராபிந்து மிச்ரமான சாதகும்பமய கும்பகத தீர்த்த ஸலிலம்போலே அஹங்காரமிச்ரமான உபாயாந்தரம்'' என்று பிள்ளான் பணிப்பராம். பொற்குடத்திலிருக்கும் கங்கா தீர்த்தஜலமானது, பாத்ரசுத்தியுமுண்டாய்த் தானும் பரிசுத்தமாயிருக்க, மத்யபிந்துவின் கலப்பினாலே நிஷித்தமாகிறாப்போலே, ஸ்வதோ நிர்மலத்வாதிகளாலே பரிசுத்தமாயிருக்கின்ற ஆத்மவஸ்துவிலுள்ளதாய், பகவானையே பற்றியதாதலால் பரிசுத்தமாயுமிருக்கின்ற உபாயாந்தரமானது ஸ்வயத்ந மூலமான அஹங்காரஸ்பர்சத்தாலே ஜ்ஞானிகள் அங்கீகரியாதபடி நிஷித்தமாயிருக்கும் என்பது மேற்குறித்த பிள்ளான் திருவாக்கின் தாற்பரியம். ''அஹங்கார மிச்ரமான உபாயாந்தரம்'' என்ற இவ்வாக்கியத்தில் கூறும் அஹங்காரமாவது இன்னதென்று தெளியவேணும். தானே கர்த்தாவென்றும் தானே போக்தாவென்றும் அநுஸந்திப்பதுதான் இங்கு அஹங்காரமாவது. கீதையில் பதினெட்டாவது அத்யாயத்தில் (6, 9 ச்லோகங்களில்) *ஸங்கம் த்யக்த்வா* என்று உபாயாந்தர நிஷ்டனுக்குச் சொன்ன அஹங்காரத்யாகமாவது—ஸ்வதந்த்ரனாக நான் கர்த்தா போக்தா என்கிற ஸ்தூலாஹங்காரத்யாகம். ஆயினும் அவனுக்கு ஸூக்ஷ்மாஹங்காரமொன்று அவர்ஜநீயமாயுண்டு, அது ஸ்வயத்நரூபதா நிபந்தநம். அதுவும் நிஷித்தமென்று பிள்ளானுடைய திருவுள்ளம். இது எங்ஙனே தெரிகின்றதென்னில், அவரது திருவாக்கில் ''மதிராமிச்ரமான''

என்னுதே "மதிரா பிந்து மிச்ரமான" என்று ஸாதிக்கையாலே அந்த பிந்துபதத்தினால் இது தெரிகின்றது. கெடுப்பதற்கு அணுவளவும் போதுமாதலால், உபாயாந்தர ப்ரவ்ருத்தியில் ஸூக்ஷ்மாஹங்கார முண்டாகி அதுதான் அவர்ஜநீயமாயிருந்து அது அற்பமானாலும் ஸ்வரூப நாசகத்வத்தில் குறையற்றதென்று காட்டினபடி. "ஸ்வயத்நநிவ்ருத்தி பாரதந்த்ர்யபலம்" என்கிற ஸ்ரீவசநபூஷண திவ்யஸூக்தியும் காண்க. *என்னுன்செய்கேன்* என்கிற ஆழ்வார் பாசுரத்தை ஸ்ரீவசநபூஷணத்திலெடுத்தாண்டவிடத்து மணவாள மாமுனிகளின் வியாக்கியான ஸ்ரீஸூக்திகளில் வைசத்யமும் காணத்தக்கது.

70. இப்படிப்பட்ட ஸத்ஸம்ப்ரதாயார்த்தத்தை தேசிகன் ந்யாஸதிலகத்தில் வெகு அழகாகக் காட்டியுள்ளார். எங்ஙனே யென்னில்; அதில்—

"ஆர்த்தேஷ்வாசுபலா ததந்பவிஷயேப்யுச்சிந்ந தேஹாந்தரா
வஹ்ந்யாதேரநபேக்ஷணாத் தநுப்ருதாம் ஸத்யாதிவத் வ்யாபிநீ;
ஸ்ரீரங்கேச்வர! யாவதாத்ம-நியத-த்வத்பாரதந்த்ர்யோசிதா
த்வய்யேவ த்வதுபாரதிர ப்ஹித-ஸ்வோபாயபாவாஸ்து மே"

என்பது ஒரு ச்லோகரத்நம். இதில் ப்ரபத்திக்கு இட்டிருக்கிற விசேஷணங்களைத் தனையும் பக்தி வ்யாவர்த்தகங்கள் விவரித்துக் காட்டுகிறோம் காண்மின்; [ஆர்த்தேஷு ஆசுபலா] பக்தியானது—ஆர்த்தப்ரபந்நர்திறத்தில் விளம்பித்துப் பலனளிக்கும், ப்ரபத்தி அங்ஙனன்றிக்கே விரைவில் பலனளிக்கும் [ததந்யவிஷயேபி உச்சிந்ந தேஹாந்தரா] ததந்யவிஷயே என்றது த்ருப்த ப்ரபன்ன விஷயத்திலென்றபடி பக்தியானது தேஹாந்தர ஸம்பந்தத்தை யறுத்துத் தருவதில் நியதியுடையதன்று; ப்ரபத்தி நியமேந தேஹாந்தர ஸம்பந்தத்தை யறுத்துத்தரும்.

[வஹ்ந்யாதே: அநபேக்ஷணாத் தநுப்ருதாம் ஸத்யாதிவத் வ்யாபிநீ] பக்தியாகிற உபாயத்தின் அநுஷ்டானத்தில் அக்நிகார்யம் முதலியவை அபேக்ஷிதமாயிருக்கையாலே அது அதிக்ருதாதிகாரமாயிருக்கும்; ப்ரபத்தியில் அவ்வபேக்ஷையில்லாமையாலே ஸத்யம் சொல்வதற்கு எப்படி ஸர்வரும் அதிகாரிகளோ அப்படியே ப்ரபத்தியிலும் ஸர்வரும் அதிகாரிகள்.

இனி இதற்கு அடுத்த விசேஷணமே ப்ரக்ருத விஷயத்திற்கு உற்று நோக்கத் தக்கது. [யாவதாத்ம நியத த்வத் பாரதந்த்ர்யோசிதா] பக்தி ஸ்வரூபவிருத்தம், ப்ரபத்தி ஸ்வரூபாநுரூபம் என்கிறது. யாவதாத்மநியதமான அத்யந்த பாரதந்த்ர்யத்துக்கு ப்ரபத்தி உசிதமாயிருக்குமென்றபோதே ப்ரபத்திப்ரதிகோடியான பக்தியானது அந்த பாரதந்த்ரியத்திற்கு விருத்தமாயிருக்குமென்னுமிடம் ஸ்பஷ்டமாகத் தெரிவிக்கப்பட்டதாயிற்றன்றோ: ஆகவே தேசிகன் திருவுள்ளமும் உபாயாந்தரம் ஸ்வரூப விருத்தமென்பதே யென்று தேறி நின்றது. "மதிராபித்துமிச்ரமான" இத்யாதியான பிள்ளான் ஸ்ரீஸூக்தியை ரஹஸ்யத்ரயஸாரத்தில் கண்டிந்திருப்பதுபற்றி மேலே விவரிப்போம்.

71. உபாயாந்தரங்களை ஸ்வரூப விருத்தமென்ன வொண்ணுது, இவை *அகிஞ்சநோநந்யகதி:* என்றிருக்கும் அதிகாரிக்கு ஸ்வாதிகார விருத்தங்களென்ன

ப்ராப்தம்—என்றும் அவர் தாமே ரஹஸ்யத்ரயஸாரத்தில் பேசியிருப்பது தெளிந்த தசையில். ந்யாஸதிலகத்திலருளிச் செய்தபடியே இவை அத்யந்த பாரதந்த்ர்ய ஸ்வரூபத்துக்குப் போராதென்கிற ஸத்ஸம்ப்ரதாய நிஷ்கர்ஷம் காலவினிது. அதிகாரவிருத்தமென்னவேணுமென்பதும் கட்டகுட்யாம்ப்ரபாதமத்யிலே. ...

## பிள்ளான் ஸ்ரீஸூக்திக்கு தேசிகனது மறுப்பு

கீழே உதாஹரித்த "மதிராபிந்துமிச்ரமான சாதகும்பமய கும்பகத தீர்த்த ஸலிலம்போலே அஹங்காரமிச்ரமான உபாயாந்தரம்" என்கிற ஸ்ரீஸூக்தி திருக்குருகைப்பிரான் பிள்ளான் பணித்ததாக ஸ்ரீவசனபூஷணத்திலுள்ளது. இதைக்கண்ட வேதாந்தவாசிரியர் இதையும் கண்டிக்கவேணுமென்று அஸ்தாநே கலங்கி நினைத்து ரஹஸ்யத்ரயஸாரத்தில் "மத்யோபஹத பாத்ரஸ்த நீர்த்த த்ருஷ்டாந்த வர்ணநம், அஹங்காராந்வயே து ஸ்யாத் ப்ரபத்நாவபி பக்திவத்." என்று ஒரு காரிகையெழுதி க்ருதக்ருத்யராய் விட்டார். இந்த காரிகையில் பூர்வார்த்தத்தாலே *மத்யோபஹத பாத்ரஸ்த தீர்த்தத்தை த்ருஷ்டாந்தீகரித்து ஒருவர் பக்திக்குக் குறைகூறினதாகக் காட்டி உத்தரார்த்தத்தாலே அதற்குக் கண்டனம் ஸ்பஷ்டமாகச் செய்யப்பட்டிருக்கின்றது. மத்யோபஹதபாத்ரஸ்த தீர்த்த த்ருஷ்டாந்தவர்ணனம் செய்தவர் யாரென்று கேட்டால் திருக்குருகைப்பிரான்பிள்ளான் என்று சொல்லித் தீர வேணுமேயொழிய வேறொருவரை சொல்லமுடியாது. "மதிராபிந்துமிச்ரமான..." இத்யாதி ஸ்ரீவசநபூஷணோபாத்த ஸ்ரீஸூக்தியைக் கொண்டு தானே *மத்யோபஹத பாத்ரஸ்தேத்யாதி காரிகை அவதரித்தது. *தன்னால் வரும் நன்மை யித்யாதியான பிள்ளான் வார்த்தைக்கு ஒரு தாத்பர்யவர்ணனம் பண்ணினதுபோலே இதற்கும் பண்ணியிருக்கலாம். அல்லது, "பிள்ளான் இப்படி யொருகாலும் பணித்திருக்க மாட்டார்" என்றாவது எழுதியிருக்கலாம். இரண்டும் அஸாத்யமாகவே கண்டித்துத் தொலைப்பதற்குமேல் கர்த்தவ்யமில்லை யென்று துணிந்து *இதி மந்தைரிதம் ப்ரோக்தம்* என்றோ *க்ரந்த ஜ்ஞைரபஹாஸ்யம் தத்* என்றோ எழுதக் கைவராமல் "இது பிள்ளான் திருமுடியில் கட்டின திருப்பரிவட்டம்" என்று ஆழ்ந்த அறிவுடையார் மட்டுமே தெரிந்துகொள்ளும்படியாக காரிகையிட்டுக் கடாசிவிட்டார். இது இப்படித்தானோ? வேறுவிதமா? என்று விசிகித்ஸை யுண்டாகும் சிலருக்கு; இங்குத் தெரிவித்ததோரிதிஹாஸம் ஸ்ரீராமாநுஜன் 27ல் விரிவாகக் காண்க.

இஞ்சிமேட்டு அழகியசிங்கர் ஸ்வாமியின் ஸுபோதிநீ வியாக்கியானம் அற்புதமாக அச்சிடப்பட்டுத் தேசமெல்லாம் திகழ நிற்கிறது. அதில் இரண்டாவது ஸம்புடத்தில் (பக்கம் 494ல் கடைசியிலிருந்து மூன்றாவது வரி காண்க.) அதாவது,

> "சிலர் *மதிராபிந்து மிச்ரமான சாதகும்பமயகும்பகத தீர்த்த ஸலிலம் போலே அஹங்கார மிச்ரமான உபாயாந்தரம்* என்கிற பிள்ளான் வாக்யத்தைக்கொண்டு பக்தி அஹங்கார கர்ப்பமாகையால் ஸ்வரூப விருத்தமென்பர்கள், அது அநுபபந்நம்".

என்று ஸாதித்திருக்கிறார். அநுபபத்தியை விளக்கவில்லை, "ப்ரபத்தாவபி பக்திவத்" என்கிற மூலத்தை மட்டுமே தமிழாக்கம் செய்திருக்கிறார். அநுபபந்நம் என்று கண்டிக்கப்பட்ட அர்த்தம் பிள்ளானுடையதே யென்பதில் ஸந்தேஹமில்லையே.

அநுபபந்நமாகவே யிருக்கட்டும். தேசிகன் திருவாக்கில் அநுபபந்நமென்று வந்தால் அது உபபன்னமாயிருக்க வழியேது? 'அநுபபன்னமன்று, உபபன்னந்தான்' என்று இங்கு நாம் ஸமர்த்திக்க வரவில்லை. இங்கு விஷயமென்ன தெரியுமோ? தேசிகன் பிள்ளானுடைய ஸ்ரீஸூக்தியொன்றையும் தழுவாததோடு அதைக் கண்டித்திருப்பதுமுண்டு என்பதொன்றேயாம். இது சீமைத்தீர்ப்பேயாம்.

# 9. விஹிதவிஷய நிவ்ருத்தி தன்னேற்றமென்பதுபற்றி.

72. க்ருஹஸ்தாச்ரம தர்மமாக விஹித விஷய போகம் ப்ராப்தமானாலும், அநந்யார்ஹ சேஷத்வ அநந்ய சரணத்வங்களோடுகூட அநந்ய போக்யத்வமென்கிற விலக்ஷணமான தன்மையையும் பெற்றிருக்கின்ற விசேஷாதிகாரிக்கு அந்த விஹித விஷய போகம் அருவருக்கத்தக்கதாய் விடத்தகுந்ததேயாகுமென்பது ஸதாசாரய ஸித்தாந்தம். சாஸ்த்ரங்களில் ஸ்வதார போகம் நியமமாக விதிக்கப்பட்டு அது தவிர்த்தால் தோஷமும் பிரதிபாதிக்கப்பட்டிருக்கையாலே விஹிதவிஷய நிவ்ருத்தி அசாஸ்த்ரீயமென்பர் நவீநர். ஸ்ரீவசநபூஷணத்தில் இரண்டு மூன்றிடங்களில் உத்தமாதிகாரிக்கு விஹிதவிஷய நிவ்ருத்தியைத் தன்னேற்றமாக அருளிச்செய்கிறார். மிகுஞானச் சிறுகுழவியான எம்பெருமான் சோதிவாய் திறந்து பணித்த கீதையில் (8-3) எட்டாவது அத்யாயத்தில் மூன்றாவது ச்லோகத்தின் பாஷ்யத்தில் பாஷ்யகாரர் வெளியிட்டருளின விசேஷார்த்தமிது. அதனை விவரிப்போமிங்கு:

73. கீழ் ஏழாவது அத்யாயத்தின் முடிவில் கண்ணபிரான் *ஜராமரண மோக்ஷாய* என்கிற இருபத்தொன்பதாம் ச்லோகத்தில் "தே ப்ரஹ்ம தத் விது: க்ருத்ஸ்நமத்யாத்மம் கர்ம சாகிலம்" என்று ஒரு வார்த்தை சொன்னான். அது கேட்ட அர்ஜுனன் அந்த வார்த்தைக்கு உண்மையான பொருளைத் தெரிந்து கொள்ள வேண்டிக் கண்ணனையே கேள்வி கேட்கிறான் எட்டாவது அத்யாயத்தின் 1, 2-ச்லோகங்களினால், "கிம் தத் ப்ரஹ்ம கிமத்யாத்மம் கிம் கர்ம புருஷோத்தம!" என்று தொடங்கிக் கேள்விகள் உள்ளன. மூன்றாவது ச்லோகம் தொடங்கிக் கண்ணனுடைய விடை வெளிவருகின்றது. கிம் கர்ம? என்ற கேள்விக்குக் கண்ணனுடைய விடை "பூதபாவோத்பவகரோ விஸர்க்க: கர்மஸம்ஜ்ஞித:" என்பது. இங்கு விஷயமென்னவென்றால், கேண்மின்.

74. சிலவற்றை அறியவேண்டும் என்று பகவான் நியமித்துவருகையில் கருமத்தை அறியவேண்டும் என்று சொல்லியிருந்ததனால் கருமமென்றால் எது? என்று அர்ஜுனன் கேட்க நேர்ந்தது. அதற்கு பகவான் விடை கூறியுள்ளார். ஒருவன் ஒன்றை யறிவது நன்று, பற்றுவதற்காகவும் ஆகலாம், விடுவதற்காகவும் ஆகலாம். நல்லதாயிருந்தால் பற்றுவது, கெட்டதாயிருந்தால் விடுவது. ஆகவே நல்லதையும் தெரிந்துகொள்ள வேண்டும், கெட்டதையும் தெரிந்துகொள்ள வேண்டும். இங்கே தெரிந்துகொள்ள வேண்டியதாகக் கூறப்பட்ட கருமம் நல்லதன்று, கெட்டது, என்பதாக பகவானுடைய விடையினால் தெரிகின்றது. *பூதபாவோத்பவகரோ விஸர்க்க: கர்மஸம்ஜ்ஞித:* என்பதற்கு நம்முடைய ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்திருக்கிற அர்த்தம் வருமாறு:—

''பூதபாவ:—மநுஷ்யாதிபாவ: ததுத்பவகரோ யோ விஸர்க்க: - *பஞ்சம்யா மாஹுதாவாப: புருஷவசஸோ பவந்தீதி ச்ருதிஸித்தோ யோஷித் ஸம்பந்தஜ:; தச்சாகிலம் ஸாநுபந்தம் உத்வேஜநீயதயா பரிஹரணீயதயா ச முமுக்ஷுபி: ஜ்ஞாதவ்யம். பரிஹரணீயதாச அநந்தரமேவ வக்ஷ்யதே* யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம்சரந்தீதி'' என்பது கீதா பாஷ்ய ஸ்ரீஸூக்தி. இதன் கருத்தாவது—ஸ்த்ரீ புருஷஸம்யோகமென்பதுதான் இங்கே கருமமென்கிறது. இது மிகவும் அருவருக்கத்தக்கதாகையால் விடத் தக்கதாக இதனை யறியவேண்டும். இதை விடவேண்டுமென்பது மேலே பதினோராவது சுலோகத்திலும் காட்டப்படுகிறது என்பதாம். இதனால் நாம் தெரிந்துகொள்வது, க்ருஹஸ்தாச்ரம தருமமாக விஹிதவிஷயபோகம் ப்ராப்தமேயானாலும் அது விசிஷ்டாதிகாரிக்கு ஜுகுப்ஸநீயமே யென்று. ஆகவே இவ்விஷயத்திலும் ஸத்ஸம்ப்ரதாய ஸித்தாந்தம் நிரவத்யமென்றுணர்க. ... ... (9.)

## 10. கர்மாநுஷ்டானத்தைப்பற்றின விளக்கம்.

75. இதர ஸம்ப்ரதாயத்தில் கர்மாநுஷ்டானப்பற்று அதிகமாகவும் ஸத்ஸம்ப்ரதாயத்தில் அது குறைவாகவுமுள்ளதாக நினைப்பர்; இதைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் வருமாறு: *க்ரியமாணம் ந கஸ்மைசித் யதர்த்தாய ப்ரகல்பதே, அக்ரியாவதநர்த்தாய தத் து கர்ம ஸமாசரேத்* என்கிற பிரமாணத்தை தேசிகனும் எடுத்தாளுகிறார். இந்த பிரமாண வசனத்தின்படியேதான் தென்னாசார்யர்களின் அநுஷ்டான பரம்பரை காண்கிறது. எந்தக் கருமத்தைச் செய்தால் ஒரு பலனும் கிடைக்கமாட்டாதோ, செய்யாவிடில் ப்ரத்யவாயம் விளையுமோ அந்தக் கருமத்தை மாத்திரம் செய்யவேண்டியதென்று இந்த வசனத்தின் தாற்பரியம். அதாவது—அகரணே ப்ரத்யவாயாவஹமாயும் பலச்ருதி யற்றதாயுமிருக்கிற கருமத்தையே செய்யக்கடவதென்றபடி.

76. ஸதாசார்ய ஸம்ப்ரதாய பரம்பரையில் எந்தெந்த கருமங்கள் அனுட்டிக்கப்பட்டு வருகின்றனவோ அவை அகரணே ப்ரத்யவாயத்தை விளைப்பனவாயிருக்கும். எந்தெந்த கருமங்கள் அனுட்டிக்கப்படாமல் விடப்பட்டிருக்கின்றனவோ அவை ஸாமாந்ய பலப்ரதமாயிருக்கும்—என்று அறியக் கடவது. ஒவ்வொரு ஸௌர மாஸ ஸங்க்ரமணத்திற்கும் தர்ப்பணம் அனுட்டியாமல் நான்கு மாதப்பிறப்புகளுக்கே அது அனுட்டிப்பது இந்த ஸம்ப்ரதாயத்திலுள்ளது. இத்தகைய அனுஷ்டாந— அனனுஷ்டானங்களை இங்கே நிதர்சனமாகக் கண்டுகொள்வது.

77. இந்த ப்ரகரணத்தில் பல விஷயங்கள் விவக்ஷிதங்களுண்டு. ஆனாலும் சில சுருங்கச்சொல்லுகிறோம். பரவ்யூஹவிபவ அந்தர்யாமி அர்ச்சாவதாரரூபேண ஐவகைப்பட்டிருக்கிற பகவத் ரூபங்களில் பரவ்யூஹ விபவங்கள் மூன்றும் தேசகால விப்ரகர்ஷத்தாலே நம்முடைய வழிபாடுகளுக்கு இலக்காகமாட்டாதவை. அந்தர்யாமி ரூபத்திலும் அர்ச்சாவதார ரூபத்திலுமே வழிபாடுகள் செய்யப் ப்ராப்தம். கர்மாநுஷ்டாநம் அந்தர்யாமி ஆராதனமென்றும், கைங்கரியா

நுஷ்டானம் அர்ச்சாவதார ஆராதனமென்றும் நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கிறது. கர்மானுஷ்டானங்களில் அக்நி இந்திரன் ஸோமன் வருணன் ப்ரஜாபதி பசுபதி ப்ருஹஸ்பதி என்கிற பல தேவதைகளின் பெயர்கள் பலகாலும் வரும். அந்தத் தேவதைகளை உத்தேசித்துச் செய்வதே கர்மாநுஷ்டான வேஷமாகும். இங்ஙனம் தேவதாந்தரங்களுக்கு ஆராதனமாக அமைகின்ற கருமங்களானவை *இறுக்கு மிறை யிறுத்துண்ண எவ்வுலகுக்கும் தன் மூர்த்தி நிறுத்தினான் தெய்வங்களாக அத் தெய்வநாயகன் தானே* என்கிற திருவாய்மொழியின்படி அந்த தேவதைகளுக்கு அந்தர்யாமியான எம்பெருமானிடமே போய்ச் சேருகின்றன வென்பது வேதாந்திகளின்ஸித்தாந்தம். ஆகவே கர்மாநுஷ்டானம் அந்தர்யாமி ஆராதனமென்னக் குறையில்லை. *ஒழிவில்காலமெல்லா முடனாய்மன்னி வழுவிலாவடிமை செய்ய வேண்டும் நாம்* என்கிறபடியே கைங்கர்யாநுஷ்டானத்திற்கு அர்ச்சாவதாரமே இலக்கு என்பதில் விவரணம் அநபேக்ஷிதம்.

78. தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலையில் *நாட்டினான் தெய்வ மெங்கும்* என்று கர்மாநுஷ்டான லக்ஷ்யத்தைச் சொல்லி உடனே *நல்லதோரருள் தன்னாலே காட்டினான் திருவரங்கம் உய்பவர்க்கு உய்யும் வண்ணம்* என்று கைங்கர்யாநுஷ்டான லக்ஷ்யத்தையும் சொல்லி, *கேட்டிரே நம்பிமீர்காள் கெருடவாகனனும் நிற்கச் சேட்டை தன்மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கின்றீரே* என்று பின்னடிகளால் அந்தர்யாமி ஆராதனத்திற் காட்டில் அர்ச்சாவதார ஸமாராதனமே பாங்கு என்று காட்டியருளினார். மேலே *மேம்பொருள் போகவிட்டு மெய்ம்மையை மிக வுணர்ந்து, ஆம் பரிசறிந்து கொண்டு ஐம்புலனகத்தடக்கிக், காம்பறத் தலை சிரைத்து உன்கடைத்தலை யிருந்துவாழும், சோம்பரை யுகத்திபோலும் சூழ்புனலரங்கத்தானே* என்ற பாட்டினால் அர்ச்சாவதாரகைங்கர்ய ப்ரவணர்களின் பெருமையையும் அன்னவர்களிடத்து எம்பெருமானுக்குள்ள உவப்பின் மிகுதியையும் உரைத்தருளினார்.

79. திருமங்கையாழ்வாரும் *உலகமேத்தும் கண்டியூரரங்கம் மெய்யம் கச்சிபேர்மல்லையென்று மண்டினார் உய்யலல்லால் மற்றையார்க்கு உய்யலாமே* என்ற பாசுரத்தை மிகவும் பாவகர்ப்பமாக அருளிச் செய்துள்ளார். இதில் மற்றையார் என்று கழித்தது கருமமே கண்ணாயிருப்பவர்களை. அர்ச்சாவதார ரஸிகர்கள் உஜ்ஜீவிக்கலாகுமே தவிர ஸ்மார்த்த கர்ம கலாபங்களிலே ஊன்றிப் போருமவர்கள் உஜ்ஜீவிக்கப்போகாதென்று வாய்விட்டு அருளிச் செய்திருக்கிறார். அருளிச் செயல்களில் இங்ஙனே பல பாசுரங்கள் உள்ளன. இப்பாசுரங்களையே அல்லும் பகலும் சிந்தைசெய்து இவற்றின் அர்த்தங்களிலேயே ஊன்றிப்போரும் தென்னாசார்யர்களின் பரம்பரையில் கருமச்ரத்தை குன்றி கைங்கர்ய ருசியே மிக்கிருக்கின்றதென்றால் இது ப்ராப்தமே. இதில் பொருந்தாமை யொன்றுமில்லை. கர்ம கலாபங்கள் தவிர வேறொன்றையும் பேசாத வேதத்தையே உருப்போட்டு அஃதொன்றே போது போக்காயிருப்பாருடைய பரம்பரையிலே கர்மானுஷ்டானம் வலுத்திருக்கின்றதென்றால் அதுவும் ப்ராப்தமே. கோவிலைக் காப்பவர்கள், குளத்தைக் காப்பவர்கள் என்ற வ்யவஹாரம் இன்று நேற்று வந்ததன்றே. "வர்ணதர்மிகள் தாஸவ்ருத்திகளென்று துறை வேறிடுவித்தது" என்பது ஆசார்ய ஹ்ருதயம்.

80. பட்டர் ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்திலே "ஸ்ரீரங்கபாலகர்மட:" என்று மிகவழகியவொரு ஸ்ரீஸூக்தி யருளியுள்ளார். இதனால், கோவிலைக்காப்பதே நித்ய கர்மாநுஷ்டானமென்று காட்டியருளினராயிற்று. ஆனாலும் "ச்ருதி: ஸ்ம்ருதி: மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே; ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோபி ந வைஷ்ணவ:" என்கிற பகவத் வசனத்தையும் குறிக்கொண்டு அவர்ஜநீயங்களான சில நித்ய நைமித்திக கருமங்களை அனுட்டித்துப் போருகிறோம்.

81. "ஜாத்யாச்ரம தீக்ஷைகளில் பேதிக்கும் தர்மங்கள் போலே அத்தாணிச் சேவகத்தில் பொதுவானது நழுவும்" என்பது ஆசார்ய ஹ்ருதய திவ்ய ஸூக்தி. "அத்தாணிச் சேவகத்திலே அதிகரித்தவர்களுக்கு தேவதாந்தர்யாமி விஷயமாய் தச்சரீரபூத தேவதாத்வாரா ததாராதனமாகையாலே ஸாதாரணமா யிருந்துள்ள கர்மம் உறங்குவான் கைப்பண்டம் போலே தன்னடையே நழுவுமென்கை; இத்தால், வர்ணாச்ரமாதி நிஷ்டர்க்கு தத்ததிகாராநுரூபதர்மமொழிய அநநுகுணமானது த்யாஜ்யதயா கழிக்கப்படுமாபோலே ஸ்வரூப யாதாத்ம்யதர்சிகளானவர்களுக்கு ததநுரூபதர்மமொழிய அநநுரூபமானது த்யாஜ்யமாய்த் தன்னடையே விட்டுக் கழியு மென்றதாயிற்று. இப்படியிருக்கச் செய்தே சிஷ்டர்கள் அநுஷ்டித்துப் போருகிறது—ஸ்வாநுஷ்டானத்தைப் பின்சென்று லோகம் நசிக்க வொண்ணாதென்னும் ஆந்ருசம்ஸ்யத்தாலேயிறே" என்று இவ்விடத்து வியாக்கியானத்திலே மணவாளமாமுனிகள் விசதமாக வருளிச்செய்தருளினர்.

82. முமுக்ஷுப்படியில் சரமச்லோக ப்ரகரணத்தில், "இவன்தான் இவை தன்னை நேராக விட்டிலன். கர்மம் கைங்கர்யத்திலே புகும்" என்ற விடத்து வியாக்கியானத்திலும்—"ஸ்வவர்ண ஸ்வாச்ரமோசிதமாக இவன் அநுஷ்டிக்கும் விஹிதகர்மம் ஸாதநபுத்த்யாவன்றிக்கே ஆந்ருசம்ஸ்யத்தாலே பரார்த்தமாக வநுஷ்டிக்கையாலே ஈச்வரனுக்கு மிகவுமுகப்பாகையாலே தத்ப்ரீதி ஹேதுவாகப் பண்ணும் கைங்கர்யத்திலே அந்தர்ப்பவிக்கும்" என்றருளிச் செய்தார். இத்தகைய ஸ்ரீஸூக்திகளைக்கொண்டு நன்கு தெளிவது. ... ... ... (10)

## ஸ்ரீலோகாசார்ய ஸித்தாந்த ஸாரத்தில் முதலெண்பத்திரண்டு முற்றிற்று.

## * இரண்டாவது எண்பத்திரண்டின் தொடக்கம் *

## 11. எம்பெருமானுடைய வ்யாப்தியைப்பற்றினது.

1. உபநிஷத்தானது 'அந்தர்பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:' என்று ஸகல பதார்த்தங்களிலும் எம்பெருமான் உள்ளும் புறமும் வியாபித்திருப்பதாக ஓதியிருக்கின்றது. அணுவான பதார்த்தங்களில் உள்ளீடாக வ்யாப்தி ஸம்பவிக்கமாட்டாதென்று ஒரு வாதம். அவயவியான பதார்த்தங்களுக்கே உள், வெளி என்று சொல்லக்கூடுமாதலாலும் நிரவயமான அணுபதார்த்தங்களுக்கு 'உள்ளே வெளியே' என்று சொல்வதற்கு ப்ரஸக்தி யில்லாமையாலும் அணுபதார்த்தங்களிலே எம்பெருமானுக்கு உள்ளுற வ்யாப்தி சொல்லவொண்ணாதென்பார்கள் பிறர்.

2. அன்றியும், ஒரு பொருளிலும் எம்பெருமானுக்குப் பரிஸமாப்யவர்த்திக்வம் [அதாவது-பரிபூர்ண வ்யாப்தி] கொள்ளவொண்ணுது. ஒரு பதார்த்தத்திலே அவனுக்குப் பரிபூர்ண வ்யாப்தியை அங்கீகரிக்குமளவில் [அதாவது பகவானுடைய ஸ்வரூபம் ஒன்றிலே பரிஸமாபித்து வர்த்திக்கிறதென்னில்] மற்றொரு பதார்த்தத்தில் வியாபிக்க ப்ரஸக்தியில்லாமையாலே பரிஸமாப்ய வ்யாப்தியை அங்கீகரிக்கலாகாதென்றும் மற்றொரு வாதம் கூறுவர் பிறர்.

3. அணுபதார்த்தங்களிலும் அந்தர் வ்யாப்தி உண்டென்றும், ஒவ்வொரு பொருளிலும் பரிஸமாப்யவர்த்திக்வமும் பொருந்துமென்றும் ஸத்ஸம்ப்ரதாய ஸித்தாந்தம். சாரீரகமீமாம்ஸையில் (ப்ரஹ்ம ஸூத்ரத்தில்) *க்ருத்ஸ்நப்ரஸக்திர் நிரவயவத்வசப்தகோபோ வா* என்கிற பூர்வபக்ஷ ஸூத்ரத்தின் மேல் *ச்ருதேஸ்து சப்தமூலத்வாத்* என்கிற ஸித்தாந்த ஸூத்ரம் அவதரித்துள்ளது. சாஸ்த்ரங்களினுல் தேறுகின்ற விஷயங்களில் குதர்க்க மூலகமான குசோத்யங்களைச் செய்யாமல் சாஸ்த்ரம் சொன்ன கட்டளையிலே இசையவேண்டுமென்று இந்த ஸூத்ரம் சிக்ஷிக்கின்றது. *அந்தர் பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:* என்று சுருதி ஸ்பஷ்டமாகச் சொல்லி வைத்தது. வேதஞ் சொன்னது ஒருபுறமிருக்கட்டும். வேதாந்தார்த்த நிர்ணயகர்களான மஹாசார்யர்கள் நிஸ்ஸந்தேஹமாக அருளிச் செய்திருப்பது என்ன? என்று பார்ப்போம்.

4. ஸ்ரீ பாஷ்யகாரருடைய ஸாக்ஷாத் திருவடியான திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருவாய்மொழியில் (1—1—10) *பரந்த தண் பரவையுள் நீர்தொறும் பரந்துளன்* என்கிற பாசுரத்தின் ஆரூயிரப்படியில் இங்ஙனேயருளிச் செய்கிருர்:— "அதி ஸூக்ஷ்மமாயிருந்த அசித் வஸ்துக்களிலும் வியாபித்து அவற்றினுள்ளே ப்ரகாசிக்கிற சித் வஸ்துக்களிலும் ஸ்தூலமான அண்டத்தில் வியாபித்தாற்போலே அநாயாஸத்தாலே அஸங்குசிதனுய்" என்று. தசோபநிஷத் பாஷ்யகாரரான ஸ்ரீரங்க ராமாநுஜ ஸ்வாமி திருவாய்மொழிக்கு ஒன்பதினுயிரப்படி யென்று ஸம்ஸ்க்ருத ப்ரதிபதார்த்தடீகை பணித்துள்ளார். [அச்சிட்டு மிருக்கிறது.] அதில் இப்பாசுரத்தின் வியாக்கியானத்தில் அவர் பணித்திருப்பதாவது—*ஏகைகஸ்மிந் ஜல பரமாணௌ அதிவிசாலப்ரஹ்மாண்ட இவ வ்யக்திஷு ஜாதிவத் பர்யாப்தவ்ருத்தி:* என்று. இதன் பொருளாவது, வ்யக்திகளில் ஜாதியானது எப்படி பரிஸமாப்யவர்த்திக்கின்றதாக ஜாதிவாதிகளால் கொள்ளப்பட்டிருக்கின்றதோ அப்படி எம்பெருமான் ஒவ்வொரு ஜலபரமாணுவிலும் அதி விசாலமான ப்ரஹ்மாண்டத்திலிருப்பது போல (நெருக்குண்ணுமல்) நிறைந்திருக்கின்ருன் என்பதாம். இங்கு பர்யாப்த வ்ருத்தி:* என்று இம்மஹான் பணித்திருப்பது பூருவர்களின் ஸித்தாந்தத்தை நன்கு அடியொற்றியதாம். பரிஸமாப்ய வர்த்தமாநத்வமே சொல்லிற்று.

5. பகவானுடைய ஸ்வரூபம் ஓரிடத்தில் பரிஸமாப்ய வர்த்திக்குமானுல் அது மற்ருேரிடத்தில் இருக்க ப்ரஸக்தியில்லை. ஏனென்ருல், ஒன்றில் பரிஸமாப்தமாய் விட்டதென்ருல் அவ்வளவோடு முற்றிற்று என்றபடியாகையால் மற்றொன்றிலே யிருக்க அவகாசமேது? வஸ்துவே இல்லையன்ருே. பரிஸமாப்ய வர்த்தமாநத்வமென்பதை சாஸ்த்ரீய ஸரணியில் பேசுவதானுல் *ததிதராவ்ருத்தித்வே ஸதி

தத்வ்ருத்தித்வம் பரிஸமாப்ய வர்த்தமாநத்வம்* என்று நிஷ்கர்ஷிக்க வேண்டிய தாகும். ஆகவே ஸர்வவ்யாபகனை ஓதப்படுகின்ற எம்பெருமானை ஒரு வஸ்துவிலும் பரிஸமாப்ய வர்த்தமானனைச் சொல்லமுடியாது என்று சோத்யம் ப்ராப்தமாகிறது. இப்படிப்பட்ட சோத்யம் இன்று நேற்றல்ல; ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னமே தோன்றினதுண்டு. * ஒன்றுத்தேவு ஈட்டு ப்ரவேசத்திலேயே இந்த சோத்யம் உபக்ஷேபிக்கப்பட்டிருப்பது காணலாம். அவ்விடத்து ஸ்ரீஸூக்தி வருமாறு:— "ஜாதி வ்யக்திதோறும் பரிஸமாப்ய வர்த்திக்குமென்றால் அதித்பதார்த்தத்துக்கு இது கூடுமென்றிருப்பர்கள்; பரமசேதநனுயிருப்பானொருவன் பரிஸமாப்யவர்த்திக்குமென்றால் இது கூடாதென்று ஸம்ப்ரமியாநிற்பர்கள்" என்று.

6. தேசிகனும் ந்யாய ஸித்தாஞ்ஜந-ஈச்வர பரிச்சேதத்தில் இவ்வாக்ஷேபத்தை யெடுத்துக்காட்டி *ச்ருதேஸ்து சப்த மூலத்வாத்* என்கிற ப்ரஹ்மஸூத்ரத்தையே கொண்டு *யதாகமம் ஸர்வத்ர பூர்ண ஏவ பகவாந்* [சாஸ்த்ரம் சொன்னபடி பகவான் எங்கும் பூர்ணனே] என்று தலைக்கட்டியருளினர்.

7. ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்த வேதார்த்த ஸங்க்ரஹத்திற்கு ச்ருதப்ரகாசிகாபட்டர் அருளிச் செய்த தாத்பர்ய தீபிகையில். *நிரம்சே ப்ரதிபதார்த்தம் பூர்ணவர்த்திந்யபி ஸ்வரூபே அம்சசப்தவ்யவஹார:, ஏகஸ்மிந்நேவ வஸ்துநி ஸ்வரூபஸ்ய பூர்ணவர்த்திதயா அந்யத்ர வ்ருத்த்யயோக்யத்வசங்காவ்யுதாஸார்த்த:* என்கிற ஸ்ரீஸூக்திகள் உள்ளன. பரமபுருஷன் ப்ரதிவஸ்து பூர்ணன் என்கிற விஷயத்தில் இவ்விதமான ஆக்ஷேபந்தன்னையே ச்ருதப்ரகாசிகாசார்யர் உத்க்ஷேபித்து அதற்கு நிரஸனம் வந்துவிட்டதாக அருளிச் செய்திருக்கிறாரென்பது இதில் ஸுஸ்பஷ்டம். இந்த ஸ்ரீஸூக்தி அமைந்திருக்கிறவிதம் நன்கு ஆராயத்தக்கது. *அந்யத்ர வ்ருத்த்யயோக்யத்வசங்காவ்யுதாஸார்த்த:* என்று கண்ணாடிபோலுள்ளது. ஒரு வஸ்துவிலேயே ஸ்வரூபம் பரிஸமாப்தமாக இருந்துவிட்டால் அது மற்றொரு வஸ்துவில் இருக்கமுடியாதே யென்கிற சங்கை தள்ளுண்டதாக இந்த மஹாசார்யர் அருளிச்செய்திருக்கும்போது இன்னமும் அந்த சங்கையை ப்ரபலமாகச் செய்து போருமவர்கள் ஸ்ரீபாஷ்யகார ஸம்ப்ரதாயஸ்தர்களாகக் கூடுமோ? *ஏகத்ர ஸமாப்தஸ்வரூபஸ்ய அந்யத்ர வ்ருத்தி யோக்யத்வவாதோ வ்யுதஸ்யதே" என்று ஸ்ரீஸூக்தியிருந்தால் கீழே விவரிக்கப்பட்ட ஆக்ஷேபம் இன்னமும் ஜீவித்துக்கொண்டிருக்கலாம். ஸ்ரீஸூக்தியோ அப்படியில்லை. சங்கைக்கு (அதாவது ஆக்ஷேபத்திற்குக்) கண்டனம் வந்து விட்டதாக ச்ருதப்ரகாசிகாசார்யர் நிஸ்ஸந்தேஹமாக ஸாதித்துள்ளார். அப்படி யிருக்கவும் இன்னமும் அந்த ஆக்ஷேபமே பிறருடைய [நவீநர்களுடைய] மதத்தில் ஓங்கிநிற்கின்றதென்றால் இதனில் மிக்கோரயர்வுண்டே?

8. ஸர்வசக்தியுக்தனென்றும் விசித்ர சக்தியுக்தனென்றும் விலக்ஷண சக்தியுக்தனென்றும் அத்புத சக்தியுக்தனென்றும் ஆச்சர்ய சக்தியுக்தனென்றும் அகடிதகடநா ஸமர்த்தனென்றும் பலபடியாக எம்பெருமானை உபநிஷத்துக்கள் புகழ்கின்றன. *பராஸ்ய சக்திர் விவிதைவ ச்ரூயதே* என்கிற உபநிஷத்வாக்யமொன்றே போதும். இவ்வத்புத சக்தியின் வைகரியைக் கூரத்தாழ்வான் ஸ்ரீ வைகுண்டஸ்தவத்தில் ஒரு ச்லோகத்தினால் விவரித்தருளுகிறார் காண்மின் ;—

''கிம்ஸாதந: க்வ நிவஸந் கிமுபாததாந:
கஸ்மை பலாய ஸ்ருஜஸீச இதம் ஸமஸ்தம்;
இத்யாத்யநிஷ்ட் டிதகுதர்க்கமதர்க்கயந்த:
த்வத்வைபவம் ச்ருதிவிதோ விதுரப்ரதர்க்யம்'' என்று.

9. இந்த ச்லோகத்தின் கருத்தாவது;-எம்பெருமானே ஸர்வஸ்ரஷ்டா என்னுமிடத்தில் பிறர் சில குசோத்யங்களைக் கூறுகின்றார்களாம்; உலகத்தில் ஸ்ருஷ்டி செய்பவர்கள் யாவரும் சில ஸஹகாரி காரணங்களோடு கூடியே படைக்கக் காணு நின்றோம். ஸர்வஸ்ரஷ்டாவான பரமபுருஷனுக்கும் ஸஹகாரி காரணங்கள் இன்னவை யென்று காட்டவேணும். அப்படி காட்டாதொழியில் அவன் ஸ்ருஷ்டி கர்த்தாவென்பது அஸம்பாவிதமாகும். இதற்காகச் சில ஸஹகாரிகளை நிருபிப்பதானால், ஸஹகாரிகளான அப்பொருள்களைப் படைத்தது யார்? என்று கேள்வி வரும். ஈச்வரனே படைத்ததாகச் சொல்லுவீர்கள். அவற்றைப் படைக்கும்போது எவை ஸஹகாரிகளா யிருந்தனவென்று கேள்வி வந்தே தீரும். இப்படியே ப்ரச்ந பரம்பரை போய்க்கொண்டே யிருக்கும். கடைசியாக ஸர்வேச்வரனால் ஸ்ருஷ்டிக்கப்படாத சில பொருள்களுண்டென்று இசையவேண்டி வரும். ஆகவே பகவான் ஸர்வஸ்ரஷ்டா அல்லன் என்றதாகும். இப்படியே மற்றொரு கேள்வியுமுண்டாகிறது: ஸ்ருஷ்டிக்கும்போது பகவான் எந்த இடத்திலிருந்துகொண்டு ஸ்ருஷ்டிக்கிறான். ஒரு அதிகரணமின்றி ஸ்ருஷ்டிக்க முடியாதன்றோ. அதிகரணமாக ஒரு தேசத்தைக் காட்டினால் அதைப் படைக்கும்போது எந்த இடம் அதிகரணமாயிருந்ததென்று கேள்வி வரும். இப்படியே இவ்விஷயத்திலும் ப்ரச்ந பரம்பரைகள் சென்றுகொண்டேபோம். கடைசியாக, பகவானால் ஸ்ருஷ்டிக்கப்படாத ஒரு இடம் ஸித்தித்தே தீரும். இதனாலும் பகவான் ஸர்வஸ்ரஷ்டாவல்லன் என்றதாகும். இங்ஙனே மற்றொரு கேள்வியுமுண்டாகிறது. பிரபஞ்சத்தைப் படைக்கின்ற பரமாத்மாவுக்கு எது உபாதாந காரணமாகின்றதென்று கேட்கிறோம். கீழ் ஸஹகாரிகாரண விஷயத்திற் போலவே இதுதன்னிலும் ப்ரச்ந பரம்பரையும் ஆபத்தியும் துல்யம். இனி, பகவான் என்ன பலனைக் கருதிப் படைக்கிறானென்கிற கேள்வியுமுண்டாகிறது. "ப்ரயோஜநமநுத்திச்ய ந மந்தோபி ப்ரவர்த்ததே" என்பராதலால் ஸ்ருஷ்டிக்கு ஒரு ப்ரயோஜனம் சொல்லியே யாகவேணும். அந்த ப்ரயோஜனமானது ஸ்ருஷ்டிக்கு முன்னே ஸித்தித்திருக்கவில்லை யென்று கொள்ள வேண்டியதாகும். ஆகவே பகவான் அவாப்த ஸமஸ்தகாமன் என்கிற ஸித்தாந்தம் குலைந்ததாகும்—என்றிப்படியாகப் பிறர் செய்யும் குசோத்யங்கள் மேற்குறித்த ச்லோகத்தின் பூர்வார்த்தத்தால் அநுவதிக்கப்பட்டு, மேல் உத்தரார்ந்தத்தில் ஒரே வார்த்தையால் ஸமாதானம் சொல்லப்பட்டுள்ளது. ''த்வத்வைபவம் ச்ருதிவிதோ் விதுரப்ரதர்க்யம்'' என்கிறவிதுவே ஸமாதானமாய்த்து. விசித்திர விலக்ஷண சக்தி சாலியான பகவான்திறத்தில் ப்ரபல ப்ரமாண ஸித்தமான அர்த்தங்களில் குசோத்யம் செய்வது தகாது என்கிறவிதுவே ஸமாதானமாக முடிந்து நின்றது.

10. தேசிகனும் அச்யுத சதகத்தில் இப்படியே கூறுகின்றார்; "புரிஸபஹாண ஸரீரோ புவணாணம் ஹோஸி அச்சுஅ உவாஆணம்; ணிஅஸங்கப்பஸணாஹோ வஹஸி ணிமித்தத்தணம் விஅப்புஅ ஸத்தீ" (சாயா—புருஷ்ப்ரதாநசரீரோ புவநா

நாம் பவஸ்யச்யுதோபாதாநம்; நிஜஸங்கல்பஸநாதோ வஹஸி நிமித்தந்வமப்யத்புதசக்தி:* என்கிறார். இதில் முடிவில் அத்புதசக்தி: என்றதே ஸாரம். பிறர் செய்யும் குசோத்யங்களை பகவானுடைய அத்புதசக்தியோகத்தை நிரூபித்தே நிரஸிக்க வேணுமத்தனையென்று காட்டினாராயிற்று. இப்படி யெல்லாம் அருளிச்செய்கிற ஆசார்யர்களுக்கு *ச்ருதேஸ்து சப்தமூலத்வாத்* என்கிற ப்ரஹ்மஸூத்ரமே வழி காட்டியாக நிற்கிறது. பிறர் இந்த ஸூத்ரத்தை மேலெழுந்தவாரியாக நிர்வஹித்துவிட்டு, எம்பெருமானுடைய விசித்ரசக்தியை அபதார்த்தமாக எண்ணித் தள்ளிவிட்டுக் குத்ருஷ்டிகளைப் போலவே பூர்வபக்ஷங்களைச் செய்து போருகிறார்கள்.

9. *அந்தர் பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்த்தித* என்று ச்ருதி ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கச் செய்தேயும், அணுவான வஸ்துக்களிலே பகவான் எப்படி உள்ளே வியாபிக்கமுடியும்? என்கிற ஆக்ஷேபத்தைப் பிறர் வளிதாகச் செய்கிறார்கள். ஜீவாத்மாவோ அணுபூதன். நிரவயவமான அணுவஸ்துக்களுக்கு உட்புறம் கிடையாதாகையாலே உள்ளே வியாபிப்பதென்பது அணுவஸ்துக்களில் அஸம்பாவிதமன்றோ. ஆகவே *அந்தர்பஹிச்ச தத்ஸர்வம்* என்றவிடத்து தச்சப்தார்த்தத்தில் ஜீவாத்மாவை விலக்கியேயாகவேணும்; அயோக்யார்த்தத்தை ச்ருதி ப்ரதிபாதியாதன்றோ? என்று அவர்கள் வாதிக்கிறார்கள்.

10. ஸித்தாந்திகளின் ஸமாதானம் யாதெனில்; ஸாவயவமான வஸ்துக்களுக்குத்தான் உட்புறமிருக்குமென்றும், நிரவயவமானவற்றுக்கு உட்புறமிராதென்றும் ஒரு பிரமாணமும் கூறுகின்றதில்லை. நிரவயவமான ப்ரதாநம் முதலியவற்றில் அந்தர்தேசம் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றதே. ப்ரதாநம் நிரவயவமென்கிற பக்ஷத்தை தேசிகனும் தத்வமுக்தாகலாபத்தில் *அவ்யக்தம் த்வந்மதேபி ஹ்யநவயவம்* என்கிற ஸ்ரீஸூக்தியால் தெரிவித்துள்ளார்.

11. நிரவயவமான வஸ்துக்களுக்கு அந்தர்தேச மில்லையென்று சொல்வதை விட்டு அணுத்ரவ்யங்களுக்கு அந்தர்தேசம் கிடையாதென்று சொல்லுகிறோமென்றும், சேதநன் அணுத்ரவ்யமாகையாலே அவனுக்கு அந்தர்தேசமில்லையென்பதுபொருந்துமென்றும் பிறர் வாதிப்பதுதானும் அயுக்தம். *ய ஆத்மநி திஷ்டந் ஆத்மநோந்தர:, * அணோரணீயாந் * இத்யாதி ச்ருதிகளாலும் *அணோரணீயாம்ஸம்* என்கிற கீதா வசனத்தாலும் சேதநனிடத்திலும் பகவானுக்கு அந்தர்வ்யாப்தி யுண்டென்று ஸ்பஷ்டமாக விளங்குகையாலே.

12. ஜிஜ்ஞாஸாதிகரண ச்ருதப்ரகாசிகையில் *ய ஆத்மநி திஷ்டந்நித்யுக்தே, வேத்யாமக்நிஸ் திஷ்டதி, திலே தைலம் திஷ்டதீதிவத் பஹிரபஹிஸ்ஸ்திதி ஸாதாரண்யாத் தத்வைசத்யார்த்தமாஹ—ஆத்மநோந்தர இதி' என்றுள்ளது. இது ஆத்மாவினிடத்தில் அந்தர்வ்யாப்தி யுண்மையை நன்கு புலப்படுத்தா நின்றது. ஆத்மாவுக்கு அந்தர் தேசமுண்டென்று கொள்ளவேணுமென்பதை ஸ்ரீபாஷ்யகார ஸ்ரீஸூக்தியும் விசதீகரிக்கின்றது; மேலேகாட்டிய கீதாவசனத்தில் "கவிம் புராணமநுசாஸிதாரம் அணோரணீயாம்ஸ மநுஸ்மரேத் ய:" என்பதில் அணோரணீயாம்ஸம் என்பதற்குப் பொருளருளிச் செய்யாநின்ற பாஷ்யகாரர் "ஜீவாதபி ஸூக்ஷ்மதரம்" என்றுரைத்தருளினர். ஆத்மாவில் அந்தர்தேசம் உள்ளதாக இசையாவிடில்

'ஜீவாதபி ஸூக்ஷ்மதரத்வம்' எம்பெருமானுக்கு நிர்வஹிக்க இயலாதன்றே. *ஜீவாதபி ஸூக்ஷ்மதரம்* என்றது ஜீவனிற் காட்டிலும் அபக்ருஷ்ட பரிமாண முடையவன் என்றபடியன்று; அப்படியாகில் பகவானுக்கு விபுத்வஞ்சொல்லுகின்ற ச்ருதிஸ்ம்ருதிகள் சீறுமே. ஆகவே ஆத்மாவினுடைய அல்ப தேசத்திலும் வியாபித்திருக்கின்றானென்பதே இங்குப் பொருளாகும்.

13. *மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ* என்பதனாலும் அணுவில் அந்தர் தேசம் ஸித்திக்கும். நூலில் ரத்னத்திரள் போல் ப்ரஹ்மத்தினிடத்தில் சேதநாசேதநாத்மகமான ப்ரபஞ்சம் கோக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறது இந்த ப்ரமாணம். ஆத்மாவில் அந்தர்தேசமிசையாவிடில் இது பொருந்தாது. அதில் பரப்ரஹ்மத்திற்கு ஸூத்ரஸ்தாநீயத்வம் சொல்லியிருப்பது உணரத்தக்கது. சிறந்த விவேகிகளுக்கே இது ஸாத்யமாகும்.

14. ஸஹஸ்ரநாமத்தில் *அணுர் ப்ருஹத் க்ருசஸ் ஸ்தூல:* என்றவிடத்தில் அணுபதத்திற்கு பாஷ்யமருளிச் செய்யா நின்ற பட்டர் (பகவத்குண தர்ப்பணத்தில்) *அதிஸூக்ஷ்மதஹராகாசாவ்யக்த ஜீவாநுப்ரவேச ஸாமர்த்யாத் அணு:* என்றருளிச் செய்தார். இப்படிப்பட்ட ப்ரமாண கணங்களால் எம்பெருமானுக்கு அணுபதார்த்தங்களிலும் அந்தர்வ்யாப்தி அநபாயமென்பதும், ஒவ்வொரு பதார்த்தத்திலும் பரிஸமாப்ய வர்த்தமாநத்வமும் அவ்யாஹதமென்பதும் ஸித்தாந்திகளின் கொள்கையாக ஸித்தம். ப்ரஹ்மவ்யாப்திபரிஷ்க்ரியா என்கிற வடமொழி நூலிலே இதனை ச்லோகரூபமாகவும் வசனரூபமாகவும் விரியவுரைத்தோம்.

## கீழ்விவரித்த வ்யாப்திவிஷயத்திலே ஸாரார்த்த ஸங்க்ரஹம்.

15. பரம புருஷனொருவனுளனென்பதையும் அவனுடைய ஸ்வரூபரூப குணங்கள் இப்படிப்பட்டவை யென்பதையும் நாம் சாஸ்த்ரங்களைக் கொண்டு அறிகிறோமேயல்லது வேறு எதனாலும் அறிகின்றிலோம். அதீந்த்ரியமான விஷயங்களில் நமக்கு சாஸ்த்ரமே கைவிளக்கு. அல்பஜ்ஞர்களான நாம் சாஸ்த்ரங்களில் நேராக இறங்கித் தத்துவங்களையும் மருமங்களையும் உணர உரிமையுடையோமல்லோம்; * சாஸ்த்ரஜ்ஞாநம் பஹுக்லேசம் புத்தேச் சலந காரணம், உபதேசாத் ஹரிம் புத்த்வா *. என்று சாஸ்த்ரமே காட்டிக் கொடுக்கையிலே, தத்வதர்சிகளான மஹாப்ராஜ்ஞர்கள், வெண்ணெயைக் கடைந்து திரட்டியெடுத்துக் கொடுக்குமாபோலே மிகலலிதமாக எடுத்துரைத்து வைக்க, அது கொண்டு உணரவே நாம் அதிகாரிகள், எதிலும் எங்கும் ஸம்ப்ரதாயபேதமென்று ஒன்று தோன்றியிருப்பதனால் இன்ன ஸம்ப்ரதாயஸ்தர் இன்ன ஆசார்யருடைய ஸ்ரீஸூக்திகளையே நிதியாகக் கொள்வதென்றும் அவற்றையே போஷித்துப் பேசுவதென்றும் ஒரு பத்ததி இருப்பதனால் அவரவர்கள் தம் தம் ஆசார்யருடைய ஸ்ரீஸூக்திகளில் வைத்திருக்கிற நம்பிக்கையினால் திருப்பித்திருப்பி ஸ்வமதத்தையே வலிதாக வெளியிட்டுக்கொண்டு காலங்கழிக்கிறார்கள் இந்த மருமத்தை யாரோ சில மஹாமேதாவிகளே கண்டு இப்படி பக்ஷபாதிகளாய்ப் பேசியும் எழுதியும் போருகிறவர்களின் வார்த்தைகளில் நாம் செவிகொடுக்கவோ கண் செலுத்தவோ தகாது; மத்யஸ்தர்களான ஆசாரியர்களின் திருவாக்குக்களைக்

கொண்டே தத்துவத்தை உணரவேணும்' என்று துணிந்து விவாதிகளான இரண்டு ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கும் பொதுவாகவுள்ள ஆசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளையே கொண்டு தத்வநிஷ்கர்ஷம் செய்கிறார்கள். இதுதான் ராஜமார்க்கம்.

16. உபய ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கும் பொதுவாகச் சில ஆசாரியர்கள் உலகமறிய விளங்குகின்றார்களன்றோ. ஸ்ரீபாஷ்யகாரர், கூரத்தாழ்வான், பட்டர், ச்ருதப்ரகாசிகாசார்யர் என்னும் மஹாசார்யர்கள் பொதுவானவர்களென்பது நிர் விவாதம், விவாத க்ரஸ்தமான விஷயங்களை மத்யஸ்தத்ருஷ்டியுடன் நிஷ்கர்ஷிக்க வேண்டும்போது மேற்குறித்த மஹாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகள் எப்படியுள்ளன? என்று விமர்சிப்பதே ப்ராமாணிகர்களுக்கு உற்றது. அவர்களின் திவ்ய ஸூக்தி களில் ஸ்பஷ்டமாகத் தெரியாத விஷயங்களிருந்தால் அவற்றில் அவரவர்கள் தம் தம் [அஸாதாரண] ஆசாரியரின் ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு தெளிவுபெறலாம். பொதுவான ஆசாரியர்களின் திருவாக்குக்களில் ஸ்பஷ்டமாகவும் ஸுஸ்பஷ்டமாக வும் விளங்குகின்ற விஷயங்களிற்கூட ஏகதேசிகள், தங்கள் அபிப்ராயத்தையே திட மாகக்கொண்டு போராடுவதென்பது விவேகிகளின் பணியாகுமோ?

17. சிலருடைய கொள்கை என்னவெனில், மற்றையாசாரியர்களின் திரு வாக்குக்கள் எப்படியாவது இருக்கட்டும்; அவற்றைப்பற்றி நமக்கு விசாரமே வேண்டா; நமக்கென்று வாய்த்த அஸாதாரண ஆசாரியருடைய திருவாக்கில் ஸ்பஷ்டமாக எவ்வண்ணம் வெளிவந்துளதோ அவ்வண்ணமேதான் நாம் கொள்ள வேண்டும் - என்பதாக. இக்கொள்கையைத் தப்பென்று நாம் சொல்லலாகாது. ஸ்வாசார்ய பக்தியின் கனம் விளங்குமிதில். ஆனால் இத்தகைய கொள்கை ரஹஸ்ய மாக ஸ்வக்ருஹத்தினுள்ளே போற்றத் தகுமே யன்றி ஸதஸ்ஸுக்குப் பயன்படாது. விவாதம் விளையாத வளவில் க்ஷேமமே. விவாதம் வளர்ந்திட்டால் ஸ்வாசார்ய ஸூக்தியென்கிற அபிமானத்தை வெகு தூரத்தில் விலக்கிவைத்திட்டு; பொதுவான ஆசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளை மாத்திரமே தஞ்சமாகக் கொள்ளவேணும்.

18. இனி ப்ரக்ருத விஷயத்திற்கு வருவோம். எம்பெருமான் எங்கும் நிறைந்த பரஞ்சோதி யென்று உலகமனைத்தும் உணரும். "கருதரிய வுயிர்க்குயி ராய்க் கரந்தெங்கும் பரந்துறையும் ஒருதனி நாயகமென்றால் உன் பெருமைக்கு அளவாமோ?" என்று போற்றுகிறார்கள் பக்தர்கள். அணுவான பதார்த்தங்களி னுள்ளும் பகவான் நிறைந்துளன் என்பது வேதாந்திகளின் கொள்கை. (1) உட் புறம் வெளிப்புறம் என்று இரண்டிடங்கள் பகுத்து வகுத்துக் காட்டக்கூடிய பொருள்களாயிருந்தால் அவற்றில் உள்ளேயும் புகுந்துளன் என்று ஒப்புக்கொள்ள லாம்; அணுபதார்த்தங்களுக்கு இங்ஙனே பகுத்துக் காட்டக்கூடிய நிலைமை இல்லா மையால் அப்பொருள்களில் பகவான் உள்ளேயுளன் என்று ஒப்புக்கொள்ள இய லாது—என்பது ஒரு ஆக்ஷேபம். (2) உள்ளேயுளன் என்று ஒப்புக் கொள்ளக்கூடிய விடத்திலும், பகவான் தன்னுடைய ஸ்வரூபம் எவ்வளவுண்டோ அவ்வளவும் அடங்க வியாபித்துளன் என்று இசையத்தகாது; ஏனென்றால் ஒரு வஸ்துவிலேயே பகவானது ஸ்வரூப மடங்கலும் அடங்கிப் போகுமானால் மற்றும் உலகிலுள்ள அபரிமிதங்களான வஸ்துக்களிலும் அந்த ஸ்வரூபம் வியாபித்திருக்க வேணுமல் லவா? அதற்கு அவகாசமில்லாமற் போகுமே. ஒரு உதாரன் தனக்குள்ள

பொருள்களை யெல்லாம் ஒரு யாசகனுக்கே பூர்த்தியாகக் கொடுத்துவிட்டால் எப்படி? மற்றுள்ள பல யாசகர்களுக்கும் கொடுக்கச் சரக்கு இருக்கவேணுமே; (அது போல) பகவானும் தன் ஸ்வரூபத்தை நிச்சேஷமாக ஒரு வஸ்துவிலேயே நிரப்புகிறுனென்ருல் இது எப்படி ஸம்பவிக்கும்? மற்ற வஸ்துக்களுக்கு என்ன கதி? ஒவ்வொரு வஸ்துவிலும் நிச்சேஷமாக நிரம்பியுள்ளானென்கை பொருந்தமாட்டாது. ஒன்றில் நிச்சேஷமாக நிரம்பிவிட்டால் மற்ருென்றிலிருக்க ப்ரஸக்தியேது? ஆகவே வஸ்துதோறும் பகவத் ஸ்வரூபம் நிச்சேஷமாக நிரம்பியுள்ளதென்று கொள்ளத்தகாது—என்பது மற்ருெரு ஆக்ஷேபம்.

19. இவ்விரண்டு ஆக்ஷேபங்களும் இன்று நேற்று உதித்தவையல்ல; நெடுநாளாகவே யுண்டு. இவற்றை நமது பூருவாசாரியர்கள் நன்கு கண்டித்துள்ளார்கள். ஸுஸ்பஷ்டமாகக் கண்டித்திருப்பவர் ச்ருதப்ரகாசிகாசார்யர். மேலே விவரித்த இரண்டு ஆக்ஷேபங்களைக் கூசாமல் பேசவல்லவர்கள் யாராயிருக்க வேண்டுமென்பதைச் சிறிது விமர்சிப்போம். பகவானுக்கு ஒப்புயர்வற்ற சக்திவிசேஷமுண்டென்பதைப் பொறுக்ககில்லாதவர்களே இந்தக் கக்ஷிகளைக் கிளப்பவேண்டும். பகவான் அத்புத சக்தியுக்தன் என்றும் அகடித கடநாஸமர்த்தன் என்றும் பிரமாணங்கள் கூறுவதை அஞ்ஜலிபந்தத்துடன் ஏற்கவல்ல ப்ராமாணிக வேதாந்திகள் இப்படிப்பட்ட கக்ஷிகளைக் கிளப்ப ஒருபோதும் நினையார்கள். முன்வரமாட்டார்கள்.

20. இந்த வ்யாப்தி விஷயத்தை, அல்லது ப்ரதிவஸ்து பூர்ணத்வ விஷயத்தை விட்டிட்டு வேறு சில விஷயங்களை யெடுத்துக்கொள்வோம். ஸகல ப்ரபஞ்சங்களுக்கும் பகவானையே காரணபூதனுகக் கொள்ளுகிறேம், உலகில் ஒவ்வொரு கார்ய வஸ்துவுக்கும் மூவகைப்பட்ட காரணங்கள் வேண்டியிருக்கின்றன; 1. உபாதாந காரணம், 2. ஸஹகாரி காரணம், 3. நிமித்த காரணம். ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியில் இம் மூவகைக்காரணமும் பகவானெருவனே யென்று மறைமுடி அறுதியிடுகின்றது. ஒன்றுக்கே மூவகைக் காரணத்வமும் எங்ஙனே பொருந்தும்? உலகில் இப்படியுள்ள ஒரு வஸ்துவையாவது உவமையாக எடுத்துக்காட்ட முடியுமோ? முடியாதே. உலகிற் காண்கிறபடிதானே பகவானிடத்தில் ஸமந்விதமாகவேணும். ஒருவனே மூவகைக் காரணமுமென்று அஸம்பத்தமாக எப்படிச் சொல்லுகிறீர்கள்? என்று கேட்டால். பகவான் அத்புதசக்தியுக்தனுகையாலே அப் பரம புருஷனிடத்தில் எதுவும் ஸம்ந்விதமே, அஸம்பத்தமானது ஒன்றுமில்லை என்கிற விடை தவிர வேறொன்றும் சொல்லகில்லார் வேதாந்திகள். வேதாந்த தேசிகனும் இதே விடையைத்தான் விடுத்தருளுகிறர்; அச்யுதசதகத்தில் "புரிஸபரிாணி ஶரீரே" என்ற ச்லோகத்திற்கு நம்முடைய விரிவான வியாக்கியானம் உலகம் பரவியுள்ளது; வியாக்கியானமே வேண்டா; மூலமே போதும்; "ஹஸி ணிமித்தத்தணம் வி அப்புய ஸத்தீ—வஹஸி நிமித்தத்வமபி அத்புதசக்தி:" என்றன்றே ச்லோகமுள்ளது. அத்புத சக்தியோகத்தாலே இவை கூடும்—என்றன்றே நிர்வஹிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ பாஷ்யகாராதிகளுக்கும் இந்த அத்புத சக்தியோகமே சாஸ்த்ரார்த்த நிர்வாஹங்களுக்குக் கைகொடுக்கின்றது. ஆகவேதான் "ஸகலவஸ்து விலக்ஷணஸ்ய சாஸ்த்ரைக ஸமதிகம்யஸ்ய அசிந்த்ய - அப்ரமேய - அத்புதசக்தியுக்தஸ்ய பரஸ்ய ப்ரஹ்மண:" என்று அடிக்கடி அருளிச் செய்யப்படுகிறது. மேற்குறித்த வாக்யங்கள் ஸ்ரீபாஷ்ய தீப ஸாராதிகளில் நூற்றுக் கணக்கான இடங்களில் காணலாகும். ... ... ... ... (தொடரும்.)

# யதார்த்த ராமாநுஜனென்பத்திரண்டு

(ஸ்ரீராமாநுஜன் 284ல் வெளிவந்த இரண்டாம் பகுதியின் தொடர்ச்சி)

## சீரொன்று தூப்புல் தனியன் தத்தளிப்பு

திருமழிசைப்பிரான் திருச்சந்த விருத்தத்தில் "வேதநூல், ஓதுகின்றதுண்மை யல்லதில்லை மற்றுரைக்கிலே" என்று சபதம் செய்தருளுகிறார். அதேபோல நம்து ஸ்ரீராமாநுஜனில் அந்நாள் தொடங்கி இந்நாள்வரையில் வெளிவரும் ஒவ்வோ ரெழுத்தும் தெரிவிப்பது உண்மையல்லதில்லை யென்று சபதம் செய்வோம். நாம் மட்டுமன்று. உண்மை யுணர்ந்த உலகமெல்லாம் சபதம் செய்துகொண்டே யிருக்கின்றது. இதற்கு உலகமெல்லாம் ஸாக்ஷி.

பகவத்கீதையில் (9-31.) "கௌந்தேய! ப்ரதிஜாநீஹி ந மே பக்த: ப்ரணச்யதி" என்பது ஒரு சுலோகம். அர்ஜுந! என்னுடைய பக்தனுக்கு ஒன்றிலும் ஒருபங்கமும் நேராதென்று நீ ப்ரதிஜ்ஞை பண்ணு—என்கிறான் கண்ணபிரான். (ப்ரதிஜாநே) என்று தான் ப்ரதிஜ்ஞை பண்ணுவதாகப் பலவிடங்களிற் சொல்லுவதுபோல இங்கும் சொல்லாமல் (ப்ரதிஜாநீஹி) என்று, நீ ப்ரதிஜ்ஞைபண்ணு என்றவிது ஸ்வப்ரதிஜ்ஞையிற் காட்டிலும் பக்த ப்ரதிஜ்ஞைக்குண்டான ஏற்றத்தைப்பற்ற. இந்த ரீதியில் ஸ்ரீமத் பரமஹம்ஸ. தென்பரை யாண்டவன், ஸர். எஸ். வரதாசார்ய ஸ்வாமி, தி. ரா. ஸ்வாமி போல்வாருடைய ப்ரதிஜ்ஞை காருள்ளளவும் கடல் நீருள்ளளவும் வேதமுள்ளளவும் வேதகீதனுள்ளளவும் அழியமாட்டாதது.

ஸ்ரீமத் தாதாசார்யாதிகள் நமது ஸ்ரீராமாநுஜனில் அயதார்த்தமுள்ளதாகக் காட்டுவதற்கு எவ்வளவு முயற்சி கொண்டாலும் அதனுடைய யாதார்த்த்யமே நன்கு திடப்படுமென்பது உலகமெல்லாம் பேசும் பேச்சு.

நவீனர்கள் தேசிகஸம்பந்தத்தை ஏறிட்டுக்கொள்ளத் தொடங்கினபோது பலபலவும் கற்பனை செய்துகொண்டார்களென்பதை நாம் பலநூல்களில் கல்வெட்டாக்கி யிருக்கிறோம். அவற்றுள் * சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான் * என்கிற வெண்பா முதன்மைபெற்றது. இதைப் பிள்ளைலோகாசாரியர் பணித்த தாகவும் ஒரு கற்பனை. இதைப்பற்றி நாம் எழுதினபோது இருவகைபாக உலகுக்குத் தெரிவித்தோம். தேசிகனுக்கும் பிள்ளைலோகாசாரியர்க்கும் ஸமாகமம் நேர்ந்ததே யில்லை; அவர் திருநாட்டுக் கெழுந்தருளின பிறகே இவர் கோயில் சென்று சேர்ந் திருக்கிறார்—என்பது முதலது. அவர் பணித்ததே இந்த வெண்பா என்று வலிதாக வாதித்தால் "தன்னாசிரியன் தன்னொடு கற்றோன், தன்மாணாக்கன் தகுமுறைகார னென்று, இன்னோர் பாயிரமியம்புதல் கடவே" என்ற நன்னூலின்படி பிள்ளை லோகாசாரியர் ஆசாரியரென்னும் முறையில் தமது சிஷ்யரான வேங்கடநாதார் யருக்குப் பாயிரம் பணித்திருக்கலாமென்பது இரண்டாவது.

இதன்மேல் இவருடைய பதில் என்ன வென்றால், ஸ்ரீமந் நாதமுனிகள் தொடங்கி நிகழ்ந்துவரும் ஸ்ரீவைஷ்ணவாசார்ய பரம்பரையில் சிஷ்யர்க்கு ஆசார்

யர் தனியனிட்டதாகக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லையாகையால் இது அஸங்கத வாதம் என்பதாம். இதனால் இவர் ஸ்ரீவைஷ்ணவ பரம்பரையில் ஸம்பந்தகந்தமுமில்லாதவர் என்பதுதான் தேறிநிற்கும்.

ஸ்ரீதேசிகனுக்கு ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமியும் திருக்குமாரருமாக இருவர் சிஷ்யர்களென்று ப்ரஸித்தம். இவர்களில் முதல்வர்க்குத் தனியனிட்டவர் ஆசார்யரான தேசிகனேயென்பது குருபரம்பராக்ரந்தங்களில் சிலாசாஸனம் செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தனியன்—"பர்யாயபாஷ்யகாராய ப்ரணதார்த்திம் விதூந்வதே, ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ராய த்விதீய ப்ரஹ்மணே நம:" என்பது. சிஷ்யர்க்கு (நம:) என்றுகூட ஸாதித்திருப்பதைக் குறிக்கொள்ளவேணும்.

சீரொன்று தூப்புலென்கிற வெண்பா லோகாசார்ய ப்ரணீதமென்பதில் விவாதமே யொழிய, வேதாந்தவாசிரியர் பிள்ளைலோகாசார்யருடைய சிஷ்யர்களின் திருவடிகளைப் பணிந்தவரென்பதில் ஸந்தேஹத்திற்கோ விவாதத்திற்கோ ப்ரஸக்தி லேசமுமில்லை. த்விதீய ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஸ்வாமி பணித்ததாய் தேசிகனுடைய எழுநாளுண்டு விழாமலராக இவர்களே அச்சிட்டு வெளியிட்டிருக்கிற தேசிக வைபவத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்ட விஷயமல்லவா இது. அதிலிருந்து சில பகுதிகளை ஈண்டெடுத்துக் காட்டுவோம்.

## * தேசிகன் திருவரங்கம் சென்று சேரப் புறப்படுதல் *

"பின்பு தென்னாடும் வடநாடுந்தொழ நின்ற திருவரங்கத் திருப்பதியை மங்களாசாஸனம் செய்யவிரும்பினர் தேசிகன். ஸகல ஆழ்வார்களும் ஸகல பூர்வாசார்யர்களும் ஈடுபட்டு மண்டியிருந்த ஸ்தலம் அதுவாகையாலே அங்கே நித்யவாஸம் பண்ணவேணுமென்றும், அங்கே நித்ய காலக்ஷேப நிரதர்களான பிள்ளைலோகாசாரியர் ஸுதர்சனபட்டர் முதலானோருடைய திருவடிநிழலிலே யொதுங்கி நெடுங்காலம் வர்த்திக்கவேணுமென்றும் ஆசை கொண்டு புறப்பட்டருளியாச்சுது. "லோகாசார்யபதாம்போஜஸேவாஹேவாகதோ த்ருதம், ப்ரதஸ்தே ரங்க நகரீம் வேதாந்தார்யோ மஹாமநா:" என்று அஸ்மதாசார்யர் பணித்த தேசிக திவ்ய சரிதத்திலும் சொல்லிற்று. பேரருளாளன் நியமனங்கொண்டு புறப்பட்டருளின தேசிகன் தேவியாரோடுங்கூட வழியடைவிலே அப்பக்குடத்தான் ஸன்னிதியென்கிற திருப்பேர் நகரிலே சென்று சேர்ந்து அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களை நோக்கி கோயில் வ்ருத்தாந்தம் விசாரிக்குமளவிலே, அவர்கள் துருஷ்கஉபத்ரவப்ரபல்யங்களைச்சொல்லி ஸ்வாமி பிள்ளை லோகாசாரியர், அவருடைய திருத்தம்பியாரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனர், ச்ருதப்ரகாசிகா பட்டர் முதலான பரிகணிதர்களான ஆசார்ய ச்ரேஷ்டர்கள் நம்பெருமாளை யெழுந்தருளப்பண்ணிக்கொண்டு வெளியேறியிருக்குஞ் செய்திகளையும் விசதமாகச் சொல்ல, அதுகேட்ட தேசிகன் வேரற்ற மரம்போலே விழுந்து துடித்து, "ஸம்ஸார ஸர்ப்பஸந்தஷ்ட மர்த்ய ஸந்த்ராண தீக்ஷிதம், லோகாசார்யம் விநா ரங்கே கதம் வர்த்திது முத்ஸஹே?" [முமுக்ஷுஜநரக்ஷகரான பிள்ளைலோகாசார்யரில்லாத திருவரங்கத்தில் நான் எப்படி வர்த்திப்பேன் !] என்று சொல்லிச் சொல்லிப் புலம்பி; இப்போது நான் திருவரங்கம்செல்லக் கடவேனல்லேன்; கொங்கு மண்டலத்தில் பாங்கான வோரிடத்தில் சிலகாலம்

வாழ்ந்திருந்து ஸ்ரீரங்கஸ்ரீ நிருபத்ரவமாகி நம்பெருமாளும் கூடச்சென்ற ஸ்ரீமல்லோகாசார்ய ப்ரப்ருதிகளான பரமஸாத்விக ஸதாசார்ய ஸார்வபௌமர்களும் ஸ்வஸ்தானம்வந்து சேர்ந்தபிறகு செய்தியறிந்து கொண்டு திருவரங்கத்தேற விடைகொள்ளக்கடவேன்'' என்று அதி நிர்வேதத்துடனே அருளிச்செய்து ஸ்ரீரங்கம் செல்லாமே அப்பக்குடத்தான் ஸன்னிதியிலிருந்து நேராகப் பல விடங்களுக்கெழுந்தருளி வானியாற்றங்கரையில் சில மாதங்கள் தங்கியிருந்து அங்கும் இருப்புக்கொள்ளாமல் திருநாராயணபுரத்தில் சில காலமும் பச்சிமவாஹினிக் கரையான ஸ்ரீரங்கபட்டணத்தில் சில காலமுமாக ஸத்யமங்கலத்தில் சில காலமெழுந்தருளியிருந்தார்.

## — அபீதிஸ்தவ மநுக்ரஹித்தது —

''அப்போது ஸ்ரீரங்கஸ்ரீ விரைவில் நிருபத்ரவமாக வேணுமென்பதற்காக ஸ்வாமி தேசிகன் அபீதிஸ்தவமருளிச்செய்து அங்குள்ளாரெல்லாரையும் அந்த ஸ்தவத்தை நித்யமும் நூற்றெட்டாவ்ருத்தி பாராயணம் செய்ய நியமித்தருளி, தாம் அந்த ஸ்தவத்திலிருந்து ''நிரஸ்தரிபுஸம்பவே ச்வசந ரங்கமுக்யே விபோ! பரஸ்பர ஹிதைஷிணும் பரிஸரேஷு மாம் வர்த்தய'' என்கிற பாகத்தை அநவரதமும் அநுஸந்தித்துக்கொண்டு ''லோகாசார்ய தநீயஸோதரமுகாந் ஆசார்யவர்யாந் கதா ஸேவேயேதி ஸதா விஷண்ணஹ்ருதய: ஸ்ரீவேங்கடேசோ (குரு:'' என்று அஸ்மதாசார்யர் பணித்தபடியே அதுவே புலம்பலாய் ழிருந்த ஆர்த்தியோடே பெரிய வாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்திகளைக் கேட்டுக்கொண்டு காலம் கழித்துவந்தார்.''

## — தேசிகன் கோயில் வ்ருத்தாந்த மறிந்தது —

''இப்படி கங்குலும்பகலும் கண்துயிலறியாள் கண்ண நீர் கைகளாலிறைக்கும் என்னும்படியாக ஸ்வாமி தேசிகன் அலமாப்போடே எழுந்தருளியிருந்த காலத்திலே வருவார் செல்வார்முகமாக ஸ்ரீரங்க வ்ருத்தாந்தத்தை ஒருநாள் அறியலாச்சுது. அதாவது, பல மஹான்களின் ப்ரபல ப்ரயத்னங்களாலே ஸ்ரீரங்கநாதன் அபாயமொன்றுமின்றிக்கே திருவரங்கம் பெரிய கோயில் ஸன்னிதி சேர்ந்தருளினதாகவும், ஸ்ரீமல்லோகாசார்ய ஸ்ரீஸுதர்சந பட்டாரக ப்ரப்ருதிகளான ஆசார்யவர்யர்கள் மீண்டெழுந்தருளாமலே அங்கங்கே திருநாட்டுக் கெழுந்தருளினதாகவும் கேட்டு ''அம்ருதம் விஷஸம்மிச்ரம்'' என்று போர நொந்து நெடும்போது இதிகர்த்தவ்யதாமுக்தரா யிருந்து, அந்தமட்டில் பெருமாளாகிலும் பாங்காக ஸ்வஸ்தானம் வந்து சேரப் பெற்றதே! என்று தேறி, பிள்ளைலோகாசார்யாதிகளுக்கு ஸ்ரீசூர்ண பரிபாலனம் நடத்தியருளி நிலையிட வொண்ணாத நிர்வேதத்துடனே மூன்றுநாள் உபவாஸமாக எழுந்தருளியிருந்து ஒருவாறு திருவுள்ளத்தை ஸமாஹிதமாக்கி ''ஸ்ரீமதிலோகாசார்யே திவம் கதேபி ப்ரஸித்த தச்சிஷ்யா:, ஸந்தி கலு ரங்கநகரே தச்சரணச்சாய மாச்ரிதோஸாநி.'' [பிள்ளை லோகாசார்யர் திருநாடலங்கரித்தாலும் அவருடைய திருவடி ஸம்பந்திகள் கோயிலிலே வாழ்ந்திருப்பர்களே; அவர்களின் திருவடி நிழலிலே யொதுங்கி வர்த்திக்கக்கடவேன்] என்று பாரித்துக்கொண்டு ''ஸ காம மந வாப்யைவ'' என்னச் செய்தேயும் ''ஆருரோஹ ரதம் ஹ்ருஷ்ட:'' என்றாப்போலே ஹர்ஷத்துடனே கோயிலேரப் புறப்பட்டருளியாச்சுது.

30. ஆக இந்த வாக்கியங்களினால் தேசிகனுக்கும் ஸ்ரீலோகாசாரியர்க்கும் ஸமாகமம் நேர்ந்ததில்லை யென்பதை நிஸ்ஸந்தேஹ விபர்யயமாகவுணரலாம். இருவர்க்கும் ஸமாகமம் நேராவிடினும், தேசிகன் ஸ்ரீரங்கம் சேர்ந்தபின்பு லோகாசார்ய சிஷ்யர்களை அடிபணிந்து உய்ந்தாரென்பது "ரங்காஸ்தாநே ரஸிகமஹிதே ரஞ்ஜிதா சேஷசித்தே வித்வத்ஸேவாவிமலமநஸா வேங்கடேசேந" என்கிற பகவத்த்யாந ஸோபாந ஸூக்தியாலும், "விசுத்ததேசிகவதா ரங்கதாம்நி" என்கிற ரஹஸ்ய விசேஷஸூக்தியாலும் நிர்விவாதமானது. தமது மாதுலரான ஆசார்யரைச் சொல்லுவதானால் "ராமாநுஜார்ய சிஷ்யேண" என்றன்றோ சொல்லியிருப்பர்; அங்ஙனம் சொல்லாது "விசுத்ததேசிகவதா" என்றும், ரங்கதாம்நி என்றும் சொல்லிவைத்திருப்பதன் சுவையை அறியமாட்டாத குடுக்கைகளுக்குப்பன்னி யுரைத்துப் பயனென்? லோகாசார்ய சிஷ்யர்களை அடிபணிந்தவராயினும், ஸ்வாமி யெம்பெருமானார் ஆளவந்தாருடைய சிஷ்யர்களை யடிபணிந்திருந்தும் *யத்பதாம் போருஹத்யான ச்லோகத்தினால் ஆளவந்தாரையே சிந்தித்திருந்ததுபோல ஸ்வாமி தேசிகனும் ஸ்ரீலோகாசார்ய பாதாரவிந்த ப்ராவண்யைக நிரூபணீயராய் விளக்கினார். ஆனது பற்றியே த்விதீய ப்ரஹ்மதந்த்ர ஸ்வாமி ஸாதித்த தேசிக வைபவத்தின் முடிவிலிட்ட சரமச்லோகம்

"அப்தே ஸௌம்யஸமாஹ்வயே நிகரே ராசிம் கதே வ்ருச்சிகம்
ராகாயாம் மூலிவாஸராஹ்வயமுநேஸ் தாரே குரோர் வாஸரே,
விச்வாமித்ர குலாப்தி கௌஸ்துபமணி: வேதாந்தஸூரிர் மஹாந்
லோகாசார்ய பதாப்ஜ சிந்தநரதோ லோகம் யயௌ சாச்வதம்"

என்று இங்ஙனே அமைந்துள்ளது. இப்போது இவ்வளவுபோதும்.

## — வாதவிவாதமூல பீஜமர்த்தனம் —

31. இந்த *சிறொன்று தூப்புல் தனியன் விஷயத்தில் இன்னமும் விரித்துரைப்பது ப்ரேதசிரஸி லகுட ப்ரஹாரமேயாகும். பிறர்வாயை மூடுவிக்கும் ஹேது ஒன்றே அசைக்க முடியாதது; அப்பயதீக்ஷிதர் ஏற்படுத்திய தும்பைவனமென்னும் அக்ரஹாரத்தின் சிதைவு நாமமான தூப்பில் தூப்பிலாயிற்று, அச்சொல் புகுந்திருப்பதொன்றே நவீனகல்பிதமென்பதை நிலைநாட்டித்தரும்.

32. இந்த சில்லரை விவாதங்கள் எக்கேடுகெட்டாலென்ன? இவற்றில் வெற்றி இவர்களுக்கேயாருக. முக்கியமாக நாம் தொடங்கின விஷயமென்ன என்பதை நினைவூட்டி, அதில் இவர்கள் வாய்திறக்க வழியில்லை, ஏழேழ்பிறவியிலுமில்லை—என்பதை நிலைநாட்டுவோமிதோ.

33. திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருவாய்மொழிக்கு ஆறுயிரப்படியென்றொரு வியாக்கியானமருளிச் செய்திருக்கிறாரென்பது உபதேசரத்தினமாலையினால் உலகுக்குத் தெரியுமேயொழிய வேறொன்றால் தெரியாது. தேசிகனுக்குமுன்னே ஆறுயிரப்படி அவதரித்திருந்தாலும் அதுதன்னை அவர் தொட்டறியார்—கண்டறியார்—கேட்டறியார் என்று சபதம் செய்வேன். இவ்விஷயத்தில் பிரதிவாதம்

செய்யத் துணிவுடையார் தாராளமாக முன்வரலாம். திருக்குருகைப்பிரான் பிள்ளா னென்கிற திருநாமம் தேசிகனுடைய நூல் ஒன்றிலும் இடம் பெற்றதில்லை. ஸ்ரீவசனபூஷணத்தில் பிள்ளான் ஸ்ரீஸூக்தியுதாஹரணம் இரண்டிடத்திலுள்ளது. அந்த இரண்டிடங்களை தேசிகன் எடுத்துக்கொண்டு ப்ரஸங்கித்திருப்பதை நாம் பலகால் காட்டியே யிருக்கிறோம். ஆறுயிரப்படியின் நாமநிர்தேசமோ அதிலுள்ள அர்த்தங்களில் ஏதேனுமொன்றையாவது உபஜீவித்ததோ கிடையவேகிடையாது. பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தையே ஸேவித்து அதிலுள்ள அர்த்தங் களையே உபஜீவித்திருக்கிறாரென்பது கல்வெட்டு கல்வெட்டு கல்வெட்டு. பிள்ளான் ஸ்ரீஸூக்தியைக் கண்டித்தவர் தேசிகன் என்பதை நாம் இந்த்ரஜாலமாகக் காட்ட வில்லை; கண்ணுடையீர்! காண்மின்.

## பிள்ளான் ஸ்ரீஸூக்திக்கு தேசிகனது மறுப்பு

34. கீழே உதாஹரித்த "மதிராபிந்துமிச்ரமான சாதகும்பமய கும்பகத தீர்த்த ஸலிலம்போலே அஹங்காரமிச்ரமான உபாயாந்தரம்" என்கிற ஸ்ரீஸூக்தி திருக் குருகைப்பிரான் பிள்ளான் பணித்ததாக ஸ்ரீவசனபூஷணத்திலுள்ளது. இதைக்கண்ட வேதாந்தவாசிரியர் இதையும் கண்டிக்கவேணுமென்று அஸ்தாநே கலங்கி நினைத்து ரஹஸ்யத்ரயஸாரத்தில் "மத்யோபஹத பாத்ரஸ்த நீர்த்த த்ருஷ்டாந்த வர்ணநம், அஹங்காராந்வயே து ஸ்யாத் ப்ரபத்நாவபி பக்திவத்." என்று ஒரு காரிகையெழுதி க்ருதக்ருத்யராய் விட்டார். இந்த காரிகையில் பூர்வார்த்தத்தாலே *மத்யோபஹத பாத்ரஸ்த தீர்த்தத்தை த்ருஷ்டாந்தீகரித்து ஒருவர் பக்திக்குக் குறைகூறினதாகக் காட்டி உத்தரார்த்தத்தாலே அதற்குக் கண்டனம் ஸ்பஷ்டமாகச் செய்யப்பட்டிருக் கின்றது. மத்யோபஹதபாத்ரஸ்த தீர்த்த த்ருஷ்டாந்தவர்ணனம் செய்தவர் யாரென்று கேட்டால் திருக்குருகைப்பிரான்பிள்ளான் என்று சொல்லித் தீர வேணுமேயொழிய வேறொருவரை சொல்லமுடியாது. "மதிராபிந்துமிச்ரமான..." இத்யாதி ஸ்ரீவசநபூஷணோபாத்த ஸ்ரீஸூக்தியைக் கொண்டு தானே *மத்யோபஹத பாத்ரஸ்தேத்யாதி காரிகை அவதரித்தது. *தன்னுல் வரும் நன்மை யித்யாதியான பிள்ளான் வார்த்தைக்கு ஒரு தாத்பர்யவர்ணனம் பண்ணினதுபோலே இதற்கும் பண்ணியிருக்கலாம். அல்லது, "பிள்ளான் இப்படி யொருகாலும் பணித்திருக்க மாட்டார்" என்றுவது எழுதியிருக்கலாம். இரண்டும் அஸாத்யமாகவே கண்டித் துத் தொலைப்பதற்குமேல் கர்த்தவ்யமில்லையென்று துணிந்து *இதி மந்தைரிதம் ப்ரோக்தம்* என்றோ *க்ரந்த ஜ்ஞைரபஹாஸ்யம் தத்* என்றோ எழுதக் கைவராமல் "இது பிள்ளான் திருமுடியில் கட்டின திருப்பரிவட்டம்" என்று ஆழ்ந்த அறிவுடை யார் மட்டுமே தெரிந்துகொள்ளும்படியாக காரிகையிட்டுக் கூடாசிவிட்டார். இது இப்படித்தானு? வேறுவிதமா? என்று விசிகித்ஸை யுண்டாகும் சிலருக்கு; இங்குத் தெரிவித்ததோரிதிஹாஸம் ஸ்ரீராமாநுஜன் 276ல் விரிவாகக் காண்க.

35. இஞ்சிமேட்டு அழகியசிங்கர் ஸ்வாமியின் ஸுபோதிநீ வியாக்கியானம் அற்புதமாக அச்சிடப்பட்டுத் தேசமெல்லாம் திகழ நிற்கிறது. அதில் இரண்டாவது ஸம்புடத்தில் (பக்கம் 494ல் கடைசியிலிருந்து மூன்றுவது வரி காண்க.) அதாவது,

> "சிலர் *மதிராபிந்து மிச்ரமான சாதகும்பமயகும்பகத தீர்த்த ஸலிலம் போலே அஹங்கார மிச்ரமான உபாயாந்தரம்* என்கிற பிள்ளான் வாக்யத்தைக்கொண்டு பக்தி அஹங்கார கர்ப்பமாகையால் ஸ்வரூப விருத்தமென்பர்கள், அது அநுபபந்நம்''.

என்று ஸாதித்திருக்கிறார். அநுபபத்தியை விளக்கவில்லை, ''ப்ரபத்தாவபி பக்தி வத்'' என்கிற மூலத்தை மட்டுமே தமிழாக்கம் செய்திருக்கிறார். அநுபபந்நம் என்று கண்டிக்கப்பட்ட அர்த்தம் பிள்ளானுடையதே யென்பதில் ஸந்தேஹமில்லையே. அநுபபந்நமாகவே யிருக்கட்டும். தேசிகன் திருவாக்கில் அநுபபந்நமென்று வந்தால் அது உபபன்னமாயிருக்க வழியேது? 'அநுபபன்னமன்று, உபபன்னந்தான்' என்று இங்கு நாம் ஸமர்த்திக்க வரவில்லை, இங்கு விஷயமென்ன தெரியுமோ? தேசிகன் பிள்ளானுடைய ஸ்ரீஸூக்தியொன்றையும் தழுவாததோடு அதைக் கண்டிந் திருப்பதுமுண்டென்பதை நிலைநாட்டுவதொன்றேயாம். இது சீமைத்தீர்ப்பேயாம்.

இதுபற்றிக் கல்வெட்டாகத் தெரிவிப்பது கேளீர்.

*மத்யோபஹத பாத்ரஸ்த* இத்யாதியான ரஹஸ்யத்ரயஸாரகாரிகையானது (மதிராபிந்து மிச்ரமான) இத்யாதி ஸூக்திக்குக் கண்டனமென்பதை யாரும் மறுக்கமுடியாது. அந்த ஸ்ரீஸூக்தி பிள்ளானுடையதென்பதையும் யாரும் மறுக்ககில்லார். ஆக, தேசிகன் மதாந்தரஸ்தர்களின் உக்திகளைக் கண்டிப்பது போலவே பிள்ளானுடைய ஸூக்தியையும் கண்டித்தவரே யென்று நிஸ்ஸந்தேஹமாகத் தேறிநின்றது. இனி, ''பெரியவாச்சான் பிள்ளையும் தேசிகனும்'' என்று மகுடமிட்டுப் பேசப்புகுவோமாயின், ''வெள்ளைப் பரிமுகர் தேசிகராய் விரகாலடியோமுள்ளத் தெழுதிய தோலையிலிட்டனம்'' என்ற அவரது பாட்டில் (தேசிகராய்) என்றது ''பெரியவாச்சான்பிள்ளை யென்கிற ஆசாரியராய்'' என்கிற விவக்ஷையினால் எழுதப்பட்டதேயன்றி வேறொருவரை விவக்ஷித்தன்று—என்று சபதம் செய்யத்தட்டில்லை. ரஹஸ்யத்ரயஸாரத்தில் ப்ரபாவவ்யவஸ்தாதிகாரத்தில் *குலந்தரு மென்கிற பெரிய திருமொழிப்பாசுரத்தின் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தியை அப்படியே எடுத்துக் காட்டியிருக்கிறாரென்பது நிர்விவாதம். ஶ்ரீமச்சரித்ர ரக்ஷை, ஸ்தோத்ர பாஷ்யம், கீதாபாஷ்ய தாத்பர்ய சந்திரிகை, தாத்பர்ய ரத்னாவலீஸாரங்கள் ஆகிய இவற்றில் பெரியவாச்சான் பிள்ளையின் ஸ்ரீஸூக்திகளைக் கைவிளக்காகக் கொண்டே பலபல அர்த்தங்களை அறுதியிட்டிருக்கிறார் தேசிகன்—என்பதைப் பலகால் உணர்த்தியிருக்கிறோம். இந்நூலிலும் உணர்த்துவோம். ''நிமீலயது லோசநே ந ஹி திரஸ்க்ருதேரி பாஸ்கர:'' என்கிற தேசிக ஸூக்தியையே நினைவூட்டுகிறோம் பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்தியை தேசிகன் கண்டித்திருக்கிறாரென்பது பொய். மெய்யே கண்டித்திருக்கிறாரென்றால், உடையவர் பிள்ளான் ஸ்ரீஸூக்திகளைக் கண்டித்ததோடொக்கும்.

## — சமதமார்த்த விவரணத்தில் மறதி —

36. ஸூர்யனுக்குப் பௌர்ணமியன்று உபராகம் என்று எழுதினவொருவர் பரிஹஸிக்கப்பெற்று, அதை ஸ்தாபிக்க வருஷசதம் போராடினாலும் பயன்பெறார். மருண்ட விஷயங்களில் மருளை அஞ்ஜலிபந்தத்தோடு இசைந்துகொள்வது ப்ராமாணிக க்ருத்யம். சமதமார்த்த விவரண விஷயத்திலெவரும் மறுவாய்திறக்க இடமில்லாதபடி நாம் எழுதியிருப்பதைமறந்தவர்களுக்கு இங்குச் சிறிது நினைவூட்டுவோம்.

37. ஸ்ரீவசந பூஷணத்தில் (96.) "ஆத்ம குணங்களில் ப்ரதாநம் சமமும் தமமும்" என்பதொரு சூர்ணிகை. இவ்விடத்து வியாக்கியானத்தில் மணவாளமாமுனிகள் "சமமாவது அந்த: கரண நியமநம்; தம்மாவது பாஹ்யகரண நியமநம்" என்றருளிச் செய்து இதற்கு ப்ரமாணங் காட்டியருளத் திருவுள்ளம்பற்றி "*சமச் சித்தப்ர சாந்திஸ் ஸ்யாத் தமச் சேந்த்ரிய நிக்ரஹ:* என்னக்கடவதிறே" என்று ஒரு ப்ரமாணம் காட்டி, உடனே பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தியையும் காட்டவேண்டி "*க்ஷமா ஸத்யம் தமச் சம:* என்கிறவிடத்தில் 'தமோ பாஹ்ய கரணாநாம் அநர்த்த விஷயேப்யோ நியமநம்; சம:—அந்த:கரணஸ்ய ததா நியமநம்' என்றிறே பாஷ்யகாரருமருளிச் செய்தது." என்று கீதாபாஷ்ய ஸூக்தியை யெடுத்துக் காட்டியருளினார். இவ்வளவோடு நில்லாமல் அடுத்தபடியாக "மாறிச் சொல்லுமிடமுமுண்டு" என்றருளிச் செய்தார். அதன் கருத்து என்னவென்னில், பாஹ்யகரண நியமநம் தம:, அந்த:கரண நியமநம் சம: என்று இப்படியே கொள்ளவேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை; அந்த:கரண நியமநம் தம: பாஹ்யகரண நியமநம் சம: என்று கொள்ளுவதுமுண்டு என்பதாம். கீழே இரண்டு ப்ரமாணங்களைத் தாமே யெடுத்துக் காட்டிவிட்டு அவற்றோடு ஸம்பந்தப்படாதபடி "மாறிச் சொல்லுமிடமுமுண்டு" என்று அருளிச்செய்வது மணவாளமாமுனிகளின் இயல்புக்குச் சேராது; அப்படியிருக்க எங்ஙனே யருளிச் செய்தாரென்று விமர்சிக்க ப்ராப்தம். மேலே காட்டின ஸ்ரீஸூக்தியில் "மாறிச் சொல்லுவதுமுண்டு" என்னாமல் "மாறிச் சொல்லுமிடமுமுண்டு" என்று ஸாதித்திருக்கையாலும், அதுதானும் கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தியை உதாஹரித்தவுடனே ஸாதித்திருக்கையாலும் கீதாபாஷ்யகாரரான ஸ்வாமியே மற்றோரிடத்தில் மாறிச் சொல்லி யிருக்கிறாரென்று தெரிவிக்கப்பட்டதாகிறது. அப்படி ஓரிடத்தைத் தாம் காணாமல் அந்த ஸ்ரீஸூக்தியை ஒருகாலும் அருளிச்செய்யமாட்டார் மாமுனிகளென்பது ஸத்யம். இதுபற்றியே யன்றோ "பொய்யிலாத மணவாளமாமுனி புந்திவாழி" என்று உலகமெல்லாம் வாழ்த்திப் போருவது. வேறு எந்த ஆசாரியர்க்கும் ஏற்காத வாழ்த்தன்றோ இது.

38. இனிக் கேண்மின்; அந்த கீதாபாஷ்யத்திலேயே ஸ்வாமி தாமே மாறிச் சொல்லியுள்ளார். (அதாவது)-பதினாறுமத்யாயத்தில் முதல் சுலோகத்தில் "தாநம் தமச் ச யஜ்ஞச் ச" என்றும், இரண்டாம் சுலோகத்தில் "த்யாகச் சாந்தி: அபைசுநம்" என்றும் வருகிறது. அங்கும் தம சமங்களுக்கு விவரணமுள்ளது. கீழே காட்டின விவரணம் பத்தாமத்யாயத்தில் நான்காவது சுலோகத்தின் பாஷ்யத்திலுள்ளது, (16-1, 2ல்) காணும் விவரணம் அதனில் வேறுபட்டது. அந்த:கரண நியமனத்தை தமமாகவும், பாஹ்ய கரண நியமனத்தை சமமாகவும் இங்கு பாஷ்யகாரர் அருளிச் செய்துள்ளார். அவரும் ஸ்வோக்தி விருத்தமாக அருளிச் செய்பவ

ரல்லர். இரண்டு படியையும் அவர் ப்ரமாணஸித்தமாகக் கண்டவராகையாலே ஒரு படியை ஓரிடத்திலும் மற்றொரு படியை மற்றோரிடத்திலும் அருளிச் செய்தார். மணவாளமாமுனிகள் அவருடைய புநரவதார பூதராதலால் இரண்டு படியும் தமக்கு ஹ்ருத்கதமாயிருக்கையாலே "மாறிச் சொல்லுமிடமுமுண்டு" என்றருளிச் செய்தார். ஸ்வாமி தேசிகனருளிச் செய்த தாத்பர்ய சந்த்ரிகையில் மேலே யெடுத்துக் காட்டின பதினொருமத்யாய ஸ்தலத்தில்—"ஏதேந கேஷாஞ்சித் அநயோச் சப்தயோர் வ்யுத்க்ரமேண அர்த்த வ்யாக்யாநம் நிரஸ்தம்" என்கிற பங்க்தி காணப்படுகிறது. அது சங்கர பாஷ்யத்திற்கு மறுப்பென்று ஸ்பஷ்டமாக விளங்கா நின்றது.

39. ஆனால் நம் பாஷ்யகாரருடைய ஸ்ரீஸூக்திக்கும் மறுப்பாகத் தேறுவதால் இந்த பங்க்தி ப்ரக்ஷிப்தமாயிருக்குமென்று தோன்றுகிறது. வ்யுத்க்ரமேண சமதமார்த்த வ்யாக்யானம் பண்ணியருளினவர் பாஷ்யகாரருமாதலால் அவருடைய வியாக்கியானத்தை நிரஸ்தமென்று ஸ்வாமி தேசிகன் நெஞ்சாலும் நினையாரன்றோ? பத்தாவது அத்யாயத்தில் பாஷ்ய ஸ்ரீஸூக்தியிருக்கும்படியையும், அங்கு சந்த்ரிகையில் தாம் விசேஷித்து அருளிச் செய்தபடியையும் மறக்க வல்லவரல்லரே தேசிகன். சமம் தமம் என்று இரண்டு பதம் வேண்டியதில்லை; அந்யதர பதமிருந்தாலும் அதற்கே பாஹ்ய ஆந்தரகரண நியமனத்தைப் பொருளாகக்கொள்ள முடியும். ஆனாலும் தனித்தனி இரண்டு பதங்களிருப்பது விணாகாதபடிக்கு அர்த்த பேதம் காட்டுவது யுக்தம் என்று திருவுள்ளம்பற்றி "......பௌநருக்த்ய பரிஹாராய விஷயபேதே வக்தவ்யே நியமந க்ரமேண தமசமயோ: பாஹ்யாந்தரகரண விஷயத்வோக்தி:" என்று சந்த்ரிகையில் ஸாதித்திருப்பதனால் இதற்கும் சேராதபடியன்றோ பதினொருமத்யாயத்தில் சந்த்ரிகை அவதரித்துள்ளது.

40. இங்கு முக்கியமாகக் குறிக்கொள்ளவேண்டிய விஷயம் கேளீர் "ஏதேந, வ்யுத்க்ரமேண கேஷாஞ்சித் வ்யாக்யாநம் நிரஸ்தம்" என்கிறார்; ஏதேந என்பதற்கு 'பாஷ்யகாரர் இப்படி யருளிச் செய்திருக்கையாலே' என்றுதானே பொருளாகும். நம்முடைய பாஷ்யகாரர் ஸாதித்ததனாலே சங்கரபாஷ்யம் எப்படி நிரஸ்தமாகும்? என்று கேட்டால் வாய்திறக்க வழியுண்டோ? "ஸ்ரீபாஷ்யேண சங்கரபாஷ்யம் நிரஸ்தம்" என்று எளிதாக எதையும் கண்டித்துவிடலாமே. ப்ரபலப்ரமாணத்தை யெடுத்துக்காட்டி "ஏதேந நிரஸ்தம்" என்றால் நிராஸம் ஸ்ந்திக்கும். "எங்கப்பா சொல்லுவதற்கு விருத்தமாக உங்கப்பா சொல்லுவது தப்பு" என்னுமாபோலே யன்றோ "ஏதேந நிரஸ்தம்" என்கிறவிது உள்ளது. இதை க்ரஹிக்க மூளையில்லையே!

41. ஆக இந்த நமது நிருபணத்தின்மேல் ஏற்கனவே பதில் எழுதி, அடுத்தநாளே பதில்பெற்று ஓய்ந்த பண்டிதரே மீண்டும் ஸ்வயமபி லிகிதம் ஸ்வயம் ந ஜாநாதிப்படியிலே எழுதியுள்ளார். கல்வெட்டாக ஒரேவார்த்தை;—நாம் கௌரவமாகத் தெரிவித்திருக்கிறபடி ப்ரக்ஷிப்தமென்று கொள்ளாவிடில், தத்வடீகாஸூக்தியை அத்யந்தம் அஸமஞ்ஜஸமென்றாரே, அதே ரீதியில் இதையும் அஸமஞ்ஜஸமென்று முடிப்பது தவிர ஏழேழ் பிறவியிலும் வேறுவழியில்லை யென்பது திண்ணம். சுஷ்கவாக் ஜாலங்களைக் கண்டு மருள்வாராருமிலர். (கோதார்த்தோக்ஷாவமுந்த-பண்ணுதட) இந்யாதிகளிற் போலவே இதிலும் திருத்தம் செய்துகொண்டாலன்றி உய்யவிரகில்லை. எதிலும் வ்யதிகரணக்ரஹணமும் விதண்டாவாதமுமே வடிவெடுத்த இவர் தவிர வேறொருவர் இதில் வாய்வைப்பதில்லை. யுக்தமுக்தம் அண்ணவால்-என்றே கூறுவர்.

## — ப்ரபந்தசாரத்திற்குப் புநராயாந்மஹாகபி: —

42. இவருடைய வகுப்பினர் தேசிகனோடு உறவுகொண்டாடத் தொடங்கினது 1804-வது வருஷத்திற்குப் பிறகு என்பது சிலாலிகிதம். அதற்கு முன்பு இவர்களுக்கு ஆழ்வாரும் தெரியாது, எம்பெருமானாரும் தெரியாது. தேசிகனும் தெரியாது. ஏன் தெரியாது? நன்ருகத் தெரியுமென்னில்; அம்மூவரைப் பற்றின ப்ரஸ்தாவமுள்ள ஒரு புத்தகத்தையாவது 1800-ஆம் வருஷத்திற்கு முந்தியதாக இவர்கள் காட்டிவிடட்டுமென்று நாம் முப்பது வருஷமாகச் சோம்பாமல் எழுதிவருகிறோம். பிள்ளைப்பெருமாளையங்கார் திருவரங்கக் கலம்பகத்தில் "காணாத புதுமை பல காட்டுவன் கட்செவிகளெட்டையுமெடுத்தாட்டுவன் கடல் பருகுவன் பெரிய கனகவரையைச் சிறிய கடுகினிலடைத்துவைப்பன்" என்று சம்பிரதம் (இந்திரஜாலம்) காட்டுகிறார். அப்படிக்கூட இவர்களால் காட்டமுடியாததன்றோ இது. இவ்வகுப்பினர்க்கு இயற்கையிலுண்டான தமிழ்த்வேஷம் இன்னமும் மாறவில்லையே. "பல்லாண்டு பல்லாண்டு" என்று சொன்னாலும் ப்ரத்யவாயமுண்டாகுமென்று "தந்தஸம்வத்ஸரம் தந்தஸம்வத்ஸரம்" என்பவர்கள் இவர்கள்—என்பதை ஸ்ரீகாமகோடி சங்கராசார்ய ஸ்வாமிகளின் வாக்கால் அற்புதமாகக் கேட்டறியவேணும்.

43. பிரபந்தசாரம் உண்மையில் தேசிகன் ஸாதித்ததாயிருந்தால் அது தென்கலையாருடைய பாடபரம்பரையில் வந்திருக்கவேணுமே யொழிய இவர் வகுப்பினரிடம் வந்து மாட்டிக்கொள்ள ப்ரஸக்தியே கிடையாது. திருக்குடந்தை திருவிண்ணகர் தேரழுந்தூர் திருவுள்ளூர் திருக்கண்டியூர் முதலான பத்தெட்டு திவ்ய தேசங்கள் சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் வடகலையாக்கப்பட்டன வென்பதை இவர்களும் மறுக்ககில்லார்கள். யுத்தகாண்டத்தையே முதன்மையாகக் கொண்டது இவர்களுடைய ராமாயணமென்பது கல்வெட்டு. அப்போது கற்பனை செய்யப்பட்டவற்றில் பிரபந்தசாரமும் ஒன்று என்பதுதான் இவர்களுடைய வாதவிவாதங்கள் இதில் வளர வளர ஊர்ஜிதமாகி வருகிறது. மருமமான விஷயங்களையெல்லாம் விளக்குகிறேன் காண்மின்.

44. ஈஷத்தும் மறுப்புரைக்க வொண்ணாத—மறுப்புரைக்க நெஞ்சிலும் நினைக்க முடியாத விஷயங்களையன்றோ நாம் எழுதுவது வழக்கம். இவ்வுண்மையை யறிந்து வெளியிட்டவர்களில் ஸ்ரீமத் D. R. அவர்கள் தலைவர் என்பதை எத்தனை தடவை வெளியிட்டாலும் மிகையாகாது. ப்ரக்ருத விஷயத்தில் மறுக்கமுடியாதவை யென்று நாம் கொண்ட உபபத்திகளை ஸாரமாக ஈண்டெழுதுகிறோம்.

45. ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளை அருளிச்செயலென்றும் திவ்யப்பிரபந்தமென்றும் வழங்காமல் பிரபந்தமென்று வழங்குவது திவ்யப்ரபந்தத்வேஷிகளான ஸ்மார்த்தர்களின் திரளிலே தோன்றியது. அது பிறகு ஸாமாவியர்களான வைணவர்களின் வாக்கிலும் புகுந்தது. பூருவாசாரியர்களும் நிகமாந்தமஹாகுருவும் பிரபந்தமென்று ஒருவர் சொல்லக் காதால் கேட்டாலும் மாய்ந்துபோவரே. இக்காலத்திலொருவர் தம்முடைய திவ்யப்ரபந்தத்வேஷத்திற்கும், பூர்வாசார்ய வித்வேஷத்திற்கும் சாச்வத ஜயத்வஜமாக ப்ரபந்தரக்ஷை யென்று எழுதிவரும்படியான அவத்யம் தேசிகனிடத்தில் ஏறுமா? எங்ஙனே யேறும்?

**46.** நூல்களில் பொது நிர்தேசமென்றும் சிறப்பு நிர்தேசமென்றும் இரண்டுண்டு; திவ்யப்பிரபந்த வியாக்கியானங்களில் கீழ்ப் ப்ரபந்தத்திலும் என்றும் இப் பிரபந்தத்தில் என்றும் அருளிச் செய்வதுண்டு. அது கொண்டு "பூருவர்களும் ப்ரபந்தமென்று வியவஹரித்ததுண்டு" என்று காட்ட வருவது அபஹாஸ்யமாகும். ஸ்வாமி ஸ்தோத்ர பாஷ்யத்தில் *மாதாபிதாயுவதய:* வியாக்கியாந-உபக்ரமத்தில் "பராசரப்ரபந்தாதயீ" "உபஜீவ்யப்ரபந்த நிர்மாண க்ரமாத்" என்று ஸாதித்துள்ளார். அது கொண்டு ஸ்ரீவிஷ்ணு புராணத்தை ப்ரபந்தமென்பதுண்டோ? "பாஷ்ய ப்ரபந்தே" "ச்ருதப்ரகாசிகாப்ரபந்தே" இத்யாதி ப்ரச்சத ப்ரயோகங்களுண்டு. அருளிச் செயலை விவக்ஷித்து ப்ரபந்தமென்று வழங்குவது நவீனர்களிடத்தன்றிப் பூருவர்களிடத்து எங்குங்காண முடியாது. ஆக இது தேசிக க்ருதியன்று என்பதற்கு இது முதன்மையான ஹேது. இதற்கென்ன சொல்லுகிறீர்?

**47.** தேசிகனருளின குருபரம்பரா ஸாரத்தில் ஆளவந்தார் முதலான ஆசார்யர்களின் ப்ரஸ்தாவத்தில் "இவரருளிச் செய்த ப்ரபந்தங்கள்" என்று அஸக்ருத் ஸாதிக்கிறார். எம்பெருமானார் ப்ரஸ்தாவத்தில் "திருவாய்மொழி யோதினார்" "திருவாய்மொழிக்கு அர்த்தம் கேட்டருளினார்" என்றே ஸாதித்திருப்பதைக் காணலாம். இப்படிப்பட்ட தேசிகர் ப்ரபந்தஸார மென்று பெயரிட்டு ஒரு ப்ரபந்தம் பண்ணினாரென்கை அநுவதிக்கவும் தகாததே. இது வெளிவ்யவஹாரங்களோடு நின்றாலும் பாதகமில்லை. "வேதாந்த குரு மொழிந்த ப்ரபந்தசாரம்" என்று நூலினுள்ளும் நுழைந்திருப்பது மிகவும் அருவருக்கத் தக்கதன்றோ.

**48.** எந்த ப்ரபந்தத்தின் எந்த விதமான ஸாரம் இதில் எந்த பாட்டில் பொறித்திருப்பதென்று கேட்டாலோ வர்ஷசதமானாலும் விடையிறுக்க முடியாது. தேசிகன் ரஹஸ்யத்ரயஸாரமென்றும், ஸாரஸாரமென்றும், த்ரமிடோபநிஷத் ஸாரமென்றும் சில பிரபந்தங்கள் ஸாதித் திருக்கிறாரே, இவற்றில் ஏதேனும் கேள்வி பிறப்பதுண்டோ? ரஹஸ்யத்ரயத்தின் ஸாரப் பொருள்களைக் கொண்டது ரஹஸ்யத்ரயஸாரம்; அந்த ஸார க்ரந்தத்தின் ஸாரம் கொண்டது ஸாரஸாரம். த்ரமிடோப நிஷத்தான திருவாய்மொழியின் ஸாரங்கொண்டது த்ரமிடோப நிஷத் ஸாரம். மற்றும் அருளாளப் பெருமாளெம்பெருமானார் நடாதூரம்மாள் முதலானாருடைய ஞானஸாரம் ப்ரமேயஸாரம் தத்வஸாரம் முதலிய க்ரந்தங்களின் திருநாமங்களிலும் விசாரம் தோன்ற ப்ரஸக்தியே கிடையாது. திவ்யப்ரபந்தார்த்த விசார லேசமுமற்ற சுவடிக்கு ப்ரபந்தசார மென்று ஒருகாலும் ஸ்வாமி பெயரிடமாட்டாரென்றால் இதை மறுக்க நினைப்பவர்களா தேசிக பக்தர்கள்?

**49.** ப்ரபந்தசாரமென்ற நூற்பெயரில் பிரபந்தமென்பதற்கு திவ்யப்ரபந்தம் பொருளன்று என்கிற வாதத்திற்கு வாயால் சிரிக்கமாட்டார்கள். "ஆழ்வார்களவதரித்த நாளூர் திங்கள்" என்பது தொடக்கம். [நாள் ஊர் திங்கள்] நாளென்பது நக்ஷத்திரம்; ஊரென்பது தெரிந்ததே; திங்களென்பது மாஸம். ஊரை முன்னேயோ பின்னேயோ எங்கும் வைக்கலாம். மாஸநக்ஷத்ரங்களை மாற்றவே தகாது. இன்ன மாஸத்தில் இன்ன நக்ஷத்ரத்தில் என்பதுதானே அடைவு; "ஆழ்வார்களவதரித்த ஊர் திங்கள் நாள்" என்றோ "திங்கள் நாளூர்" என்றோ சொல்லுவதில் யாப்புச்

சிதைவு எள்ளளவும் நேராது. 'நாளூர் திங்கள்' என்பதும் இரு தேமாச்சீர்களே. ஊர் திங்கள் நாள் என்பதும் இரு தேமாச்சீர்களே. திங்கள் நாளூர் என்பதும் இரு தேமாச்சீர்களே. "உத்தராயணே விச்வாவஸுநாம ஸம்வத்ஸரே, கந்யாமாஸே, தசம்யாம் திதௌ சுக்லபக்ஷே" என்று சொல்லுவது எங்கேனும் கண்டதுண்டோ? இந் நேர்த்திக்குச் செய்யுள் கூடாவிட்டாலும் சிரமப்பட்டுக் கூட்டுவர்கள் சிறிய ஞானத்தர். எளிதாகவே கூடுவதாயிருக்க விபரீதமாகப் பாடிறுரென்னு மவத்யத்தை ஸ்வாமி திருமுடி மேலா ஏற்றுவது? இப்படியும் ஒரு விதண்டவாதமா?

50. விவாத நூலில் "வையகமெண்" என்கிற பதினேழாம் பாட்டு மிகவும் பிற்பட்டது. ஒருவர் செய்து முடித்த பிறகு மற்றொருவர் செய்து நுழைத்ததென்பதில் ஐயுறவேண்டா. இப்பாட்டில் (17ல்) ஆழ்வார்கள் பன்னிருவரையும் பேசி முடித்தபின் "எதிராசர் தய்மோடு ஆறிருவர் ஒரொருவர் அவர் தாம்செய்த...... நாலாயிரமும்" என்றுள்ளது. இதனுல் இராமானுச நூற்றந்தாதியை இராமானுசர் தாமே செய்தருளியதாக நிஸ்ஸந்தேஹமாய்க் கூறப்பட்டதாயிற்று. இதற்கு இப்படி பொருளல்லவென்றும், இராமானுசர் செய்வித்த நூலென்று பொருள் கொள்ளலாமென்றும் வேறு விதமாகவுங் கொள்ளலாமென்றும் நவீனவுரைகாரர்கள் சிரமப்படுகிருர்கள். அது '......வ்ருதா ச்ரம:' அத்தனை. 'இராமானுசர் இயற்றினபடியாலே இராமானுச நூற்றந்தாதியெனப் பெயர் வந்தது' என்று மருண்ட வொருவர் செய்த செய்யுளிது, 'பர்த்ருஹரி, பட்டிகாவ்யம், பாரவி, முராரி' இத்யாதியாக வழங்கும் க்ரந்த நாமங்கள் ப்ரமஹேதுவாயின. தேசிக ப்ரபந்த மென்ருல் தேசிகரியற்றிய ப்ரபந்த மென்றுதானே பொருள். அப்படியே கொண்டார்களிங்கும்.

51. சில கற்பனைகள் கேண்மின். திருவெவ்வுளூரெம்பெருமானுக்கு தேசிக ஸ்துதியில்லையே யென்று குறைப்பட்ட சிலர் கிங்க்ருஹேசஸ்துதி யென்று ஒன்று கல்பித்து ஸ்வாமியின் க்ருதியாக வெளியிட்டிருக்கவில்லையா? யாரோ வொருவர் செய்த ஹரிதிநதிலகத்தை ஸ்வாமியின் க்ருதிகளிலே பரிகணனம் செய்திருக்கவில்லையா? ஆசார்ய கோஷ்டியில் சேராத வொருவர் செய்த ஸ்ரீஸூக்த பாஷ்யத்தை நஞ்சீயருடைய க்ருதியாக ஏறிட்டு வெளியிட்டிருக்கவில்லையா? ப்ரமத்தினுல் சில, ஆக்ரஹத்தால் சில என்று வாசியுள்ளது. கிங்க்ருஹேசஸ்துதி-ஹரிதிநதிலகாதிகளை ஸ்வாமியின் க்ருதியாக ஸாமான்யர்கள் எழுதிவைத்திருந்தால் கேள்வியில்லை. தர்சன ஸ்தாபகாசார்யர்களென்று விருது பெற்றவர்களுமன்ருே எழுதிவைத்திருக்கிருர்கள், இல்லை யில்லையென்ருல் ஸதஸ்ஸில் காட்ட ஸஜ்ஜனுயிருக்கிறேன். சிறியாரோடு பெரியாரோடு வாசியில்லை கல்பனைக்கு.

52. சாலியர்கள் [பட்டுநூல்காரர்கள்] என்கிற வகுப்பினர் பூணூலணிந்து பன்னிரு நாமஞ்சாத்திப் பஞ்சகச்ச வேஷ்டியுமுடுத்து ஆங்காங்கு ஸ்ரீவைஷ்ணவ ப்ராஹ்மணர்களோடு கலந்து பரிமாறுகிருர்கள். மஹோத்ஸவங்களில் ததீயாராதன கோஷ்டிகளிலும் ஸமபங்க்தியில் அந்வயித்து புஜிக்கிருர்கள். இப்படியே காலந் தள்ளுகிறது. ஸமய விசேஷங்களில், இவ்வநீதியை எம்பெருமான் தானும் ஸஹித்திருக்கமாட்டாமல் பிடியுண்ணச் செய்கிருவிவர்களை. அடியேன் வெகுநாள் நினைத்

திருந்ததையும், விமர்சிக்கவேண்டிய ஸந்தர்ப்பம் விளைந்ததையும், அதனால் தத்துவ முணர்ந்து உணர்த்தலானதையும் பலகால் விவரித் தெழுதியிருக்கிறேன். இங்குச் சுருக்கமாக வெழுதுகிறேன். ராமாநுஜாபாத்ரம், நமோ ராமாநுஜார்யாய, வாழிகள், பிள்ளை யந்தாதி, பிரபந்தஸாரம், ப்ரபந்தாநுஸந்தான தீபிகை, வடகலை குருபரம்பராப்ரபாவம் என்னுமிவை யேழையும் இளம்பிராயத்திலேயே அடியேனறிவேன். 'நம்ம ஸம்ப்ரதாயத்தில் நாம் வைத்துக் கொண்டிருப்பதுபோல அவர்கள் ஸம்பிரதாயத்திற்கு இவை' என்றே ஸஹஜமாக நினைத்திருந்தேன். இப்படியிருக்கையில் ராமாநுஜபாரந்ரோத்ஸவ மென்று ஒன்று முளைத்தது. பரம கம்பீரமாய் எங்கும் பங்கப்படாததான ஸ்ரீமாந் வேங்கடதனியனிருக்க, அதற்கொன்றுமில்லாமல் இதற்கென்ன வந்ததென்று கீர்த்தி மூர்த்தியான நாவல்பாக்கம் ஸ்வாமி ஸாதிக்கவே இந்த விசாரம் என்னுள் ளத்தில் குடிபுகுந்தது. அதற்குமேல் கோயில் திருமலை பெருமாள் கோயில் வ்ய வஹார விஷயங்களையும் விமர்சிக்க ப்ராப்தமாயிற்று.

53. ஆஸ்திககாமணிகளே! இதைப் பாரதமாக வளர்த்தாமல் இதோ நாலெட்டு வரிகளில் முடித்து விடுகிறேன். வாழி திருநாமத்தில் ஸ்ரீசைலேசதயா பாத்ரத்தனியனுக்கு முன்னே மணவாளமாமுனிகளின் ஆசார்யருடைய தனியன் *நம: ஸ்ரீசைலநாதாய* என்பது அநுஸந்திப்பது. அது ஸகல பரம்பரைகளிலும் ஒரே விதம். அந்த ஸ்தானத்தில் தேசிகனுடைய ஆசார்யருக்கு இவர்கள் இயலில் சொல்லிவரும் தனியன் *நமோ ராமாநுஜார்யாய* என்பது. அது உண்மைத் தனிய னன்று என்பதை யாவருமறிவர். இந்த ச்லோகம் எப்போது செய்யப்பட்டது? யாரால் ஸாதிக்கப்பட்டது? ஸ்வாமி ஸாதித்த மஹா கம்பீரமான வேறு தனிய னிருக்க இது எதற்காகச் செய்யப்பட்டது? என்று பல வருடங்களாகப் பல மஹான் களையும் கேட்டு வருகிறேன். அடியேனுடைய ஏழெட்டு நூல்களில் இதைப்பற்றி வலிதாக எழுதியுமிருக்கிறேன். "வ்ருச்சிக தஷ்டமலிம்லுசவத் இருக்கின்றீர்களே" என்று கூட வெழுதியிருக்கிறேன். இதற்கு ப்ராமாணிகமான விடை என்றைக்கு வெளி வந்தாலும் "அடியேனுடைய துர்வாதங்களை க்ஷமிப்பது" என்று விஜ்ஞாபித்து அஞ்சலிபந்தத்தோடு விச்ராந்தனுவேன். சாரீரகமீமாம்ஸையில் முதலத்யாயத்தின் முடிவான ஸூத்ரம் *ஏதேந ஸர்வே வ்யாக்யாதா:* என்பது. அதையே இங்கு அநுஸந் தித்து நிற்கிறேன்.

இதற்கு விடைகூற வேண்டா; அவரவர்கள் சிந்தைசெய்வதே போதுமானது.

54. "அடியார்கள் வாழ அரங்கநகர்வாழ, சடகோபன் தண்டமிழ் நூல் வாழ" என்னும் வெண்பாவுக்குப் பிரதியாக "நானிலமுந்தான் வாழ நான்மறைகள் தாம்வாழ, மாநகரில் மாறன் மறைவாழ" என்கிற வெண்பா வெளி வந்துளது. மாறன்மறையாகிய திருவாய்மொழி மாநகரில்வாழ என்கிறது இதில். மாநகர் என்பது எது? திருவாய்மொழியில் "தென் திருப்பேரெயில் மாநகரே" என்றுள்ள தனால் ஆழ்வார் திருநகரி ஸமீபத்திலுள்ள தென்திருப்பேரைக்கே மாநகரென்று திருநாமமுண்டு. அவ்விடத்திலா மாறன் மறைவாழ வேணும்? ஸர்வதேச தசா காலேஷு" என்றாப்போலே உலகமெங்கும் வாழ வென்று ஆசாஸிக்க வேண்டாவா? ஏற்கெனவே *அரங்கநகர்வாழ* என்பது ப்ரஸித்தமாய்விட்டபடியால் அதை ப்ரஸ்தாவிக்க முடியாமற்போனாலும் "மாநிலத்தில் மாறன்மறைவாழ" என்ன லாமே. ஏதோவொரு நகரை உத்தேசித்துத்தானே 'மாநகரில்' என்கிறீர்கள்.

அந்நகர் இன்னதென்று பக்தர்கள் தெரிந்துகொள்ள வேண்டாவா? தத்துவத்தை நாம் தெரிந்துகொண்டே யிருக்கிறோம். ஸூத்யர்கள் தெரிந்துகொள்ளச்செய்வது நன்று. இங்ஙனே ஒவ்வொன்றும் கற்பனைக்குக் கைவிளக்கு.

55. காரண விசேஷத்தால் பிரபல்மான ஸ்பர்த்தை யேற்பட்டு * அந்யமிந்த்ரம் கரிஷ்யாமி போலே கல்பித்தவற்றை இவர்கள் இன்றாக விடுவதென்றால் இது ஸாத்யமா? ஸம்பாவிதமா? இனி யொருகாலும் விடார்களென்பதறிவேன்.

56. ஸ்வாமி ஸாதித்த ஸம்ப்ரதாய பரிசுத்தி முதலான ரஹஸ்ய க்ரந்தங்களில் ஆதிமத்யாவஸானங்களில் சுலோகங்களும் பாட்டுக்களுமுள்ளன. அந்த சுலோகங்கள் எப்படி தனிப்பட்ட பிரபந்தங்களல்லவோ, அப்படியே பாட்டுக்களும் தனிப் பிரபந்தங்களல்ல வென்பது சிலாலிகிதம். "அவை தனிப் பிரபந்தங்களாகவும் தொன்றுதொட்டு விளங்கி வருகின்றன" என்பது ஹாஸாஸ்பதம் கேவலம். கோவில் சண்டை தோன்றுவதற்கு முன்பு ஸ்வாமிதேசிகனை இல்லையென்றே யறியா திருந்த வகுப்பினர் 'தொன்றுதொட்டு' என்றெழுதுவது பாமரவஞ்சனை மட்டு மன்றே. ஆத்ம வஞ்சனையுமல்லவா? ப்ரமாணிகர்கட்டு இதில் ஸந்தேஹமுண்டோ?

57. அடுத்தபடியான வார்த்தை "ஸ்ரீ தேசிகன் அர்ச்சை வடிவில் எழுந்தருளியிருக்கும் பாக்கியம் பெற்ற எல்லாத் திவ்விய தேசங்களிலும் விசேஷமாய் திருநக்ஷத்திர தினங்களிலும் அநுஸந்திக்கப்படுகிறது" என்பது. கோயில் திருமலை பெருமாள் கோயிலென்று ப்ரஸித்தமான திவ்ய தேசங்களிலும் திருவவதார ஸ்தலமான திருத்தண்காவிலும் நீதிமன்றங்கள் மூலமாக வாய்ப்பூட்டு போட்டிருப்பது த்ரிஜகத் ப்ரஸித்தமாயிருக்க இங்ஙனே யெழுதி அழகு பார்த்துக்கொள்வதில் என்ன லாபமோ அறியோம்.

58. திருத்தண்காவின் ப்ராந்தத்தில் (விளக்கொளிவாசலில்) புதிய நிர்மாணமான பரகால மடத்திலும் ஸ்ரீரங்கராஜ வீதி நூதன ஸந்நிதியிலும்; இங்ஙனே ஆங்காங்கு (கி. பி. இருபதாம் நூற்றாண்டில்) நூதன நிர்மாணமான ஸந்நிதிகளிலும் சொல்லப்பட்டு வருகிறதென்றால் இதை யாரே மறுப்பார்? நைஷதத்தில் சந்த்ரோபாலம்ப கட்டத்தில் "அநுபமம் வசஸா ஸகி! லும்பஸி" என்றதுதான் நினைவுக்கு வருகிறது.

59. அப்படி தொன்றுதொட்டு வந்திருக்குமாயின் அநாதிதிவ்யப்ரபந்தாதிகாரிகள் வாக்கிலன்றோ வந்திருக்கும். அடியேனுடைய "வரதன் ஸந்நிதி வரலாறு" என்னும் நூலிலும் பரமார்த்த பூஷணம் முதலான மற்றும் பல நூல்களிலும் முடிந்துபோன சர்ச்சைகளன்றோ இவை.

60. "இராமானுச நூற்றந்தாதி நாலாயிரத்தில் சேர்ந்ததென்று ஒரு சாரார்; சேராததென்று ஒரு சாரார்" என்பது ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டியில் பரிமாறும் வார்த்தையன்று. கண்ணிநுண் சிறுத்தாம்பு நாலாயிரத்தில் சேர்ந்ததானால் நூற்றந்தாதியும் அத்தகைத்தே. திருக்கார்த்திகைக்குப் பிறகு கொள்ளும் அதத்யயனக்ரமம் நூற்றந்தாதிக்கும் நிர்விசேஷமானதே.

61. திருமடல்களைப்பற்றி இன்னமுமா மருள்? பூருவாசாரியர்களில் ஒருவரும் திருமடல்களில் பாசுரப் பகுப்பு செய்தது கிடையாது. திருவெழுகூற்றிருக்கை போலவே திருமடல்களையும் ஒவ்வொரு பாட்டாகத்தான் பூருவாசாரியர்களனைவரும் ஒருமிடறாகக் கொண்டிருந்தார்களென்பதில் ஸந்தேஹ லவலேசமும் வேண்டா.

62. உண்மையில் ஸ்வாமி ப்ரபந்தஸாரம் பணித்திருந்து அதுதன்னில் திருமடல்களைப் பல பாட்டுக்களாகப் பிரித்துமிருந்தால் அது பூர்வாசார்ய பரம்பரா ப்ராப்தமான ப்ரணாளியாகத்தானிருக்கும்; அதற்கு மாறாக முன்னோர்கள் யாரும் அபிப்பிராயங்கொள்ள அவகாசமேயிராது. ஆகவே திருமடல் விசாரம் ஸர்வாத்மநா அஸம்பத்தம்.

63. திருவந்தாதிகள், திருச்சந்தவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, அமலனாதிபிரான், திருவெழுகூற்றிருக்கை, திருமடல்கள், இராமாநுச நூற்றந்தாதி ஆகிய இவற்றில் இன்னாரருளிச்செய்ததென்று திருநாமக் குறிப்பு இல்லாதிருக்கவும் முன்னோர் சொல்லிவந்ததை மீறி தேசிகன் சொன்னதுண்டோ? மாஸ நக்ஷத்ர ஸ்தலங்களைத் தான் மாற்றினதுண்டோ? பெரியவாச்சான்பிள்ளையருளிச்செய்த அர்த்தங்களை ரேகாமாத்ரமாவது அதிலங்கித்ததுண்டோ?

64. ஆறாயிரப்படியில் பிள்ளானருளிச்செய்த அர்த்தங்களையுங் கண்ணெடுத்துப் பாராமலன்றோ பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த அர்த்தங்களையே ஆதரித்துப்போருகிறார் ஸ்வாமி. இதெல்லாம் ப்ரதிஜ்ஞாமாத்ரமேயன்றே, ஒவ்வொன்றிலும் விபுலவிவரணமன்றோ காட்டியிருக்கிறேன். *வாஸுதேவக்ருஹம் த்வேகம் ந ப்லாவயதி ஸாகர:* என்றாப்போலே பிரளயத்திலுமழியாவே அடியேனுடைய நிரூபணங்கள்.

65. சில திவ்யப் பிரபந்தங்களில் பௌர்வாபர்யத்தில் விசாரமிருப்பதாக வெழுதுவதும் அஸங்கதம். இத்தகைய விஷயங்களில் தேசிகன் தமக்கென்று தனியேயொரு கொள்கையைக் கொள்பவரேயல்லர். அவர் செய்யாததைச் செய்ததாக வைப்பதும், 'அவரபிப்ராய மப்படி, இவரபிப்ராய மிப்படி' என்பதும் ஸ்வாமிக்கு அவத்யமேயொழியப் பெருமையன்று.

66. முக்கியமாக இதனைக் குறிக்கொண்மின். ஆழ்வார்களின் திவ்யப்ரபந்தங்களிலோ பூர்வாசாரியர்களின் திவ்ய க்ரந்தங்களிலோ பௌர்வாபர்யத்தை ஸ்வாமியின் திருவாக்கைக்கொண்டு நிர்ணயிக்கவேமுடியாது. ஏனெனில்; குருபரம்பரா ஸாரத்தில் ஆளவந்தாருடைய திவ்ய க்ரந்தங்களின் பரிகணனையில் "...ஸ்தோத்ரமும் சதுச்ச்லோகியும் ஆக எட்டு" என்றருளியுள்ளார். இதனால் ஸ்தோத்ரரத்னம் சதுச்ச்லோகிக்கு முற்பட்டதென்று நிஸ்ஸந்தேஹமாக விளங்குகிறது. ஸ்வாமி தாமே சதுச்ச்லோகீபாஷ்யத்தின் முடிவில் *ஸ்தோத்ரே ஸந்தர்சயிஷ்யதி* என்கையாலே சதுச்ச்லோகிக்குப் பிற்பட்டது ஸ்தோத்ரமென்று ஸ்பஷ்டமாகிறது. எதைத்தள்ளி எதைக் கொள்வது?

67. அன்றியும் அந்த குருபரம்பராஸாரத்திலேயே எம்பெருமானாருடைய திவ்ய க்ரந்த பரிகணனை பண்ணுமிடத்து—"இவரருளிச் செய்த ப்ரபந்தங்கள் ஸ்ரீபாஷ்யம் தீபம் ஸாரம் வேதார்த்த ஸங்க்ரஹம்.....ஆக ஒன்பது" என்கிறார்.

இத்தால் ஸ்ரீபாஷ்ய தீப ஸாரங்கள்தாம் முற்பட்டவையென்று ஸ்பஷ்டமாகிறது. ஸ்ரீபாஷ்யத்தில் ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் மஹாஸித்தாந்தத்தின் கடைப் பகுதியில் "அயமர்த்தோ வேதார்த்தஸங்க்ரஹே ஸமர்த்தித:" என்று ஸ்ரீ பாஷ்யத்திற்கும் முற்பட்டதாக வேதார்த்த ஸங்க்ரஹத்தை பாஷ்யகாரர் தாமே அறுதியிடுகிறார். எதைக் கொள்ளுகிறீரென்று கேட்டால் திசைதோறும் விழிக்கவேணும். ப்ராமாணி கராயிருந்து விடையிறுப்பதானால் இவர் கையாலெழுதித் தீரவேண்டியதாவது.

"தேசிகனுக்குப் பூர்வாசார்ய க்ரந்தங்களின் பௌர்வாபாயத்தை நிர்ணயிப்ப தில் நோக்கில்லை; இன்னின்ன க்ரந்தங்களென்று நிர்தேசிப்பதில் மட்டுமே நோக்கு. (என்றோ; அல்லது) பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தி விருத்தமாகவும் ஸ்வோக்தி விருத்தமாகவும் பணிப்பதே எங்கள் தேசிகனுக்குப் பணி" என்று.

ஆளவந்தார் ஸ்ரீஸூக்திக்ரமவிஷயத்திலே ஸ்வோக்தி விரோதமும், ஸ்ரீபாஷ்யகார ஸ்ரீஸூக்திக்ரம விஷயத்திலே ஸ்ரீபாஷ்யகாரஸூக்தி விரோதமும் கையிலங்கு நெல்லிக் கனியாகக் காட்டினேனாகையாலே.

68. இனி இவர் "திருநெடுந்தாண்டகம் சரமப்ரபந்தமென்று பெரியவாச் சான்பிள்ளை யபிப்ராயம்; அது மூன்றாவது பிரபந்தமென்று நம் தேசிக வள்ளலின் ஸ்ரீ திருவுள்ளம்" என்றெழுதவோ சொல்லவோ கனவிலும் நினையாரென்றதாயிற்று.

69. ஆசார்யனென்று பொதுவாகப் பொருள் தரும் சொல் ஈரரசு படாதபடி தமக்கே பொருந்தும் முறையில்" என்று இதையே பல்லவி அநுபல்லவி எல்லாமு மாகப் பாடிக்கொண்டிருக்கலாமிவர். இவர்களது நவீந ஸங்கேதத்தை இவர்களே மெச்சவேண்டுமத்தனை. *ஸ்ரீமாந்வேங்கட தனியனில் 'வேதாந்தாசார்யவர்ய:' என்றுதானுள்ளது. *கவிதார்க்கிக ஸிம்ஹாயவிலும் வேதாந்த குருவென்று தானுள்ளது.

70. ஸ்வாமி தம் திருவாக்காலும் "வேதாந்தாசார்யஸம்ஜ்ஞோம் அவஹித பஹுவித்ஸார்த்த மந்வர்த்தயாமி,' என்கிறார். ஸ்வாமிக்கு எத்தனை பெருமை பகர்ந் தாலும் போதாது. *வைபவாநாம் அமேயாநாம் அத்விதீயோ மஹாநிதி:, ஏக ஏவ மஹாசார்யோ வேதாந்தார்யோ மஹீதலே.* என்று எழுதிவைத்திருப்பவன் அடியேனன்றோ? அவருடைய ஸ்ரீஸூக்திகளுக்கு ஸர்வப்ரகாரத்தாலும் முரண் பட்ட மதத்தைக் கைப்பற்றி நின்று விதண்டாவாதங்களையே வளர்த்திப்போரும் இவரைச்சேர்ந்தவர்களுக்கு எத்தனை காலமுமெத்தனை ஸூரியும் வாதாடினாலும் பங்கமேயொழிய வேறொன்றும் காணமுடியாதென்பதை ஐம்பது வருடமாகக் கண்டுவருகின்றதுலகம். இவரைப் போன்ற நவீனர்களின் கொள்கைகள் ஸர்வாத் மநா தேசிகஸூக்தி விருத்தங்களென்பதற்கு ஒரு சிறு கண்ணாடி இதோ காண்மின். பலகால் பல நூல்களில் அடியேன் விரித்துரைத்தவற்றின் ஸாரஸங்க்ரஹம்.

71. "மோக்ஷப்ரதே பகவதி முமுக்ஷூணாம் கடகதயா ஏஷா திஷ்டதீதி ஸர்வஸம்மதம்" என்ற சதுச்ச்லோகீபாஷ்ய ஸூக்தி விருத்தமாகப் பிராட்டியும் மோக்ஷப்ரதையென்று ஹடம்பிடிப்பது.

72. "இயம் கேவல—இத்யாதி நியாயஸித்தாஞ்ஜன காரிகையில் "ஸ்வ ஹேதுத்வநியம் ருந்தே கிம் புநஸ் ஸஹகாரிணும்" என்றும், கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷையில் "நாஸ்ய ஸ்வவ்யாபாரே மோக்ஷோபாயதாபுத்திரபி ஸ்யாதிதி பாவ:" என்றும் எழுதிவைத்திருப்பதற்கு முரணுக ப்ரபத்த்யுபாயத்வவாதம்.

73. நியாயஸித்தாஞ்ஜனத்தில் *ச்ருதேஸ்து சப்த மூலத்வாத்* என்கிற ப்ரஹ்மஸூத்ரத்தைக் காட்டி "அதோ யதாகமம் ஸர்வத்ர பூர்ண ஏவ பகவாந்"

என்று எம்பெருமானுக்கு வஸ்துதோறும் பரிஸமாப்யவர்த்தனத்தை நிலைநாட்டி யெழுதியிருந்தும் அதற்கு முரணாகவே பேசிக்கொண்டுகிடப்பது.

74. ரஹஸ்யத்ரய ஸாரத்திலும் சரணாகதிகத்ய பாஷ்யாவஸானத்திலும் "ஸதாசார்ய விஷயிகாரத்தாலே த்வயோச்சாரணா நுச்சாரணத்தாலே ப்ரபத்தி யனுஷ்டானம் பிறந்தபின்பு" என்றருளிச் செய்திருப்பதற்கு முரணாக ஸமாச்ரயணாசார்யனைத்தள்ளி யுதைத்திட்டு வேறொருவரைத் தேடியோடுவது.

75. சரணாகதி தீபிகையில் "ஸ்வேநைவ க்லுப்தமபதேச மவேக்ஷமாண:" என்றும், பரமபதஸோபானாதிகளிலே "யாத்ருச்சிகம் ப்ராஸங்கிகம் ஆநுஷங்கிகம்..." என்றுமருளிச் செய்துள்ளவற்றுக்கு முரணாக வாதிப்பது.

76. நியாஸதிலகத்தில் "த்வய்யேகஸ்மிந்நபி விஜஹதோ முக்தவத் ஸாதநத்வம்" என்று எம்பெருமானிடத்திலுங்கூட உபாயத்வவ்யபதேசம் ஹேயம் என்று காட்டியருளியிருப்பதற்கு முரணாக ஸ்வகீய அல்பசங்கா குருசங்காபரிஹாராதிகளுக்கும் உபாயத்வ வாதம் பண்ணிப் போருவது. அந்தோ! அந்தோ!

77. பிள்ளை லோகாசாரியர் "ஸ்ருஷ்ட்யவதாராதி முகத்தாலே பண்ணின க்ருஷிபலம்" என்றருளிய ஸ்ரீஸூக்தியையே கொண்டு "நிதாநம் தத்ராபி ஸ்வயம் அகிலநிர்மாண நிபுண:" என்று ரஹஸ்யத்ரயஸாரத்தில் சிலாலிகிதம் செய்திருப்பதற்கு முரணாகப் பேசிக்கொண்டு கிடப்பது.

78. "லக்ஷ்மணமுநேர் பவதா விதீர்ணம் வரம் ச்ருத்வா ததநுபந்தமதாவலிப்தே மயி" என்று ப்ரஸ்தாவித்த வரப்ரதானத்தை அபலபித்துவிட்டு 'தொப்பைக் கணபதி தொப்பைக் கணபதி!' என்று விழுந்துகிடப்பது.

79. "வைஷம்யநைர்க்ருண்யே ந, ஸாபேக்ஷத்வாத்" என்கிற ப்ரஹ்மஸூத்ரத்தை ஸாமாந்ய விஷயமாக்கி, தயாசதகத்திலே "நிஷாதாநாம் நேதா......அமீஷாம் நிம்நத்வம் வ்ருஷகிரிபதேருந்நதிமபி ப்ரபூதைஸ் ஸ்ரோதோபி: ப்ரஸபமநுகம்பே! ஸமயஸி" என்று விசேஷாதிகாரிகளிடத்துப் பரிமாற்றத்தைக் கல்லுங் கரையுமாறு சொல்லிவைத்திருந்தும் "வைஷம்யநைர்க்ருண்யம் ப்ரஸங்கிக்கும், ஸாவமுக்தி ப்ரஸங்கம்வரும்" என்று இதையே உருப்போட்டுக் கொண்டிருப்பது.

80. ரஹஸ்யத்ரயஸாரத்தில் "த்ராணே ஸ்வாமித்வமௌசித்யம் த்யாஸாத்யாஸ் ஸஹகாரிண:, ப்ரதாநஹேது: ஸ்வாதந்த்ர்ய விசிஷ்டா க்ருபா விபோ:" என்று, ஆசார்ய ஹ்ருதயத்தைச் சிரமேற்கொண்டு ஸாதித்தகாரிக்கைக்கு அல்லும் பகலும் கண்டனமேசெய்து போருவது.

81. தயாசதகத்தில் "அபராதசதைரபூர்ணகுக்ஷி:, ப்ரபலவ்ருஜிநப்ராப்ருத, ஆலிஹ்யதாந்நிரவசேஷமலப்த த்ருப்தி:" இத்யாதியாக ஸாதித்துள்ளவற்றைக் கண்டிக்குமளவேயன்றி, "கேசவன் தோஷபோக்யனும்" என்று பரிஹஸிப்பது.

82. பகவத்த்யாந ஸோபானத்தில்—"ரங்காஸ்தாநே ரஸிகமஹிதே ரஞ்ஜிதாசேஷசித்தே வித்வத்ஸேவா விமலமநஸா வேங்கடேசேந" என்றும், ஒரு ரஹஸ்யத்தின் முடிவில் "விசுத்ததேசிகவதா ரங்கதாம்நி" என்றும் எழுதிவைத்துத் தம்மை வீதகல்மஷமநஸ்கராகவும் விசுத்தாசார்ய ஸம்பந்தம் பெற்றவராகவும் உகந்து கூறியிருப்பதற்கு முரணாக அவரை ஸமலமநஸ்கராகவும் அசுத்த தேசிகவானாகவும் சொல்லிப்போருவது. இதெல்லாம் "நாண்பெரியோமல்லோம் நாம் நன்றும் தீதும் நமக்குரைப்பாருளரென்று நாடுவோமே" என்று அவர்தாமே பாடியிருப்பதாகக் கத்துவதோடு ஸர்வாத்மநா விருத்தம். இதி அலம் ப்ரேதசிரஸி சச்வத் ப்ரஹாரேண. ... ... ... ... ...

—: யதார்த்த ராமாநுஜனென்பத்திரண்டில் இரண்டாமெண்பத்திரண்டு முற்றிற்று :—

# திருமலையில் லக்ஷ்மீநாராயண க்ரது

## நிகழ்ச்சி விவரணம்.

இங்ஙனே மகுடமிட்டு ஏதோ எழுதவேணுமென்று நினைத்துத் தொடங்குகிறேன். என்ன எழுதுவதென்றே தோன்றவில்லை. 'ஆகாயத்தைப்பற்றி யெழுது, கடலைப்பற்றி எழுது' என்று ஒருவர் கட்டளையிட்டால் என்ன எழுதுவதென்று திகைத்து நிற்கவேண்டுமத்தனை யன்றோ? "ககநம் ககநாகாரம் ஸாகரஸ் ஸாகரோபம:" என்றுப்போலேதானே சொல்லிநிற்கவேண்டும். ஆயினும் சிறிது எழுத எழுகின்றேன்.

ஜகத்விக்க்யாத மஹாயசஸ்கரான ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி. ஸ்ரீமந் நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி திருமலையில் ஸ்ரீ லக்ஷ்மீநாராயணக்ரது வென்கிற அஷ்டோத்தர ஸஹஸ்ர குண்டஹோமக்ரதுவை நடத்தப்போகிறாரென்கிறவிஷயம் இரண்டு வருஷகாலமாகவே பிரபஞ்சம் முழுதும் பரவியது. இது சென்ற மார்ச்சு மாதத்தில் நடைபெறுவதாயிருந்து, முக்கியமான சில காரண விசேஷங்களினால் அப்போது நடைபெறாது நின்றிருந்து, இப்போது 28-6-72 முதல் 10-7-72 தேதியளவும் பன்னிரண்டுநாட்கள் நடைபெற்ற அதிசயத்தை உள்ளபடி யெடுத்துரைக்க ஸர்வசக்தனை திருவேங்கடமுடையானும் வல்லனல்லன் என்றால் இது அத்யுக்தியாகாது.

நியூஸ்பேபர் எனப்படுகிற ஸமாசார பத்திரிகைகளில் எழுதப்பெறும் ஸமாசாரங்கள் பெரும்பாலும் அந்தந்த பத்ரிகைகளின் மூலமாகவே அவரவர்கள் [பலபல நாட்டினர்] தெரிந்துகொள்ளவேண்டியதாயிருக்கும். இந்த மஹாயஜ்ஞத்தை நேரில் அநுபவித்து ஆனந்திக்கப் பெறுதவர்கள் யாரோ சிலரே யிருக்கக்கூடும். பெரியாழ்வார் "இமவந்தந் தொடங்கி இருங்கடலளவும்" என்று ஒரு வரையறை காட்டியுள்ளார். ஆளவந்தார் "ஆசைலாத் அத்ரிகந்யாசரணகிஸலயந்யாஸ தந்யோபகண்டாத் ஆரக்ஷோநீதஸீதாமுககமலஸமுல்லாஸ ஹேதோச் ச ஸேதோ:, ஆ ச ப்ராச்யப்ரதீச்ய க்ஷிதிதிநரயுகலாத் ஸூர்யசந்த்ராவதம்ஸாத்" என்று நாற்றிசைகளையு மடக்கிக் காட்டியுள்ளார். ஆக இந்த வரையறைக்கு உட்பட்ட நிலவுலகிலுள்ளாரில் இந்த ஸந்தர்ப்பத்தில் திருமலைக்கு வந்து ஸேவியாதவர்கள் கடல் சூழ்ந்த மண்ணுலகில் சிலரோ பலரோ இருக்கவுங்கூடுமாதலால் அவர்கள் திறத்துப் பயன்படுமாறு இஃது எழுதப்படுகின்றது. நேரில்வந்து ஸேவித்தவர்களுக்குங்கூட இது பயன்படுமென்றே நினைக்கிறேன்.

உலகில் அதிசயம்மிக்கவற்றைக் கண்டவர்கள், 'ந பூதோ ந பவிஷ்யதி' யென்பார் சிலர்; வாசாமகோசரம் என்பார் சிலர்; அவாங்மநஸ கோசரமென்பார் சிலர். மிகவற்புதம்! மிக வாச்சரிய மென்பார் சிலர். இங்ஙனே பலவகையான வாக்வைகரிகளை அறியாதாரில்லை. அவற்றுக்கு அர்த்தமிருக்கவேணுமானால் இங்கே தானுண்டு. பெரியாழ்வார் "நாவலம் பெரிய தீவினில் வாழும் நங்கைமீர்களிதோ ரற்புதங் கேளீர" என்றும் "புவியுள் நான்கண்டதோரற்புதங்கேளீர்!" என்று மருளிச்செய்தார். அந்த அற்புதங்களை நாம் கண்டதில்லை. 'கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்' என்று நம்மாழ்வார் வியந்துகூறிய காட்சியையும் நாம் கண்டிலோம். அதிசயக்காட்சி யென்றால் இதுவேயாகும்.

சென்னைப் பிரபல அட்வகேட். ஸ்ரீமதுபயவே. V. N. வெங்கடவரதார்சாரியர் ஸ்வாமி ஒருநாள் இந்த மஹாயஜ்ஞத்திற்கு எழுந்தருளியிருந்தார்; அவ்விடத்து அதிசயங்களைக்கண்டு அவர் ஸாதித்த வார்த்தை அடியேனுக்கு மிக வியப்பாக இருந்தது; (அதாவது) "இந்த நிகழ்ச்சிகளை நேரில் காணாதவர்களிடம் எடுத்துரைத்தால் ஒருவர்கூட நம்பமுடியாமலன்றோ இருக்கிறது" என்று. இது ஸத்யமானது.

"நடந்தது ஆச்சரியமன்று; இப்படி யிப்படி நடத்தவேணுமென்று ஜீயர் ஸ்வாமியின் ஹ்ருதயத்தில் தோன்றினதுண்டே, அதுதான் மிகமிக ஆச்சரியம்" என்றுதான் அடியேன் சொல்லுவது. உடனிருந்து காரியஞ் செய்தவர்கள் பலரிருந்தாலும் ஆலோசனைகள் முழுவதும் ஜீயர்ஸ்வாமி யொருவருடையதே, ஆயிரத்தெட்டு ஹோமகுண்டங்களென்று பெயர்; ஆயிரத் திருபத்தெட்டு ஹோமகுண்டங்களை யெண்ணினேன், ஒவ்வொரு குண்டத்தினருகிலும் யாஜமாந்யம் வஹிக்கும் தம்பதிகள் காலைவேளைகளில் நான்குமணி காலமும் இரவுவேளைகளில் மூன்றுமணி காலமும் அஞ்ஜலிபந்தத்தோடும் பக்தி ச்ரத்தையோடும் உட்கார்ந்திருந்த அதிசயம் மிகப் பெரிது. இந்த ஹோமகுண்டங்களுக்கெல்லாம் ஆஜ்யம் ஸமித்து முதலிய ஸாமக்ரிகளைத் தாமாதே சேகரிப்பதற்குச் செய்திருந்த ஏற்பாடுகளை என்னவென்று சொல்லுவது? கல்லும் முள்ளுமான இடங்களைச் செப்பனிட்டுச் சமமாக்கிக் குண்டங்களையும் வேதிகளையும் நிர்மாணம் செய்வித்து ஆங்காங்குத் திடமான பந்தல்கள் அமைத்து வழிகளையும் புதிதாக வுண்டாக்கி, கண்ணுக்கெட்டாதவிடங்களிலும் மின்சார விளக்குகள் இரவும் பகலும் ஜ்வலித்துக்கொண்டே யிருக்கும்படி செய்திருந்த பாங்குகளும் நெஞ்சால் நினைப்பரியன.

ருக்வேதம், க்ருஷ்ண யஜுஸ்' சுக்ல யஜுஸ், ஸாமம், அதர்வணம் ஆகிய வேதங்களில் ஸாங்காத்யாயிகள் தென்னாட்டிலும் வடநாட்டிலும் எத்தனைவருளரோ அத்தனைவரும் அங்குவந்து குழுமினர். ஆழ்வார் திருநகரி வானமாமலை திருக்குறுங்குடி முதல் வடதிருவேங்கடத்தளவும் திவ்யப்ரபந்த மோதின அத்யாபக ஸ்வாமிகள் அத்தனைவரும் எழுந்தருளியிருந்து மேலான திருமிடற்றோசையில் அருளிச்செயல் ஸேவித்த அழகு அந்யாத்ருசம். க்ருதயுகத்தில் ஸ்ரீகாஞ்சியில் பிரமன் நிகழ்த்திய அயமேத வேள்வியில் ஸாமகோஷம் மிக மேம்பட்டிருந்ததாக "ஸர்வேப்யோபி ஹி வேதேப்யஸ் ஸாமகோஷோ மஹாநபூத், அந்வகோஷயத் அத்யர்த்தம் தேந ப்ரஹ்மாண்ட மண்டப:" என்கிற புராணச்லோகத்தினால் அறிகிறோம். இந்த மஹாயஜ்ஞத்தில் ஸாமவேத பாராயணம் கேட்டபோதும்' ஸாமவேத ஸாரமான திருவாய்மொழி ஸேவை நடந்தபோதும் ஒவ்வொரு க்ஷணத்திலும் அடியேனுக்கு இந்த சுலோகமே நினைவில் வந்துகொண்டிருந்தது. இப்படிப்பட்ட பாராயண கோஷ்டிகளை ஜம்பூத்வீபே பாரதவர்ஷே பரதகண்டே எங்குங் கண்டறியோம். இனியுங் காணகில்லோம்.

இதிஹாஸ புராணபடன கோஷ்டியும் ஸ்ரீ பாஷ்ய பகவத்விஷய ஸ்ரீ வசன பூஷணாசார்யஹ்ருதயாத்யநுஸந்தான கோஷ்டியும் அதிவிலக்ஷணம். அவிலக்ஷணமானதொன்று இருந்தாலன்றோ 'இது விலக்ஷணம, இதுவும் விலக்ஷணம' என்று எழுதலாம். "சரணெள மதுரெள சரணம் மதுரம் மதுராச் சரணங்குலயோபி தச,

சரணுபரணுவலிகா மதுரா மதுராதிபதேரகிலம் மதுரம்'' என்றிங்ஙனே பத்து ச்லோகங்கள் வடமதுரையில் த்வாரகாநாதன் கோவிலில் கோஷிக்கக் கேட்டிருந்தேன். அதேபோல இந்த மஹாயஜ்ஞத்தில் ஒவ்வொன்றும் மதுரம்; பரம மதுரம்.

ஒருவிதமான யோக்யதையுமில்லாதவர்களையுங்கூட விடாமல் ஆதரிக்கத் திருவுள்ளங்கொண்டு ''ஸஹஸ்ரநாமம் சொல்லுவாரோடுகூட உட்கார்ந்திருங்கள்; கையை மூடிக்கொண்டு எதையாவது ஜபித்துக்கொண்டிருங்கள்'' என்று நியமித்து ஸத்கரித்ததைப் பார்த்தபோது, ஆசார்ய ஹ்ருதயத்தில் ''ஸர்வோபாய சூந்யர்க்கு இப்பத்தும் பாடியிடும் தெண்டனென்று கீதாசார்யனைப்போலே அதிகாராநு குணம் நெறியெல்லாமுரைக்கிறர் ஒன்பதாம்பத்தில்'' என்று ஸாதித்துள்ள ஸ்ரீஸூக்தி நினைவுக்குவந்து அதையும் ஒருநாள் அங்கு உபந்யஸித்தேன்.

நான்கு திசைகளிலும் வித்வான்களாகவும் வித்வத் வரிஷ்டர்களாகவுமுள்ளாரனைவரும் வந்து அங்குக் குழுமியிருந்தது மீண்டும் ஓரிடத்திலுங் காணமுடியா கண்காட்சி. காசி, கல்கத்தா, பாம்பே, அயோத்யா, அலஹாபாத் (ப்ரயாகை) உஜ்ஜயினி, புரீ ஜகன்னதம் முதலான ஊர்களில் பீடபதிகளென்றும் மடாதிபதிகளென்றும் மஹந்துக்களென்றும் ப்ரதிஷ்டிதர்களாக விளங்குபவர்களில் அங்குக் காணப்படாதவர்கள் மிகச்சிலரே. நேபாளதேசத்திலிருந்தும் ஸாளக்ராமக்ஷேத்ரத்திலிருந்துங்கூட பண்டிஜ்ஜீ எனப்படுபவர்கள் பலர் வந்திருந்தனர். கோடீச்வரர்களென விளங்கும் ஸேட்டுக்கள் வந்து குழுமியிருந்த விசித்திரம் மிகமிகவற்புதம். அவரவர்கள் ஸ்வரூபம் நிறம்பெறுவதற்கு ஸகல கோஷ்டிக்கும் ஒவ்வொரு வேளையிலும் தம்தம் சக்திக்கும் மனத்துக்கும் தக்கபடி தக்ஷிணை ஸமர்ப்பித்துவந்ததும் மிக வுகக்கத்தக்கதாயிருந்தது.

ததீயாராதன விஷயத்தை யெடுத்துக்கொண்டாலோ, தைத்திரீய ஆரண்யகத்தில் ''துர்ப்பிக்ஷம் தேவலோகேஷு'' என்ஞுதி யிருப்பதையே க்ஷணே க்ஷணே நினைக்கும்படி யிருந்தது. அதிசயோக்தி யில்லாமல் சொல்லுவதானல், திருவேங்கடமுடையானுடைய ஒருஸம்வத்ஸரத்திய போஜ்யாஸன நிவேதனங்களுக்கு எவ்வளவு செலவாகுமோ அவ்வளவு செலவு இந்தப் பன்னிரண்டு நாட்களில் ஆகியிருக்கிறதென்று நிஸ்ஸந்தேஹமாகச் சொல்லலாம். திருமலையில், பெரிய ஜீயர் ஸ்வாமி மடம், சிறிய ஜீயர் ஸ்மாமி மடம், அஹோபில மடம், பரகால மடம், ஆண்டவனுச்ரமம்.........என்றிப்படியுள்ளபலவிடங்களிலும், மற்றும் ஸ்மார்த்த மாத்வாதிகளுக்குப் புகலிடமான விடங்களிலும், மார்வாடிகள், உத்தராதிவைஷ்ணவர்கள் ஆந்த்ர ஸ்ரீவைஷ்ணவர்கள் வைச்யர்கள் பாகவதர்கள் ராஜாக்கள் ராணிகள் ஸேட்டுக்கள் ஜமீன்தாரிகள் முதலான பலபல வகுப்பினரின் விடுதிகளிலும் *அட்டுக் குவி சோற்றுப்பருப்பதமும் தயிர்வாவியும் நெய்யளறுமாக இருந்த அதிசயம் வாசாமகோசரம் என்னத்தகுமத்தனை. இதுவன்றியும் பரம வைதிகர்களாய் ஸ்வயம்பாகத்தை விரும்பினவர்களுக்கு யதேஷ்டமாக ஸாமக்ரிகள் கூடைகூடையாக அனுப்பப்பட்டு வந்தன. இந்த க்ரதுவில்

அந்வயமின்றிக்கே ஸேவார்த்திகளாக வந்தவர்களும் பதினாயிரக்கணக்கிலிருந்தனர். அவர்களும் உணவுக்கு வருந்தாதபடிக்கு மூலைமூலைகளில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்த மஹாயஜ்ஞத்திற்கு மொத்தச்செலவு ஐம்பதுலக்ஷம் ரூபாயென்று ஒரு திட்டமிட்டிருந்தார்கள். போஜன ஸம்விதான வகையில் மட்டும் அவ்வளவு செல்வாகி யிருக்குமென்று சொன்னால் இது அத்யுக்தியாகாது. போஜன வகையில் ஒவ்வோரிடத்திலுந் ம்ருஷ்டான்ன போஜனமே. வடை பாயஸமில்லாதவிடம் கிடையாது.

அதிகாரிகளில் மினிஸ்டர்கள், ஜட்ஜ்கள், கவர்னர்கள், கமிஷனர்கள் என்று சொல்லக்கூடிய உயர்பதவியாளர்கள் நூற்றுக்கணக்காக வருவதும் போவதுமாயிருந்தனர். ஸந்நிதி கோபுரத்திற்கெதிரேயுள்ள ஆயிரக்கால் மண்டபம் ஸுதர்மா என்கிற தேவ ஸபைக்கும் மேலாக தேவஸ்தானாதிகாரிகளால் மிக அற்புதமாகப் பரிஷ்கரிக்கப்பட்டிருந்தது. அவ்விடத்தில் தினப்படி பகல் 3 மணி முதல் 6 மணி வரையில் நானாபாஷைகளில் உபந்யாஸங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விதம் இணையற்றது. அந்த மண்டபத்தின் ஒரு பகுதியில் நாநாதேச முத்ரிதங்களான தார்சனிக க்ரந்தங்களுக்கெல்லாம் எக்ஸிபிஷன் அமைக்கப்பட்டிருந்தது கண்கொள்ளாக் காட்சி.

பலசொல்லி என்? திருவாய்மொழியில் "புகழுநல்லொருவனென்கோ என்று தொடங்கி எதைச் சொல்லுவேன் எதை விடுவேன் என்று ஆழ்வார் அலமந்தாப்போலவே அடியேனும் அலமருகின்றேன்.

தினந்தோறும் மாலைவேளைகளில் வேதவாத்ய கோஷங்களுடன் ஸ்ரீநிவாஸன் திருவீதி யெழுந்தருளி இரண்டு மணிகாலம் மஹோத்ஸவம் கண்டருளின விசேஷம். பக்தர்களின் பரமபாக்ய ஸர்வஸ்வம்.

எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளுக்கெல்லாம் தினந்தோறும் திருவேங்கடமுடையானுடைய ஸேவை சிரமமின்றிக் கிடைக்குமாறு ஜீயர் ஸ்வாமி செய்து வைத்திருந்ததைப் பலரும் போற்றினர்.

யஜ்ஞப்ரவர்த்தகரான ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிக்கு ஆழ்வானும் ஆண்டானும் போல. நியாயவேதாந்த வித்வானான T. K. கோபாலாசார்ய ஸ்வாமியும், கவிரத்னம் குதிமெள்ள ராமாநுஜாசார்யரும் மற்றும் சில ரிடையர்டு அதிகாரிகளும் கருத்தறிந்து காரியம் செய்பவர்கள் எப்போதுமேயுளர்; இந்த மஹாயஜ்ஞத்தில் விசேஷித்து, (கோயில்) ஸ்ரீ உ. வே. வித்வான் திருமலை அனந்தாண்பிள்ளை சதாபிஷேக கோவிந்த நரஸிம்ஹாசாரியர். அகரம் கந்தாடை (டில்லி) ராமாநுஜாசாரியர், B.A; திருவல்லிக்கேணி கொந்தமூர் ஸ்ரீநிவாஸாசாரியர் ஆகிய இம் மூவரும் வைதிக லௌகிக நிர்வாஹ துரந்தரர்களா யிருந்து வேள்வியைப் பரிமளிக்கச செய்தனர்.

எவ்வளவெழுதியும் த்ருப்திபெறாமலே நிற்கிறேன்.

—★—

ஸ்ரீ:

# சித்ரகவித்வமாக விஜ்ஞாபித்த சுலோகங்கள்

28—6—1972ல் திருமலையில் லக்ஷ்மீநாராயண மஹாயஜ்ஞத்தின் தொடக்கம். இந்த வருஷம் மாதம் தேதிகளில் காணும் லக்கங்களையிட்டு இந்த யஜ்ஞத்தையும் யஜ்ஞாராத்யனான திருவேங்கடமுடையானையும், யஜ்ஞநிர்வாஹகரான ஸ்ரீமத் ஜீயர் ஸ்வாமியையும் புகழ்ந்து கூறுவதை கீழ்வரும் சுலோகத்தில் ரஸிகர்கள் அநுபவிப்பது. சுலோகம் வருமாறு:—

> த்வந்த்வேஸ்மிந் ஸப்ததந்துர் நவநவதிஷணோந்மேஷ க்லுப்தோத்விதீய:
>
> ஷண்ணாம் சைலோத்தமாநாமுபரிவிலஸதோ வேங்கடேசஸ்ய த்ருப்த்யை,
>
> அஷ்டாபிர் லோகபாலைரபி மநஸி மநாகப்யசிந்த்யோப்ரமேய:
>
> த்வைதீயீகஸ்ய விஷ்ணோ: அமிதமதியதேரேஷ நிர்விக்நமிந்நாம்.

(இது சிறிது விவரிக்கப்படுகிறது.) வருஷத்தின் லக்கம் 1972 என்றுள்ளது. அதை 2791 என மாற்றிக் கவியியற்றுவது கவிமரபு. ஆகவே 2, 7, 9, 1 என்கிற லக்கங்களினடைவில் முதல் பாதம் அமைக்கப்பட்டுள்ளது. த்வந்த்வே 2, ஸப்ததந்து: 7, நவநவ 9, அத்விதீய: 1. (கருத்து) இந்த யஜ்ஞம் ஆனிமாதத்தில் நடைபெற்றது. அதற்கு மிதுன மாஸமென்று பெயர். த்வந்த்வம் என்றாலும் மிதுனமே. அஸ்மிந் த்வந்த்வே— இந்த ஆனி மாதத்தில் என்றதாயிற்று. இதனால் இரண்டு என்கிற லக்கம் ஸூசிதம். [ஸப்ததந்து:] "யஜ்ஞஸ் ஸவோத்வரோ யாகஸ் ஸப்ததந்துர் மக: க்ரது:" என்கிற அமரகோசத்தின்படி ஸப்ததந்துவென்று யாகத்திற்குப் பெயர். இதில் ஏழு என்கிற லக்கம் ஸூசிதம். [நவநவதிஷணோந்மேஷக்லுப்த:] இந்த யஜ்ஞத்தை ஸங்கல்பித்த ஸ்ரீமந்நாராயண ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி தமது இருபதாவது பிராயம் முதல் இப்படிப்பட்ட அதிமாநுஷக்ருத்யங்களைச் செய்து வருகிறார். ஒவ்வொரு க்ஷணத்திலும் அவருடைய மேதை புதிதுபுதிதான விகாஸத்தையடைந்து அதனால் இந்த விலக்ஷணமான வேள்வி ஸித்தித்ததென்றபடி. இதில் (நவ) ஒன்பது என்கிற லக்கம் ஸூசிதம். [அத்விதீய:] ஒப்பற்றது இந்த வேள்வி. எந்த யுகத்திலும் எந்த நாட்டிலும் எந்த ஸார்வபௌமனாலும் இத்தகைய வேள்வி நெஞ்சாலும் நினைக்கப்படவில்லையென்று அனைவரும் ஏககண்டமாகச் சொல்லும்படி நிகழ்ந்த இந்த யஜ்ஞம் அத்விதீயமென்னத் தட்டுண்டோ? அத்விதீய பதத்தினால் ஒன்று என்கிற லக்கம் ஸூசிதம். ஆக 1972 என்கிற வருஷ லக்கத்தை ஸூசிப்பிக்கும் வியாஜத்தினால் இந்த மஹாயஜ்ஞத்தின் பெருமை விளக்கப்பட்டதாயிற்று.

இனி (ஜூன்) மாதத்தின் லக்கமான ஆறு என்பதைக் காட்ட [ஷண்ணாம் சைலோத்தமாநாம் உபரி விலஸதோ வேங்கடேசஸ்ய த்ருப்த்யை] என்கிற இரண்டாவது பாதம் அமைக்கப்பட்டது. (இதில் ஷண்ணாமென்பதனாலே லக்கம் ஸூசிதம்.) திருவேங்கடமுடையான் ஏழுமலையானென்றும் ஸப்தகிரி நாதனென்றும் போற்றப் படுபவனாதலால் ஆறு மலைகளுக்குமேலே விளங்குகின்ற வேங்கடவனுடைய திருவுள்ளவுகப்புக்காகவே இந்த வேள்வி நிகழ்த்தப்படுகின்றதென்கை.

இனி இந்த யாகம் இருபத்தெட்டாந் தேதியன்று தொடங்கப்பட்டதென் பதைக் காட்டுவது மூன்ருவது பாதமும் நான்காவது பாதமும். எட்டு என்கிற லக்கத்தை முன்னேகாட்டி இரண்டென்கிற லக்கத்தைப் பின்னே காட்டவேணும். [அஷ்டாபிர் லோகபாலைரபி மநஸி மநாகபி அசிந்த்ய: அப்ரமேய:] ப்ரபஞ்ச நிர்வாஹார்த்தமாக பகவானுல் நியமிக்கப்பட்டவர்களாய் அபரிமித சக்திவாய்ந்தவர்களான அஷ்டதிக் பாலகர்களுக்கும் நெஞ்சாலும் நினைக்க வொண்ணுதது, அளவிடமுடியாத வைபவமுடையது இந்த வேள்வி யென்றபடி. இதில் எட்டு என்கிற லக்கம் ஸூசிதம். இனி இரண்டு என்கிற லக்கத்தை ஸூசிப்பிக்கிறது நான்காவது பாதம்.

[த்வைதீயிகஸ்ய விஷ்ணோரித்யாதி.] த்விதீய ஏவ த்வைதீயிக:. அமித மதியதே: என்கிற அடுத்த விசேஷ்யத்திற்கு இது விசேஷணம்: ஸ்ரீமஹாவிஷ்ணு ஒருவரேயென்று இதுவரை நினைத்திருந்தோம். ஸத்யகாமத்வமும் ஸத்யஸங்கல்பத்வமும் விஷ்ணுவுக்கு லக்ஷணம். அந்த விஷ்ணுவின் ஸத்யஸங்கல்பத்வத்தை நாம் சாஸ்த்ரமுகத்தாலே அறிகிருேமேயன்றிக் கட்கூடாகக் காண்கிருேமல்லோம். நம் ஜீயர் ஸ்வாமியின் ஸத்யஸங்கல்பத்வத்தை நாற்பது வருஷங்களுக்குமேலாக அறியுமுலகெல்லாம். ஆகவே, நம் ஜீயர் ஸ்வாமியை இரண்டாவது ஸ்ரீ மஹாவிஷ்ணுவென்று கொள்ளத் தட்டில்லை. [அமிதமதியதே:] "புத்திர் மநீஷா திஷணா தீ: ப்ரஜ்ஞா சேமுஷீ மதி:" என்ற அமரகோசத்தினுல் புத்தியும் மநீஷையும் திஷணையும் பர்யாயமெனினும் "ஸ்ம்ருதிர் வ்யதீதவிஷயா மதிராகாமிகோசரா, புத்திஸ்தாத்காலிகீ ப்ரோக்தா ப்ரஜ்ஞா த்ரைகாலிகீ மதா" என்ற விசேஷவசனத்தின்படி இனிமேல் வருவதையெல்லாம் அறியவல்ல புத்திவிசேஷத்திற்கு மதியென்று பெயர். ஸர்வேச்வரனுடைய புத்திக்குமெட்டாத மஹத்தான காரியத்தைத் தொடங்கும்போது இப்பெரிய காரியம் நிறைவேறுமாவென்று ஈஷத்தும் ஸந்தேஹியாமல், தம்முடைய மனேரதங்களுக்குமேலாக [ஸஹஸ்ரகுணமாக] நிறைவேறியே தீருமென்று பவிஷ்யத்ஜ்ஞான முடையவர் நம் ஜீயர் ஸ்வாமி; அதையிட்டு *அமிதமதியதே:* என்று இங்கு விஜ்ஞாபித்தபடி.

[ஏஷ நிர்விக்நம் இந்தாம்] ஏஷ ஸப்ததந்து:— இந்த லக்ஷ்மீநாராயண மஹாக்ரதுவானது, இடையூறின்றித் தலைக்கட்டி விளங்கவேணும். (இந்தீ—தீப்தௌ) என்கிற தாதுவில் லோட் ப்ரதமபுருஷைக வசனம். (தவர்க்க சதுர்த்தாக்ஷரம்.) நம் ஜீயர் ஸ்வாமி எது ஆரம்பித்தாலும் இடையூறென்பதற்கு ப்ரஸக்தியேயில்லையாயினும் லோகமர்யாதையின்படி இந்த ஆசம்ஸை.

[இந்த ச்லோகம் முதல் நாளிரவு திவ்யப்ரபந்த ஸேவா கோஷ்டியில் தமிழில் விவரித்து உபந்யஸிக்கப்பட்டது. மறுநாள் பகலில் ஆயிரக்கால் மண்டப ஸதஸ்ஸில் ஆந்திர பாஷையில் உபந்யஸிக்கப்பட்டது.] ... ... ...

(2) 10—7—72 தேதியன்று பூர்ணாஹுதி தினத்தில் விஜ்ஞாபிக்கப்பட்ட சித்ரகவித்வமும் காண்மின்.

ந கோபி பரிதாப்யபூத் அயநமுத்தரம் ஸத்கதே:
 ந ஸம்ஸ்ருதி நிதாகவாக் ந சஹி சுக்ரவார்த்தோதய:,
ஸிதேதரஹ்ருதாம் ரிபு: ஸததர்சநீய: க்ரது:
 யதீந்த்ரபரிதோப்ஜத்ருக் வ்ருஷபதேர் முதேகல்பதே.

இன்று, வைதிக கருமங்களுக்கு ஸங்கல்பம் செய்து கொள்ளும்போது, "பரிதாபிநாம ஸம்வத்ஸரே உத்தராயணே க்ரீஷ்மர்த்தௌ மிதுநமாஸே க்ருஷ்ணபக்ஷே அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ ஆர்த்ரா நக்ஷத்ரே ஸோமவாஸரே. என்று ஸங்கல்பம் செய்து கொள்வது முறையாதலால்—வருஷம் அயனம் ருது மாஸம் பக்ஷம் திதி நக்ஷத்திரம் கிழமை ஆகிய இவ்வெட்டும் (இன்று பூர்ணாஹுதி தினத்தில் ப்ராப்த மான அடைவிலே முத்ராலங்கார ரீதியில் இந்த ச்லோகம் அமைக்கப்பட்டது. இதுவும் சுருங்க விவரிக்கலாகிறது.

[ந கோபி பரிதாப்யபூத்] ஒருவர் யாகம் செய்தாலும் தவம் புரிந்தாலும் அஸுர ராக்ஷஸர்களுக்குப் பரிதாப முண்டாகி அதைக் கெடுக்க முயல்வதை இதிஹாஸங்களில் காண்கிறோம். விச்வாமித்ர முனியின் தவத்திலும் வேள்வியிலும் இது ப்ரஸித்தமன்றோ. "பாபபூரித தேஹாநாம் புண்ய கார்யமரோசகம், சர்மகண்டன பக்ஷ்யாணாம் சுநாம் க்ருதமரோசகம்." என்பர்கள். ப்ரக்ருத ஸஹஸ்ர குண்ட யஜ்ஞத்தில் ஒருவர்க்கும் ஒருவிதமான பரிதாபமும் விளையவில்லையென்பதை நிர்விக்ந பரிஸமாப்தியினால் அறிகிறோம்.

(இங்கு ஒரு விமர்சம்) நிகழும் ஆண்டின் பெயர் பரிதாபியென்று தமிழர் வழங்கினாலும் பரிதாவி யென்பதுதான் ஸாதுவானது. பிற நாடுகளில் இப்படித்தான் வழங்குவது. (தா) தவர்க்க சதுர்த்தம். ஓடுகிறவன் என்று பொருள். இங்கு (ந கோபி பரிதாவ்யபூத்) என்றும் நமக்கு விவக்ஷிதம். விச்வாமித்ர முனிவர் யாகம் பண்ணத்தொடங்கி இடையூறுகளை யகற்றத் தயரத மன்னவரிடம் ஓடி வந்தாரன்றோ? அப்படி இங்கு யாரும் ஓடிச்சென்று அரண்வேண்ட ப்ரஸக்தியில்லை யென்றவாறு.

[அயநமுத்தரம் ஸத்கதே:] இதனால் உத்தராயணம் ஸூசிதமாகிறது. "அயநம் வர்த்மமார்க்காத்வபந்தாந:" என்ற அமரகோசத்தின்படி அயநமென்பதற்கு வழியென்று பொருள். இந்த மஹாயஜ்ஞமானது நற்கதி சேர்விக்கும் மார்க்கமென்கை. இதைக் கண்டவர்களுக்கும் கேட்டவர்களுக்கும் நற்கதி கிடைப்பது திண்ணம்.

[ந ஸம்ஸ்ருதி நிதாகவாக்] *க்ரீஷ்ம ஊஷ்மக:, நிதாக:* என்ற அமரகோசத்தின்படி நிதாகமென்பதும் க்ரீஷ்மமென்பதும் பர்யாயம். இத்தால் ருது ஸூசிதமாயிற்று. இந்த மஹாயஜ்ஞத்தில் அந்வயித்திருந்த பன்னிரண்டு நாட்களிலும் ஒருவர்க்கும் ஸம்ஸாரதாபப் பேச்சே கிடையாது. *நோபஜநம் ஸ்மரந் இதம் சரீரம்* என்று உபநிஷத்து ஓதினாற்போலே ஸம்ஸாரத் தொல்லைகளை யெல்லாம் அவரவர்கள் அறவே மறந்தன்றோ திருமலையில் படுகாடுகிடந்தது.

[ந ச ஹி சுக்ரவார்த்தோ நப:] இதில் ஆனிமாதம் ஸூசிதமாகிறது. தைத்திரீய ஸம்ஹிதையில் முதற்காண்டம் நாலாம் ப்ரச்னத்தில் "மதுச் ச மாதவச் ச சுக்ரச் ச சுசிச் ச" இத்யாதி வாக்யமும், நாலாவது காண்டம் நாலாவது ப்ரச்நத்தில் "மதுச் ச மாதவச் ச வாஸந்திகாவ்ருதூ, சுக்ரச் ச சுசிச் ச க்ரைஷ்மாவ்ருதூ" இத்யாதி வாக்யமும் இங்கு ஸ்மரிக்கத் தக்கன. சித்திரை முதல் பங்குனியளவாகவுள்ள பன்னிரண்டு மாதங்களுக்கும் மது, மாதவ, சுக்ர, சுசீத்யாதிகள் வைதிக நாமங்கள்.

ஆகவே இங்கு சுக்ரபதத்தினால் ஆனிமாதம் ஸூசிதம். ப்ரஸ்துதார்த்தம் கேளீர். மஹாபலியஜ்ஞத்தில் குறட்பிரமசாரியான திருமால் சென்று "என்னுடைய பாதத்தால் யானளப்ப மூவடிமண் மன்னா! தருக வென்றிரந்தபோது அவனும் தரத் தொடங்குகையில் ''தக்கதிதன்றென்று தானம் விலக்கிய சுக்கிரன்'' என்று பெரியாழ்வார் அருளிச் செய்தபடி அஸுர குருவான சுக்கிரன்வந்து தானத்தை விலக்கிக் கண்ணிழந்தொழிந்தான் என்று கதையுள்ளது. இந்த மஹாயஜ்ஞத்தில் ஒவ்வொருவரும் கொடுக்க முற்பட்டனரேயொழிய தானம் விலக்கினாரொருவருமிலர்.

[ஸிதேதரஸ்ருதாம் ரிபு:] இதில் க்ருஷ்ணபக்ஷம் ஸூசிதமாகிறது. ஸிதம்-சுக்லம்; ததிதரம்—க்ருஷ்ணம். ப்ரஸ்துதார்த்தம் கேளீர்; ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் '' ந சலதி நிஜவர்ணதர்மதோ ய: ஸமமதிராத்மஸுஹ்ருத் விபக்ஷபக்ஷே...ஸிதமநஸம் தம் அவேஹி விஷ்ணுபக்தம்'' என்றும், திருப்பல்லாண்டில் "எந்நாவெள்ளுயிராக்க வல்ல" என்றும் கூறியபடி சுத்தமநஸ்கர்களன்றிக்கே தீயபுந்தியராயுள்ளவர்களுக்கு இந்த மஹாயஜ்ஞம் சத்துருவாயிருக்கும். அன்னவர்களை அருகே நாடவொட்டாமல் துரத்திவிடும், தொலைத்துவிடும் என்கை.

[ஸததநிர்வ்ருதிபாக் க்ரது:] இன்று அமாவஸ்யை நிர்வபதத்தினால் அது ஸூசிதமாயிற்று. 'இந்த மஹாயஜ்ஞம் இங்ஙனே வருஷந்தோறும் நடைபெறாதா?' என்றே ஒவ்வொருவர் வாக்கிலும் வந்ததனால் ஸததர்சநீயமான க்ரதுவிது.

[யதீந்த்ரபரித:] இன்று திருவாதிரை யாதலால் அது இதில் ஸூசிதம். யதீந்த்ரபம்—பவர்க்க சதுர்த்தமான (பம்) என்பது ''நக்ஷத்ரம் ருக்ஷம் பம் தாரா'' என்ற அமரகோசத்தின்படி நக்ஷத்ரவாசகம்., யதீந்த்ரருடைய பம் திருவாதிரை. ப்ரஸ்துதார்த்த மென்னென்னில்; பன்னிரண்டு யதிச்ரேஷ்டர்கள் நிறைந்திருக்கப்பெற்றது இந்த க்ரது. திருமலை திருப்பதி ஜீயர்ஸ்வாமிகளிருவர்; ஸ்ரீரங்கநாராயண ஜீயர் ஸ்வாமீ; காஞ்சி அழகியமணவாள ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி; ஸ்ரீ பெரும்பூதூர் எம்பார் ஜீயர் ஸ்வாமி. ஆந்திரதேசத்து யதிகள் இருவர். ஸ்ரீரங்கத்திலிருந்தும் காசியிலிருந்தும் வந்திருந்த ஔத்தராஹயதிகள் நால்வர். சிகரமாக எழுந்தருளியிருந்த ஸ்ரீமந்நாராயண ராமாநுஜ யதிராஜர். ஆகவே யதீந்த்ரபரித: க்ரது:.

[அப்ஜத்ருக்வ்ருஷபதேர் முதே கல்பதே.] அன்று திங்கட்கிழமையென்பதற்கு ஸூசகம் இது. ''அப்ஜோ ஜைவாத்ருகஸ் ஸோம:'' என்கிற அமரகோசத்தின்படி அப்ஜபதம் சந்த்ரவாசகம். ப்ரஸ்துதார்த்தமோ வென்னில், அப்ஜத்ருக்—செந்தாமரைக்கண்ணனை, வ்ருஷபதே: — திருவேங்கடமுடையானுடைய, முதே—திருவுள்ளவுகப்புக்கு, கல்பதே—உரித்தாயிருக்கின்றது இந்த வேள்வி. கல்பதே, கல்பதாம், அகல்பத என்று மூன்றுபடியாகவும் படிக்கலாம். திருவேங்கடமுடையானுக்குத் திருமங்கையாழ்வார் நான்கு பதிகங்கள் பாடினர். அவற்றுள் முதற் பாசுரத்தில் 'கொங்கலர்ந்த மலர்க்குருந்த மொசித்த......தாமரைக்கண்ணினன்'' என்கையாலே அதனை நோக்கியது இங்கு (அப்ஜத்ருக்) என்கிற ஸ்ரீவேங்கடேசபகவத் விசேஷணம்.

இந்த ச்லோகம் சாத்துமுறையன்று கோஷ்டியில் உபந்யஸிக்கப்பட்டது.

—: திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் :—